72
4592m211, N27Sm
N34.8.2
20844 2

# செங்குந்த மித்திரன்

(ஓர் உயரிய மாதாந்த வெளியீடு)

அரிய ஆராய்ச்சிக் கட்டுரைகள், அரசியல் அநுபவக் குறிப்புகள், உலக விநோதங்கள், விகடத் துணுக்குகள், சிறு கதைகள் நிறைந்து விளங்குவது.

### வருட சந்தா

உள்நாடு ரூ. 1—8—0 வெளிநாடு ரூ. 2—0—0

### சந்தாதாரர்களுக்கு

1. செங்குந்த மித்திரனுக்கு ஜனவரி மாதமே (தைமீ) வருட ஆரம்பமாதலால் சந்தாதாரர்கள் எந்த மாதத்தில் சேர்ந்தாலும் ஜனவரி முதலாகவே பத்திரிகைகள் அனுப்பப்படும்.

2. புதிதாகச் சந்தாதாரராய்ச் சேர்வோர் சந்தாத் தொகையை முன்னதாகச் செலுத்திவிட வேண்டும்.

3. சந்தாதாரர் விலாசம் மாறினால் சந்தா நெம்பரைக் குறித்து இங்லிஷ் மாதம் 10-ந் தேதிக்குள் தெரிவித்து விட வேண்டும்.

4. கடிதம் எழுதும்போதும், சந்தாத் தொகை அனுப்பும்போதும் தவறாமல் சந்தா நெம்பரைக் குறிப்பிடவேண்டும். பத்திரிகையின்மீது ஒட்டப்பட்டுள்ள விலாசத்திற்கு முன் குறிக்கப்பெற்றிருப்பதே சந்தா நெம்பராகும்.

### விளம்பர விகிதம்

5000-க்கு மேற்பட்ட சந்தாதாரர்களை யுடையதும், இந்தியா முழுவதும் மட்டுமன்றி இலங்கை, இரங்கூன், பினங்கு, தென்னாபிரிகா முதலிய வெளி நாடுகளிலும் சென்றுலவுவதுமாகிய உயர்ந்த தமிழ் மாதப் பத்திரிகை 'செங்குந்த மித்திர'னில் உடனே உங்கள் வியாபாரத்தைப்பற்றி விளம்பரஞ் செய்யுங்கள்.

ஒரு தடவைக்கு முழுப்பக்கம் ரூ. 8

அரைப்பக்கம் ரூ. 4 கால்பக்கம் ரூ. 2

மானேஜர், செங்குந்த மித்திரன் ஆபீஸ்,

பவழக்காரத் தெரு, [illegible]

# செங்குந்த மித்திரன்

தென்னிந்திய செங்குந்த மகாஜன சங்கத்தின்
மாத வெளியீடு

| தொகுதி—அ | ஸ்ரீமுகளு மாசிமீ | பகுதி உ |
|---|---|---|

## உள்ளடக்கம்

பத்திரிகாசிரியர் முன்னுரை ... 66
நினைவுக் குறிப்புகள் .... 68
விகடத் துணுக்குகள் ... 74
போட்டிப் பந்தயம் 2 முடிவு ... 75
நமது தபால் பெட்டி ... 76
சமர்ப்பயாமி .... 77
ஸ்ரீவேலாயுத முதலியார் உருவப் படத் திறப்பு ... 79
செங்குந்தர் ஐந்தாவது மகாநாடு ... 80
ஜப்பான் தேசத்து அற உரைகள் ... 81
மூன்றில் ஒன்று ... 83
ஸ்ரீகிருஷ்ணாவதாரத் தோல்வி ... 88
அதிசயம்! அற்புதம்! ஆச்சரியம்! ... 92
கதம்ப விநியோகம் ... 94
சுகாதாரப் பகுதி ... 95
தமிழர் மாண்பு ... 96
வந்துவிட்டதே கவனித்தீர்களா ? ... 99
வைத்தியப் பகுதி ... 102
சிறுவர் சிறு கதை ... 104
எனது ஜென்ம விரோதிகள் ... 106
செங்குந்த யாத்திரைவாசி .... 109
கிளர்ச்சி ... 114
மதிப்புரை ... 119
... 122

208412

# பத்திரிகாசிரியர் முன்னுரை

## கடவுள் வணக்கம்

இருவினைப் பிறவிக் கடல் மூழ்கி,
இடர்கள்பட் டலையப் புகுதாதே
திருவருட் கருணைப் ப்ரபையாலே,
திரமெனக் கதியைப் பெறுவேனோ
அரியயற் கறிதற் கரியானே,
அடியவர்க் கெளியற் புதநேயா
குருவெனச் சிவனுக் கருள்போதா,
கொடுமுடிக் குமரப் பெருமாளே.

(அருணகிரியார்)

## மகாநாட்டுத் தீர்மானங்களும் திட்டமும்

சென்ற இதழில் 'அதே கவலை எமக்கும் உண்டு' என்ற தலைப்பில் நமது ஐந்தாவது மகாநாடு விரைவில் நடைபெறுமென அன்பர்களுக்கு நாம் உறுதி கூறி யிருந்தோம். அதைப் படித்த வாசகர்கள் பலர் மகாநாட்டைப் பற்றிய முழு விவரமும அறிந்துகொள்ள அவாவுடையவர்களாய் நமக்குக் கடிதங்கள் எழுதி யிருக்கிறார்கள்.

மகாநாட்டின் வரவேற்புச் சபை அமைப்பதற்காகவும் மகாநாடு நடக்கும் இடம், காலம் முதலியவற்றைத் தீர்மானிப்பதற்காகவும் இம் மாசி மாதம் 12-ந் தேதி குடியேற்றத்தில் வடாற்காடு ஜில்லா செங்குந்தர்களின் கூட்டம் ஒன்று நடத்த ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிற தென்பதை மகிழ்ச்சியுடன் அறிவித்துக் கொள்ளுகிறோம். அது பற்றிய முழு விவரமும் மற்றொரு பக்கத்தில் வெளியிடப்பட் டிருக்கிறது. அக்கூட்டத்திற்கு வடாற்காடு ஜில்லா அன்பர்கள் திரண்டு வந்து மகாநாடு வெற்றியுடன் நடைபெறுவதற்கான விஷயங்களை யோசித்து முடிவு செய்யுமாறு வேண்டுகிறோம்.

மகாநாடு கூடியவரையில் ஆண்டுதோறும் நடைபெற வேண்டியது அவசியமாகும். ஒருவருக்கொருவர் சம்பந்தமின்றி பல்வேறிடங்களில் வாழ்ந்து வரும் குலாபிமானிகள் ஒருங்கு சேர்ந்து ஒருவரை யொருவர் அறிந்து குதூகலிப்பதற்கும், நம்மவர்களிடையே ஐக்கிய உணர்ச்சி ஓங்கி வளருவதற்கும், காலச் சக்கரத்தின் அதிவேகமான சுழற்சியில் சிக்கி நம்மவர்கள் நிலை தடுமாறிப் போகாதவாறு அவசியமான சீர்



திருத்த முறைகளை ஆராய்ந்து முடிவு செய்வதற்கும், பொதுவாக மகாநாடுகள் மிக அவசியமானவை எனச் சொல்லவேண்டியதில்லை. சமூகப் பற்று நிறைந்து ததும்பவேண்டிய மனக்குடத்தில் வேற்றுமையும் பிணக்குகளும் புகுந்து, ஒற்றுமை நீர் ஒரு சொட்டும் இல்லாதவாறு துடைத்துவரும் இக்காலத்தில், சமூக முன்னேற்ற ஆர்வத்தினையும், பெருங் கிளர்ச்சியினையும், ஆழ்ந்த நேச உணர்ச்சியினையும் ஒவ்வொருவரது உள்ளத்திலும் மகாநாடுகள் தோற்றுவித்திருக்கிற தென்பது எவரும் மறுக்க முடியாத உண்மை யாகும்.

இதுவரையில் நடைபெற்ற மகாநாடுகளால் என்ன பயன் விளைந்தது எனப் பலர் கேழ்க்கிறார்கள். ஆரம்பத்தில் எந்த இயக்கமும் தனது கொள்கைகளை அனைவருக்கும் உணர்த்துவதற்காகவும், தூங்கி விழும் மக்களைத் தட்டி எழுப்புவதற்காகவும், பெருங் கிளர்ச்சியை மக்கள் உள்ளத்தில் தோற்றுவிப்பதற்காகவுமே மகாநாடுகளை நடத்துவது வழக்கம். அதே முறையில் தான் நாமும் இதுவரை நான்கு மகாநாடுகளை நடத்தியிருக்கிறோம். தலைச்சங்கத்தின் திட்டங்களைத் தயக்கமின்றி ஏற்று நடக்கத்தக்க அபிமானிகளும், கிளைச் சங்கங்களும் ஆங்காங்கு தோன்றுகிற வரையில் மகாநாட்டுத் தீர்மானங்களைச் செயலில் புகுத்த முயல்வது வீண் செயலே யாகும். இதனைக் கருதியே தீர்மானங்களை அனுஷ்டானத்திற்குக் கொண்டு வருவதற்காக இதுவரை நமது மகாநாடுகளில் யாதொரு திட்டமும் வகுக்கவில்லை.

இப்போது மகாநாட்டுத் தீர்மானங்கள் சிறிது சிறிதாகக் கால் கொள்ளத் தொடங்கி யுள்ளன. ஒவ்வொரு ஊரிலும் முனைந்து வேலை செய்யக்கூடிய சமூகப்பற்று நிறைந்த குலாபிமானிகள் அநேகர் இப்போது நமது கண்களுக்குப் புலனாகின்றனர். இந்த சமயத்தில் திட்டங்கள் வகுக்க வேண்டியது இன்றியமையாத தாகும். எனவே, நமது ஐந்தாவது மகாநாட்டில் நிறைவேற்றுதற்குரிய தீர்மானங்களில் முக்கியமான இரண்டொன்றிற்கேனும் திட்டம் வகுக்க ஏற்பாடு செய்ய வேண்டுமென தலைச்சங்கத்தினரை வேண்டிக் கொள்ளுகிறோம்.

## கிளைச்சங்கங்கள் கவனிக்க வேண்டுகிறோம்

ஒவ்வொரு மகாநாட்டுச் சமயத்திலும் தலைச்சங்கத்தின் பொதுக்கூட்டம் நடை பெறுதலும், தலைச்சங்கத்தின் வருடாந்த அறிக்கை அக்கூட்டத்தில் சமர்ப்பிக்கப்பெறுதலும் வழக்கமா யிருந்து வருகின்றது. இதுவே சங்கத்தின் சட்ட

# நினைவுக் குறிப்புகள்

## நாலு காசு உண்டானால் !

“சர்வம் லட்சுமி மயம்”. லட்சுமியின் கிருபையைப் பெறுவதற்கே மக்கள் பலவித குட்டிக் கரணங்கள் அடிக்கிறார்கள். ஆனால், அவர்களை அவள் லட்சியம் செய்யாமல் அழையா வீட்டில் நுழையா சம்பந்தியாய்த் தானே வலியசென்று, விரும்பி அழைக்காத சிலரிடம் அவள் அடைக்கலம் புகுவதைப் பார்த்து உலகமே பிரமித்துப் போகிறது.

ருஷ்யாவில் பொது உடைமை ஆட்சி ஏற்பட்டது முதல் அதன் சக்கரம் திரும்பி விட்டது. அதிர்ஷ்ட சக்கரம் உச்சஸ்தானம் பெற்றிருக்கிறது. பொருளாதாரத் துறையில் அதிவேகமாய் ருஷ்யா முன்னேறு வதைப் பார்த்து எல்லா தேசங்களும் மனம் புழுங்குகின்றன.

‘ருஷ்யாவில் சரியான உணவு கிடையாது; பட்டினியால் பலர் வாடுகின்றனர்; ஏழைகளின் காட்சி அங்கு மிக அதிகம்; அதிக கடூரமான ஆட்சி அங்கே நடைபெறுகிறது; சரியான கல்வி போதிக்கப்படுவதில்லை’ என்பன போன்ற பொய்ப் பிரசாரத்தில் தேசங்களெல்லாம் தலையிட்டுப் பார்த்தன. அதனுலெல்லாம் பிள்ளை பிழைத்தபாடில்லை. ருஷ்யாவின் ஐந்து வருட திட்டம் வெற்றிகரமாகவே முடிந்துவிட்டது. மறு ஐந்து வருடத்திற்கு முன்னிலும் விசேடமான திட்டங்கள்

---

(பத்திரிகாசிரியர் முன்னுரை முன்பக்கத் தொடர்ச்சி)

திட்டமுமாகும். அதன்படி இவ்வாண்டு வழங்கப்போகும் அறிக்கையில் தலைச்சங்கத்தின் வேலைத் திட்டத்தைத் தெரிவிப்பதோடு, ஒவ்வொரு கிளைச்சங்கமும் ஆரம்ப முதல் இதுவரை செய்துள்ள வேலையையும், மற்றும் அதன் சம்பந்தமான ஏனைய விவரங்களையும், நிர்வாக உறுப்பினர்களின் பெயர்களையும் வெளியிட வேண்டுமென்ற எண்ணம் தோன்றி யுள்ளது. இது பற்றிய தனிக் கடிதங்கள் கிளைச்சங்கங்களுக்கு தலைச்சங்கத்தினரால் விரைவில் அனுப்பப்படுமெனத் தெரிகிறது. எனவே, ஆங்காங்குள்ள அன்பர்கள் தாமதமின்றி உறங்கிக் கிடக்கும் சங்கங்களைப் புதுப்பித்தும், சங்கங்களில்லாத கிராமத்தில் புதிதாகத் தோற்றுவித்தும் தொண்டாற்றுமாறு வேண்டுகிறோம்.



வகுக்கப்பட் டிருக்கிறது. லட்சுமியின் கிருபை ருஷ்யாவிற்குப் பூரணமாய்க் கிடைத்திருக்கும்போது பொய்ப் பிரசாரம் அதனை அசைக்க முடியுமா?

இப்போது எல்லாத் தேசங்களும் ருஷ்யாவின் மீது வைத்த கண்ணைத் திருப்பி எடுக்கவே இல்லை. தேசங்கள் ஒவ்வொன்றாக ருஷ்யாவின் தோளைத் தட்டிக் கொடுக்கின்றன. ‘அவர் என்ன, நேக்கு சொந்த பங்காளி யோன்னோ! ஒன்று விட்ட பங்காளி,’ என்ற உலக வழக்கத்தைக் கையாளத் தொடங்கி விட்டன. சில மாதங்களுக்கு முன் அமெரிக்கா ருஷ்யாவுடன் பங்காளி ஒப்பந்தம் செய்து கொண்டது. இப்போது இத்தாலி, ஜெர்மனி, பிரிட்டன் முதலியன உறவு கொண்டாட முனைந்துள்ளன. எல்லாம் நாலு காசு உண்டானால்..........

---

## முத்தண்ணாக்கள் போக்கு

சென்னை மந்திரிக் கட்சியின் போக்கு ஓர் தனிப்பட்ட கௌரவ முடையது. மற்றவர்களைத் தாழ்வாக நினைக்கிற குணம் அவர்களிடம் கிஞ்சித்தும் கிடையாது. ‘தரித்திர நாராயணனா யிருந்தாலும் நாம் ஏன் அதைச் சொல்ல வேண்டும்; அவனைக் குபேர சம்பத்துடையவன் எனச் சொல்வதால் நமக்கு வந்த நஷ்ட மென்ன? ஒருக்கால் லாபம் கிடைத்தாலும் கிடைக்கக் கூடும்’ என்ற ஓர் மேன்மையான கொள்கை யுடையவர்கள்.

சென்னை சட்ட சபையில் 100-க்கு 25 வீதமாவது நில வரியைக் குறைக்க வேண்டுமென ஸ்ரீ வி. டி. அரசு ஒரு தீர்மானம் கொண்டு வந்தார். விவசாயிகளின் தற்கால கஷ்டத்தையும், பொருளாதாரக் கஷ்டத்தால் தற்போது விவசாயிகள் அடைந்துள்ள மனவேதனையையும் எடுத்துக்காட்டி வரியைக் குறைக்க வேண்டியதின் அவசியத்தை வற்புறுத்தினார்கள். ஆனால், சர்க்கார் இவர்களைப் போல் கஞ்சத்தனத்தைக் காட்டிக்கொள்ள இஷ்டப்படவில்லை. எப்படியும் சென்னை மந்திரிகள் கொஞ்சம் தயாள முடையவர்கள்.

‘குடிகள் அவ்வளவு ஏழைகளல்ல. அவர்களிடம் பணம் இல்லை யென்று சொல்லி விடுவதற்கில்லை. தங்க நகைகள் பல இருக்கலாம். தங்கத்திற்கும் ஏராளமாய் கிராக்கி இருக்கிறது. அதோடு நாங்களும் அவர்களை, இனி அடியோடு தாங்கப் போகிறோம். விவசாயிகளின் நன்மைக்காகவே. கடன் மத்தியஸ்த மசோதாவை அடுத்த கூட்டத்தில் நிறைவேற்றப் போகிறோம். நெல், அரிசி முதலியவைகளுக்கு ரயில்வே கட்டணத்

தைக் குறைக்கப் போகிறோம். நன்செய் நிலத்தில் பலவகைப் பயிர்கள் உற்பத்தி செய்ய ஏற்பாடு செய்யப் போகிறோம். இன்னும் எவ்வளவோ நன்மைகள் செய்வதற்கு நாங்கள் காத்துக்கொண்டிருக்கும்போது எங்கள் மடியிலேயே கையைப் போடுவது நியாயமாகுமா” என்று சமாதானம் சொன்னார்களாம்.

இந்த சமாதானங்களெல்லாம் அங்கத்தினர்களின் மூளைக்குப் பெருந் திகிலை உண்டு பண்ணி விட்டதாம். ‘ஏழை விவசாயிகள் இருந்த இடம் தெரியாமல் போனபின் இந்த ஏற்பாடுகள் எதற்கு’ என்று கோபித்துக் கொண்டார்களாம். 100-க்கு 25 வீதம் வரியைக் குறைக்க வேண்டுமென்ற தீர்மானத்திற்குச் சாதகமாக கட்சி வித்தியாசங்களைச் சிறிதும் பாராட்டாமல் எல்லா கட்சியினருமாக 59-பேர் ஓட்டுக் கொடுத்து அதனை நிறைவேற்றி விட்டார்களாப். மந்திரிகளும் அவர்களின் தாசர்களும் மாத்திரம் விரோதமாக ஓட்டுத் தந்தனராம்.

தீர்மானம் நிறைவேறி விட்டதனாலேயே விவசாயிகளுக்கு நன்மை ஏற்பட்டு விட்டதாக நினைத்து விடவேண்டாம். எப்படியும் சர்க்காரின் கை மேல்கை என்பதை அவர்கள் கண்டிப்பாய் காட்டி விடுவார்கள். அதன் பிறகு மெஜாரிட்டியாக இருந்து தீர்மானத்தை நிறைவேற்றிய அங்கத்தினர்கள் என்ன செய்யப் போகிறார்கள். மேல் நாட்டில் ஏதாவதொரு தீர்மானத்தில் சர்க்கார் கட்சி தோல்வியுறுமானால் உடனே சர்க்கார் ராஜினாமா செய்வது வழக்கம். இந்தியாவின் வழக்கமோ இதற்கு முற்றும் மாறானது. அங்கத்தினர்கள் என்ன செய்யப் போகிறார்கள் என்பதை பொறுத்துப் பார்ப்போம்.

---

## விஸ்கி செய்த வேலை

பிரான்ஸ் தேசத்தில் ஒரு விநோத சம்பவம் நடந்திருக்கிறது. அங்கு உலகத்தையே திகைப்புறச் செய்த ஸ்டாவிஸ்கி என்ற ஒரு மோசக்காரர் இருந்தார். மிக்க ஏழையான அவர் தனது மோசடியினால் வரும் பொருளைக் கொண்டு ராஜ போகம் துய்த்து வந்தார். பல இன்சூரன்ஸ் கம்பெனிகள், முனிசிபல் பாங்கிகள் இவற்றில் மோசம் செய்து கோடிக்கணக்கான திரவியம் அவ்வப்போது பெற்று வந்தார். அரசாங்க அங்கத்தினர்களுக்கோ அன்றி கௌரவமான சீமான்களுக்கோ ஒரு நாள் தவறாமல் விருந்துகள் அளித்துக்கொண்டிருப்பார். கடந்த உலக மகா யுத்தத்தின் பின் இவர் பல முறை சிறைத்தண்டனை பெற்றிருக்கிறார். என்றாலும் அவரது மதிப்பில் ஒரு சிறிதும் குறையாமல் கடைசிவரையில் வாழ நேர்ந்தது ஓர் அதிர்ஷ்டமே



யாகும். அவர் தனது மோசடி சமீபத்தில் வெளியான உடன் தற்கொலை செய்து கொண்டார். இதனால் பிரஞ்சு மந்திரி சபையில் பிளவு ஏற்பட்டிருக்கிறதாம்.

போலீஸ் அதிகாரிகளும் மந்திரிகளில் சிலரும் விஸ்கியின் மோசடிக்குத் துணையிருந்தவர்களெனச் சந்தேகிக்கப் படுகிறது. அதன் பயனாய்ப் பாரிஸ் போலீஸ் இலாகாத் தலைவர் மிஸ்டர் சியாப்பியை மாற்ற அரசாங்கம் தீர்மானித்தது. அதை எதிர்த்து யுத்த மந்திரி, பொக்கிஷ மந்திரி முதலியோர் ராஜினாமாக் கொடுத்து விட்டனர். இப்போது புதிய மந்திரி சபை அமைப்பதற்கு முயற்சி நடைபெறுகிறது. ஸ்டாவிஸ்கியின் மோசடி அரசாங்கத்தையும் ஆட்டி விட்டது ஆச்சரியமே.

## ஆதிசேஷனின் ஆர்ப்பாட்டம்

1934-ம் ஆண்டை ஆதிசேஷன் எதிர்பார்த்திருந்தான். ஆண்டும் பிறந்தது. அவன் வலி தாங்க மாட்டாமல் இந்தப் பூமியை தோள் மாற்றிக்கொண்டான். அதனால் பீகார் மாகாண முழுதும் நிலை கலங்கிவிட்டது. மேடு பள்ளமாயிற்று. பள்ளம் மேடாயிற்று. ஆறு இருந்த இடம் தெரியவில்லை. இல்லாத இடத்தில் ஆறுகள் தோன்றி வெள்ளம் பெருகிற்று. தண்ணீருக்குப் பதிலாகக் கெந்தகநீர் ஓடியது. நேப்பாள முற்றும் தன் உருவழிந்து நாசமுற்றிருக்கிறது. அதன் தலை நகரமாகிய காட்மாண்டு உயிரற்ற நகரம்போல் விளங்குகின்றது. அங்குள்ள வீடுகளில் கால்பாகத்திற்கு மேல் இடிந்து பாழாய்க் கிடக்கின்றன. அந்நகரம் தனது மக்களில் மூவாயிரம் பேர்களுக்கு மேல் பறிகொடுத்துவிட்டது. முஸாபர் புரி, மாங்கீர், தர்பாங்கா முதலிய பெருத்த நகரங்களின் அழிவு சமீபத்தில் திருத்த முடியாததாக இருக்கிறது. மாங்கீர் நகரம் இது தானோ என்று ஐயுறும் நிலையில் அது இன்று விளங்குகிறது. ஐரோப்பியரின் இரண்டொரு வீடுகளைத் தவிர மற்ற வீடுகள் முழுதும் அங்கு நாசமாகிக் கிடக்கின்றன. அந்நகரத்தில் ஒருவருக்காவது இருக்க வீடு கிடையாது.

பீகார் மாகாணத்தில் ஒவ்வொரு நகரத்திலும் பூகம்ப அதிர்ச்சியினால் இடிந்த கட்டடங்களின் கீழே புதைந்து கிடக்கும் பிணங்களினின்றும் எழும் நாற்றம் வாயுபகவானைக் கலக்கிவிட்டது. நேபாள மகாராஜாவின் இரு ராஜ குமாரிகளும், ஆறு வேலைக்காரிகளும், மகாராஜாவின் அரண்மனை இடிந்து விழுந்ததால் மாண்டுபோயினர். மின்சார விசைகள் தடைபட்டிருப்பதால் முசாபர்புரி இருளடைந்திருக்கிறது. ஆகாயக்

கப்பல்கள் வட்டமிட்ட நகரங்களில் இப்போது கழுகுகள் பிண மோப்பத்திற்காக வட்டமிட்டுக்கொண் டிருக்கின்றன.

இந்த பூகம்பத்தால் கஷ்டப்படும் மக்களுக்கு உதவி செய்வதற்காக பல மேதாவிகள் பொருள் திரட்டி வருகிறார்கள். வைசராய் திரட்டும் நிதிக்கு இதுவரையில் 15 லட்சம் ரூபாய் வரையில் கிடைத்துள்ளது. ராஜேந்திரப் பிரசாத் திரட்டும் நிதியிலும் நான்கு லட்சம் வரையில் சேர்ந்திருக்கிறது. ஸ்ரீ ஜவஹர்லால் நேருவின் தலைமையில் ஓர் பெரும் நிதி திரட்டப் படுகிறது. பல செல்வந்தர்கள் லட்சலட்சமாக வழங்குகிறார்கள். ஸ்தல ஸ்தாபனங்களெல்லாம் பொருளுதவி செய்கின்றன. தங்கள் தங்கள் சக்திக்கேற்ப இயன்ற வரை உதவி புரிய வேண்டியது நம் ஒவ்வொருவரது கடமை யாகும்.

## கொடுமையினும் கொடுமை

பீகார் மாகாணம் பூகம்பத்தால் கஷ்டப்படுவதைக் கேட்டு உருகாத உயிர் இந்தியாவில் ஒன்றுமில்லை என இதுவரை நினைத்திருந்தோம். ஆனால் எப்படிப்பட்ட சமயத்திலும் நிலை கலங்காது தனது அதிகாரத்தைச் செலுத்த வல்ல ஒன்று, நம்மெதிரில் இருக்கிறதென்பதை மறந்து போகாதபடி ஞாபகப்படுத்த அடிக்கடி விஷயங்கள் நடைபெறுகின்றன.

முஸாபர்பூரில் பூகம்பத்தின் கொடுமைக்கு அஞ்சி, அந்த ஊர் ஜனங்கள் நிலைகுலைந்து ஓடி, கோர்ட்டு காம்பவுண்டு பத்திரமான இடமெனத் தெளிந்து அங்கு ஒதுங்கினார்களாம். அவ்வளவுதான். போலீஸ் ஆர்டர் உடனே பறந்ததாம், 'தாமதிக்காமல் காலி செய்யவேண்டும்' என்று. அம்மம்ம, என்ன கொடுமை!

இது என்ன கொடுமை! அவன் தமையன் 'இதோ நான் இருக்கிறேன்' என்று கூறிக்கொண்டு இப்போது ஒரு தடபுடல் தாண்டவ மாடுகிறதாம். பூகம்ப சேஷ்டையால் குந்தக் குடிசையற்று, ஒரு வேளை உணவுக்கும் வகையின்றி, வீட்டைத் துறந்து, மனைவி மக்கள் உற்றார் உறவினர் பலரையும் இழந்து, மழையிலும் வெயிலிலும் துன்புற்று மரங்களின்கீழ் உயிர் வாழும் விவசாயிகளிடத்தில் நிலவரி வசூல் செய்ய ஜரூராய் முயற்சி நடைபெறுகிறதாம். தகரக் குவளையாவது, கிழிந்த ஆடையாவது அவர்களிடமிருந்து ஜப்தி செய்யக் கிடைக்குமாயின் வசூலுக்குப் புறப்பட்ட முண்டாசுக் கட்டிகள் பேரதிர்ஷ்டசாலிகள் என்றுதான் சொல்லவேண்டும்.

இந்த இரண்டு நிகழ்ச்சிகளும் உண்மையாயின் இதைவிடக் கேவலம் வேறு இருக்குமென நினைப்பதற்கில்லை. இவர்கள் உள்ளத்தில் ஈரமென்பது வற்றி, பல யுகங்களா யிருக்க வேண்டுமென்றே தோன்றுகிறது.



## தமிழ்நாடு இழந்தது

ஸ்ரீ ஏ. ரங்கசாமி ஐயங்காரைப்பற்றி அறியாதவர் இந்தியாவிலோ இங்கிலாந்திலோ இரார் எனச் சொல்லலாம். அத்தி பூத்ததுபோல் தமிழ்நாட்டில் தோன்றிய இரண்டொரு தேச பக்தர்களில் ஸ்ரீ அய்யங்காரும் ஒருவராவர். சுயராஜ்யக் கட்சி தோன்றியதும், தமிழ்நாட்டில் அது வெகு விரைவில் பரவியதற்கு ஸ்ரீ அய்யங்காரின் முயற்சியே காரணமாகும். தேசிய காங்கிரசிற்கு அவர் ஆற்றிய தொண்டு அளவு கடந்தது. அவரது அரசியல் ஞானமும் பொருளாதார நுண்ணறிவும் யாவரும் வியக்கத்தக்க பெருமை யுடையன.

பத்திரிகைத் தொழிலில் ஸ்ரீ அய்யங்கார் நிரம்பிய அறிவு படைத்தவர். சுதேச மித்திரனும், ஹிந்துவும் இப்போதுள்ள உயர்நிலை யடைந்ததற்குக் காரணமா யிருந்தவர்களில் ஸ்ரீ அய்யங்காரே முதன்மையானவர். இத்தகைய சிறப்புகள் அமைந்த ஒருவரை தேச நெருக்கடியான சமயத்தில் இழக்க நேர்ந்தது தேசிய உலகத்தின் துரதிர்ஷ்டமென்றுதான் சொல்லவேண்டும்.

ஸ்ரீ அய்யங்கார் 16-6-1877-ல் பிறந்தார். 5-2-34-ல் உயிர் நீத்தார். அன்னாரது ஆன்மா சாந்தியுறப் பிரார்த்திக்கிறோம்.

---

## சிறுகதைப் பரிசுகள்

தமிழ்நாட்டு மக்களின் வாழ்க்கைக்கு அவசியமான நீதிகளைப் புகட்டவல்ல சிறுகதைகளுக்கு அவ்வவற்றின் தரத்திற் கேற்றபடி ஐந்து ரூபாய் வரையில் பரிசளிக்கப்படும். கதைகள் சொந்தக் கற்பனையாகவும் இரசனை நிரம்பியதாகவு மிருத்தல் வேண்டும். கதையின் அமைப்பு, தமிழ் நடை, இன்பச் சுவை இவைகளைக் கொண்டே பரிசுத்தொகை தீர்மானிக்கப் பெறும்.

# விகடத் துணுக்குகள்

குறும்பன் : சாஸ்திரிகளே! வசிஷ்டரின் பெண்சாதியாரையா?

சாஸ்திரி : (யோசித்துப் பார்த்தும் ஞாபகம் வராமையால்) அட, எழவே, ஊரான் பெண்சாதியைப் பற்றி உனக்கென்ன? இந்த மாதிரியான கெட்ட எண்ணத்தை விட்டால்தான் நீ உருப்படுவாய்.

N. R. கிருஷ்ணன்.

---

பெரியவர் : ஐயா! நீர் ஏன் சாமியாரானாய்?

சாமியார் : என் மனைவியின் பெருமையை ஊரார் தெரிந்து கொள்வதற்காகத்தான்.

ச. நா. குமாரகுரு.

---

பரீட்சையில் ஒரு மாணவன் காப்பி அடித்ததால் அவனுக்கு 5 ரூபாய் அபராதம் விதிக்கப்பட்டது. அபராதத்தைக் கட்டி ரசீது பெற்றுக்கொண்ட மாணவன் மறுபடியும் பழையபடியே காப்பி யடிக்க ஆரம்பித்தான்.

பரீட்சாதிகாரி : 'என்னடா, மறுபடியும் காப்பி அடிக்கிறாய், ஜாக்கிரதையா யிரு!' என்று அதட்டினார்.

மாணவன் : 'சும்மாயிருங்க சார். இதோ லைசன்ஸ் வாங்கி யிருக்கிறேன், பாருங்கோ' என்று அபராத ரசீதை எடுத்துக் காட்டினான்.

அ, குப்புசாமி.

---

உபாத்தியாயர் : (குரு பக்தியைப் பற்றி போதித்துவிட்டு) கோபாலா! ஆசிரியரை மாணவர்கள் என்ன செய்யவேண்டும்.

கோபாலன் : (சாத்துக்குடி பழத்தின் பெருமையைப் பற்றி அடுத்த மாணவனுடன் பேசிக் கொண்டிருந்த ஞாபகத்தில்) முதலில் தோலை உரித்து விடவேண்டும், ஸார்.

ஜெ. கு.

---

சீதா : லட்சுமி! வீட்டில், தான் இட்டதே சட்டமென உன்புருடன் கேற்று கூறினாரே, அது வாஸ்தவமா?

லட்சுமி : உண்மைதான். ஆனால், அந்தச் சட்டம் அமுலுக்கு வராத சட்டங்களில் ஒன்றாகும்.

பி. சே. மா.

---

கந்தன் : நண்பா! நான் எடுத்த கருப்பு சேலை என்மனைவிக்கு ரொம்ப பிடித்தமாயிருக்கிறது.

நண்பன் : ஓஹோ! அதோ கட்டிக்கொண்டு வருகிறாப்போல இருக்கிறதே.

கந்தன் : பேஷ், கருப்புச் சேலை கட்டி வருகின்றவளெல்லாம் என் மனைவிதானா என்ன? நாளைக்கு உன் மனைவி கட்டி வந்தால்....

M. நாகேஸ்வரன்.



பிரபு : அடே, பால்காரா! இன்றைக்கு என்னடா, பால் சுத்தத் தண்ணீர்போல் இருக்கிறது.

பால்காரன் : ஆமாங் சாமி! பசு இன்றைக்குத் தண்ணீர் கொஞ்சம் அதிகமாய்க் குடித்து விட்டது சாமி.

‡ M. நாகேஸ்வரன்.

---

வழுக்கைத் தலையன் : என்னடா! எல்லாருக்கும் க்ஷவரக்கூலி 2 அணா வாங்குகிறாய். எனக்குமட்டும் 4 அணா கேட்கிறாயே!

பரியாரி : இல்லைங்கோ, சாமி! தங்களுக்குக்கூட க்ஷவரக்கூலி 2 அணாதான். தங்கள் தலையில் ரோமம் உள்ள இடத்தைத் தேடிக் கண்டு பிடிக்கக் கூலி 2 அணா சாமி.

N. R. கிருஷ்ணன்.

---

‡ ஒரு ரூபாய் பரிசு பெற்ற விகடம் அனுப்பியவர்,
M. நாகேஸ்வரன், ஆரணி சைதாப்பேட்டை.

---

## விடுபட்ட எழுத்துப் போட்டிப் பந்தயம் 2

சரியான விடை:—(1) கேசவன் (2) அராபதம்
(3) கயமுகன் (4) யமன்
(5) செவிரம் (6) இரவதம்

மொத்தம் 114 பேர்கள் 295 விடைகள் அனுப்பியதில் உரிய காலத்திற்குள் 3 சரியான விடைகளும் 24 ஒரு தப்புள்ள விடைகளும் உள்ளன. எனவே பரிசுத்தொகைகள் இரண்டையும் சேர்த்து கீழ்க்குறித்த சரியான விடைகள் அனுப்பிய மூவருக்கும் தலைக்கு ரூ. 5 வீதம் பரிசளிக்கப்பட்டிருக்கிறது.

(1) பொ. இரத்தினசபாபதி, கும்பமுனி வைத்தியசாலை, திருநெல்வேலி கிழக்கு, யாழ்ப்பாணம், சிலோன்.

(2) ஆர். எம். கே. c/o காமாட்சியம்மாள், வாண்டமங்கலம், சேலம் ஜில்லா.

(3) S. பூவராகன், குருங்குடி, காட்டுமன்னார்குடி P O சிதம்பரம் தென்னாற்காடு ஜில்லா.

பரிசுத் தொகைகள் 25-2-33-ல் மணியார்டர் மூலம் அனுப்பப்படும்.

(குறிப்பு) இந்த பரிசுக்குரிய தொகையில் ரூபா 10 சென்னை மைலாப்பூர் அட்வகேட் திரு. V. இரத்தின முதலியார் பி. ஏ., பி. எல். அவர்களால் வழங்கப்பட்டது. அவருக்கு எமது நன்றி பெரிதும் உரியதாகுக

# நமது தபால் பெட்டி

[நமது சமூக சம்பந்தமாகவும், உலகப் பொது விஷய சம்பந்தமாகவும் சந்தாதாரர்களால் கேட்கப்படும் கேள்விகளில் முக்கியமானவற்றிற்கு இந்த மாதந்தோறும் பதில் எழுதப்படும். உடனுக்குடன் விடை தெரிவிக்க இயலாத கேள்விகளுக்குச் சிறிது தாமதித்தேனும் தகவலறிந்து பதில் தரப்படும்.] (ப.—ர்.)

*கேள்வி :*—இலங்கைச் செங்குந்தர்கள் இது வரையில் நடைபெற்ற நமது மகாநாடுகளுக்கு வந்திருக்கிறார்களா? இந்தியாவிலுள்ளவர்களோடு அவர்கள் சம்பந்தம் வைத்துக்கொண்டிருக்கிறார்களா? இந்தியாவில் நடப்பதுபோல் அவர்களுக்குள் பால்ய விவாகம் சகஜமாய் நடப்பதுண்டா? நமக்குள் இருக்கும் பற்பல உட்பிரிவுகள் போல அவர்களுக்குள்ளும் இருக்கின்றனவா?

வா. பொன்னம்பலம்

*பதில் :*—இலங்கை வாசிகள் இது வரை இங்கு நடந்த நமது மகாநாடுகளுக்கு வந்தது இல்லை. ஆனால், நமது மகாநாடுகளின் பயனாய் இலங்கையில் நடந்த வட இலங்கைச் செங்குந்தர் மகாநாட்டிற்குத் தலைச் சங்கத்தின் பிரதிநிதிகளாய் திரு. ம. சண்முகசுந்தர முதலியார், எம்.ஏ., எல்.டி. அவர்களும், திரு. பி. செ. மாணிக்கவாசக முதலியார் அவர்களும் விஜயம் செய்திருப்பதால், அடுத்து வரும் மகாநாடுகளில் இலங்கை அன்பர்கள் அவசியமாய் வந்து கலந்து கொள்ளுவார்களென்று நம்புவதற்கு இடமிருக்கிறது.

இலங்கைச் செங்குந்தர்களுக்கும், இந்தியாவிலுள்ள செங்குந்தர்களுக்கும் இதுவரை சம்பந்தம் எதுவும் நடைபெறவில்லையாயினும், தலைச் சங்கப் பிரதிநிதிகள் இலங்கைக்கு விஜயம் செய்ததிலிருந்து இந்தியாவோடு சம்பந்தம் செய்துகொள்ள வேண்டுமென்ற ஆவல் அநேகரது உள்ளத்தில் உதித்திருக்கிறது. சௌகரியம் உள்ள இரண்டொருவர் இது விஷயத்தில் துணிந்து தீவிர முயற்சியும் செய்து வருகிறார்கள். இந்தியாவில் சௌகரியமுடையார் இதற்கு இசைந்து முன்வருவராயின் வெகு விரைவில் இரு நாடுகளுக்குமிடையே ஒற்றுமை விவாகம் நடைபெறுமென்பதில் சந்தேகமில்லை.

பால்ய விவாகத்தைப் பொருத்த மட்டில் இலங்கையில் அநேகமாய் நடைபெறுவதில்லையென்றே சொல்ல வேண்டும். சாதாரணமாய்ப் பெண்களுக்கு 18 வயதுக்கு மேலும், ஆண்களுக்கு 25 வயதுக்கு மேலும் திருமணம் நடைபெறுவதே வழக்கமாயிருக்கிறது. சில ஆண் மக்களுக்கு 40 வயதளவில் விவாகம் நடந்தேறியிருப்பது கவனிக்கத் தக்கதாம்.

இலங்கைச் செங்குந்தர்களிடையே இந்தியாவிலிருப்பது போன்ற உட்பிரிவுகள் இருப்பதாகத் தெரியவில்லை.

---

# சமர்ப்பயாமி

புதிய ஆண்டு பிறந்தது; பொங்கல் கழிந்தது. உங்களை முதலில் குசலம் விசாரிக்க வேண்டாமா? என் க்ஷேமாதிசயங்களை நான் சென்ற மாதத்திலேயே மரக்காலும் படியுமாய் அளந்து விட்டேன். உங்கள் சௌக்கியம் எப்படி. பால் பொங்கியதா? பொங்கலோ பொங்கல் என்று கூச்சலிட்டீர்களா? மாட்டையும் கன்றையும் தெருத்தெருவாய் விரட்டி யடித்தீர்களா? வேலையாட்களுக்கும், அய்யர் அய்யங்கார் சுவாமிகளுக்கும் தட்சணை வழங்கினீர்களா? சொல்லுங்களேன். உயிர்த் தோழனிடம் ரகசியம் எதற்கு? ஓஹோ! முக்கியமானதை மறந்து விட்டேன். நீங்கள் புதிய வேஷ்டி உடுத்திக் கொண்டீர்களா? உமது மனைவி மக்கள் புதிய ஆடை இல்லையென கோபித்துக் கொள்ளாம லிருந்தார்களா? அவசரமில்லை. யோசித்துப் பதில் கூறுங்கள். அதற்குள் என் க்ஷேமத்தைக் கூறி முடிக்கிறேன்.

* * *

சென்ற மாதம் திருப்பாற்கடல் திரு. கு. மொ. கங்காதர முதலியார் கடிதத்தைச் சமர்ப்பித்துக் கொண்டேனல்லவா? அதனால் எவ்வளவு கஷ்டம் தெரியுமா? எத்தனை பேருக்கு பதில் எழுதுவது! திருப்பாற்கடல் எந்த ஜில்லாவில் இருக்கிறது என ஓயாமல் கடிதம் எழுதிக்கொண்டே இருக்கிறீர்களே, திருப்பாற்கடல் என்ற உடன் மகாவிஷ்ணு பள்ளி கொண்டிருப்பதாக நினைத்து, அங்கு போய் தரிசிக்க எண்ணி விட்டீர்கள் போலிருக்கிறது. 'இல்லை ஐயா, இல்லை. அது போலி திருப்பாற்கடல். அங்குபோய் ஏமாற' வேண்டாம். ஒருவேளை திரு. முதலியார் அவர்களைத் தரிசிக்க விரும்புகிறீர்களா?. அப்படியானால் சொல்லுகிறேன். இந்த திருப்பாற்கடல் வட ஆற்காடு ஜில்லாவில் இருக்கிறது. இப்போது மகாநாடு நடக்கப்போகும் ஜில்லாவிலா என்று ஆச்சரியப்படுவீர்கள். என்ன செய்வது. ஐந்து விரல்களும் ஒரேமாதிரி இராதென்பது தெரிந்ததுதானே.

* * *

---

(நமது தபால் பெட்டி முன் பக்கத் தொடர்ச்சி)

*கேள்வி :*—நம்மவர்களைப் பொருத்த வரையில் கல்வியில் முன்னணியில் நிற்கும் ஜில்லா எது? பின்னணியில் நிற்கும் ஜில்லா எது?

சின்ன. வீரப்ப. பரசுராம முதலியார்

*பதில் :*—தமிழ்க் கல்வியைப் பொருத்த வரை செங்கற்பட்டு ஜில்லா ஒருவாறு முதன்மையில் நிற்கக்கூடும். அரசாங்கத்தினர் கணிப்பதுபோல் பாடசாலையில் பயின்றவர்களை மட்டும் எடுத்துக்கொண்டு கணக்குப் பார்ப்போமாயின் சென்னை முதலாவதாகவும், திருநெல்வேலி அதற்கடுத்தபடியாகவும் நிற்கக் கூடும். சாதாரண ஆரம்பக் கல்வியேயன்றி உயர்தரக் கல்வியிலும் இந்த இரண்டு ஜில்லாக்களே முதலாவதாக நிற்கின்றன.

'போகும் பிசாசு சும்மா போகுமா' என்பார்கள். நமது மித்திரனைப் பிடித்த ஏழரையாட்டைச் சனியும் இதனை விளக்கிக் காட்டிவிட்டது.

பொங்கற் புது நாளன்று உங்களுடன் கலந்து உறவாட வேண்டுமென்பது மித்திரனது ஆசை. எனவே, போகியன்றே அவன் பிரயாணத்திற்குத் தயாராகி காத்துக்கொண்டிருந்தான். ஆனால் ஏழரையாட்டைச் சனி எதிரே வந்தது. பிரயாணச் சீட்டு கிடைக்க வொட்டாமல் தடைசெய்து விட்டது. ஆண்டுத் தொடக்கத்தில் போஸ்ட்மாஸ்டர் ஜெனரலிட மிருந்து ரிஜிஸ்டரேஷனை புதுப்பித்த உத்தரவு பெறுதல் வேண்டும், இதில் சில தகராறு ஏற்பட்டுவிட்டது. அதனால் மாஜிஸ்டிரேட்டினிடமும், போஸ்ட்மாஸ்டர் ஜெனரலிடமும் பல நாட்கள் திரிய வேண்டியதாயிற்று. பிப்ரவரி 8-ந் தேதி வரை உத்தரவு கிடைக்கவில்லை. எனவே இவ்வாண்டிலும் பொங்கற் புது நாளில், குதூகலமின்றி, அவன் மூலையில் முடங்கிக் கிடந்தான். இது சனியன் விலகும் போது செய்த பெரும் சேஷ்டை என்று நினைக்கிறோம்.

இனி மித்திரன் ஒழுங்காக பிரதி முதல் தேதியும் பிரயாணப்படுவான் என்பதைத் தெரிவித்துக் கொள்ளுகிறோம்.

* * *

தமிழ்த் தேவி சிலரிடம் சிக்கிக்கொண்டு விழிப்பதாகத் தெரிகிறது. விசித்திரமான தமிழ் நடையுடைய கடிதங்கள் அடிக்கடி நமக்குக் கிடைப்பதுண்டு. மாதிரிக்கு ஒரு கடிதம் குறிப்பிடுகிறோம்.

'.................எழுதியது. உபயச் சேமம். தாங்கள் நம் குலக் கொளுந்தாகிய செங்குந்த மித்திரனில் பிரசுரிக்கப்பட்ட விடுபட்ட எழுத்துப் போட்டிப் பந்தயத்தின் சார்பாக அவ் விஷயத்தை நான் ஒருவன் தெரிந்து எழுதி யிருந்தாலும் தெரியாது எழுதியிருந்தாலும் அச்சுக் கூடபனிலேயே தெரிந்த மட்டும் எழுதி யனுப்பி யிருக்கிறேன். சரி அல்லது சரி அல்ல என்ற நாம்தேயத்தை உடனே தெரியப்படுத்த விரும்புகிறேன்.'

ஒன்றுக்கு மேல் அர்த்தம் தருவதை சிலேடை எனப் புலவர்கள் கூறுவர். இந்தக் கடிதத்தின் வாக்கியங்கள் ஒவ்வொன்றும் ஒருவருக்கும் சரியாய் விளங்காதபடி அத்தனை அர்த்தங்கள் தருவதை வாசகர்கள் கவனித்துப் பார்க்க வேண்டுகிறோம்.

---

## திரு. மா. ஆ. வேலாயுத முதலியார் அவர்கள்

# உருவப் படத் திறப்பு விழா

7-1-'34-ம் தேதி குடியாத்தம் தாலூகா போர்டு தலைவரும் மாஜி முனிஸிபல் சேர்மனுமான ஸ்ரீ வேலாயுத முதலியார் அவர்களின் உருவப் படத்தை, தமிழ்நாடு ஆசிரியர், டாக்டர், P. வரதராஜலு நாயுடுகாரு காலை $9\frac{1}{2}$ மணிக்கு முனிசிபல் ஆபீசிலும், இந்தியா சட்டசபைத் தலைவர் ஸர். ஆர். கே. சண்முகம் செட்டியார் அவர்கள் மாலை 4 மணிக்கு தாலூகா போர்டு ஆபீசிலும் முறையே திறந்து வைத்தனர்.

முனிசிபல் ஆபீசும், தாலுக்கா போர்டு கட்டடமும் நன்கு அலங்கரிக்கப்பட்டிருந்தன. சாரணர்கள் அணி வகுத்து நின்று மரியாதை செய்தனர். காலையில் தலைவர்களின் புகைப் படம் ஒன்று எடுக்கப்பட்டது. திறப்பு விழாவிற்கு வடாற்காடு ஜில்லா போர்டு மெம்பர்களும், அநேக தாலுக்கா போர்டு அங்கத்தினரும், முனிசிபல் கவுன்சிலர்களும், அரசாங்க உத்தியோகஸ்தர்களும், பிரபல வியாபாரிகளும், இதரமான கௌரவஸ்தர்களும் ஏராளமாய் வந்திருந்தனர்.

அன்று காலை நாயுடுகாருக்கு முனிசிபல் ஆபீசில் வரவேற்புப் பத்திரம் வாசித்துக் கொடுக்கப்பட்டது. அதற்குப் பதில் அளிக்கும்போது டாக்டர் நாயுடுகாரு ஸ்தல ஸ்தாபனங்களில் பூரண அதிகாரம் இல்லாவிட்டாலும் ஒற்றுமையாயிருந்து வேலை செய்தால் எவ்வளவோ வேலை செய்யக்கூடுமென்றும், தேர்தல் சண்டைகளை அவ்வப்போது மறந்துவிட வேண்டுமென்றும், அரசியல் விஷயத்தில் அபிப்பிராய பேதமிருப்பினும், ஸ்தல ஸ்தாபனங்களில் அதைக் காட்டக் கூடாதென்றும், தலைவர்கள் ஒழுக்கமுடையவர்களாக இருக்க வேண்டுமென்றும், ஒவ்வொருவரும் முயற்சியினாலும், உழைப்பினாலும் முன்னுக்கு வரவேண்டுமென்றும், ஸ்ரீ வேலாயுத முதலியார் முதலில் தனது சொந்த முயற்சியால் முன்னுக்கு வந்தவரென்றும் குறிப்பிட்டார். பின்பு படம் திறந்து வைக்கப்பட்டதாக அறிவித்ததும் முனிசிபல் சேர்மன் திரு. M. V. பீமராஜா முதலியார் அவர்களால் வந்தனோபசாரம் கூறப்பட்டு பகல் $10\frac{1}{2}$ மணிக்குக் கலைந்தது.

மீண்டும் மாலை 4 மணிக்கு தாலுக்கா போர்டு ஆபீசில் மிகப் பெருங் கூட்டம் கூடியது. டாக்டர் நாயுடுகாரு தலைமை வகித்தார். அவர் தமது முன்னுரையில், இதற்கு முன் அவ்வூர் செல்ல முயன்றும் அப்போது கட்சிகளாக இருந்ததென்றும், இப்போது ஸ்ரீ வேலாயுத முதலியாரும் ஸ்ரீ பீமராஜா முதலியாரும் ஒற்றுமையா யிருப்பதாகத் தெரிந்ததால் விஜயம் செய்ய நேர்ந்ததென்றும், சில்லரை தேவதைகளின் பேச்சைக் கேட்பதாலேயே கட்சிகள் ஏற்படுகின்றனவென்றும் குறிப்பிட்டுவிட்டு ஸர். சண்முகம் செட்டியாரை படப் பிரதிஷ்டை செய்யுமாறு அழைத்தார்.

ஸர். சண்முகம் செட்டியாருக்கு வரவேற்புப் பத்திரம் வாசித் தளிக்கப்பட்டது. அவர் படத்தைத் திறக்கு முன்பு, 'ஸ்ரீ வேலாயுத முதலியார் படத்தைத் திறந்து வைப்பது ஒரு பாக்கியமென்று கருதுகின்றேன். புதிய நண்பர் படத்தைத் திறப்பதாயின் பூர்வோத் தரம் விசாரிக்க வேண்டும். ஸ்ரீ வேலாயுத முதலியார் எனக்கு வியா பார முறையில் 12 வருடங்களாகத் தெரியும். அவரது சாத்வீக குணத்தையும் மேன்மையான நடத்தையையும் நான் அறிவேன். அவ ரைப் பின்பற்றவே அவரது படம் திறந்து வைக்கப்படுகிறது' எனக் குறிப்பிட்டார். படம் திறந்து வைக்கப்பட்டதும், தலைவர் முடிவுரைக் குப் பின் ஸ்ரீ சாமிநாத முதலியார், ஸ்ரீ ரங்கசாமி செட்டியார், எம். எல்.சி. இவர்கள் வந்தனம் கூற மாலை 6 மணிக்கு கூட்டம் கலைந்தது.

---

## தென்னிந்திய செங்குந்தர் ஐந்தாவது மகாநாடு

# ஆலோசனைக் கூட்டம்

சென்ற மகாநாட்டில் தீர்மானித்தபடி தென்னிந்திய செங்குந் தர் ஐந்தாவது மகாநாட்டை, வட ஆற்காடு ஜில்லாவில், இவ்வாண்டில் கூட்ட வேண்டியதைப் பற்றி ஆலோசிக்க, குடியாத்தத்தில் காட்பாடி ரோட்டிலுள்ள திரு. M. V. பீமராஜா முதலியார் அவர்கள் பங்களா வில், 10-2-'34 மாலை 2 மணிக்கு செங்குந்தர்களின் கூட்டம் ஒன்று கூடிற்று. கூட்டத்திற்குப் பல பிரமுகர்கள் வந்திருந்தனர். தலைச் சங்கப் பிரதிநிதியாக திரு. பி. செ. மாணிக்கவாசக முதலியார் விஜ யம் செய்திருந்தனர். கீழ்க் கண்ட தீர்மானங்கள் நிறைவேறின.

(1) ஐந்தாவது மகாநாட்டின் வரவேற்பு சபை அமைப்பதற்கா கவும், மகாநாடு நடக்க வேண்டிய இடம், காலம் முதலியவைகளைத் தீர்மானிப்பதற்காகவும் ஸ்ரீமுகஞு மாசிமீ 12உ (23-2-'34) வெள் ளிக்கிழமை மாலை 4 மணிக்கு இதே இடத்தில் வடாற்காடு ஜில்லா செங்குந்தர்களின் பொதுக் கூட்டம் ஒன்று கூட்ட வேண்டியது.

(2) அக் கூட்டத்திற்கு திருவாளர்கள், M. V. பீமராஜா முதலி யார், மா. ஆ. வேலாயுத முதலியார் இருவரும் கையெழுத்திட்ட அழைப்பிதழ் எல்லா கிராமங்கட்கும் அனுப்ப வேண்டியது.

(3) அக் கூட்டத்திற்கு வடாற்காடு ஜில்லாவிலுள்ள ஒவ்வொரு கிராமமும், கிளைச் சங்கமும் பிரதிநிதிகளை அனுப்பிவைத்து, மகா நாட்டிற்கான ஆலோசனைகளைத் தெரிவிக்குமாறு வேண்டிக்கொள்ளப் பெறுகின்றனர்.

---

## ஜப்பான் தேசத்தின்

# 10 அற உரைகள்

ஜப்பான் நாட்டுப்பெண்கள் புதிதாய்த் திருமண முடித் துக் கணவன் இல்லம் போகுங்கால், கீழ்க் குறித்த பத்து அற வுரைகள் அச்சிடப் பெற்ற ஒருதாள், அவர்களுக்கு வழங்கப் படும் சீதனப் பொருள்களுடன் சேர்த்து அனுப்புவது பண்டை நாள் தொட்டு வரும் வழக்கமா யிருந்து வருகின்றது. அந்த அறவுரைகளின்படி ஒழுகும் பெண்களே அங்கு உத்தமி களென மதிக்கப் பெறுகின்றனர். மாறுபட்டு நடப்போர் இழிவாகக் கருதப் பெற்று அவமதிக்கப்படுகின்றனராம்.

(1) மண முடித்தது முதல் நீ உனது தாய் தந்தையரின் மகளல்ல. புருடன் வீட்டினரை அன்புடன் நேசித்து நடந்து கொள்.

(2) பெண்களுக்கு அணிகலன் கணவன் சொல் மீறாது ஒற்றுமையான வாழ்க்கை நடத்துவதே யாகும். கணவனே உனக்கு உண்மை ஆண்டவன். அவனிடம் வணக்கமும், மரி யாதையும் செலுத்து.

(3) பெருமை பாராட்டித் திரியாதே. பெருமையானது உன் புருடனுக்கு உன்பேரிலுள்ள அன்பைக் குறைத்துவிடும்.

(4) கடுஞ் சொற்களை அறவே ஒழித்துவிடு. பொறு மையைப் பூஷணமாகக் கொள். தக்க சமயம் வாய்க்கும்போது நயமாய்க் கூறி உனக்கு வேண்டியதைப் பெற உன் கணவனிடம் உத்தரவு பெற்றுக்கொள்.

(5) பேச்சுக்காரி என்று பேரெடுக்காதே. அதிகம்பேசும் பெண் அரைக் காசுக்கும் உதவாள். பேச்சு அதிகரித்தால் பொய்யும், புரளியும் அதிகமாகும்.

(6) சோதிடனிடம் குறி கேளாதே. எத் தொழில் செய் யினும் உன் கணவனறியச் செய்.

(7) அடுத்த வீட்டுக் காரியங்களில் கவலை கொள்ளாதே. உன் குடும்பத்தை நன்கு கவனித்து நடந்துகொள். வரவுக்குத் தக்க செலவு செய்.

(8) செல்வந்தன் மகளாயினும் அகங்காரம் கொள்ளுதல் கூடாது. உன் செல்வாக்கைக் குறித்துப் பிறரிடம் பேசாதே.

(9) கடவுள், அரசன், தேசம் மூன்றிற்கும் நீ செய்ய வேண்டிய கடமைகள் பல. தேசம் வேண்டும்போது மறுக்கா மல் உன் கடமையை ஆற்று. உன் மக்களையும் தேசத் தொண் டிற்கு மகிழ்ச்சியுடன் அனுப்பு.

(10) உண்மை வழியே நட. மிகுந்த தைரியம் கொள். தேச நலத்தைப் பெரிதாக மதித்து வாழ். அனைவரையும் உனது சகோதரர்களாகக் கருது. உயிர்களிடத்தில் கருணையாயிரு. தேச சேவையே பெரிதென்பதை உன் மக்களுக்கு அறிவூட்டு. உன் மக்களுக்கு ஐந்து வயது வரையில் நீயே ஆசிரியர் என்பதை கவனத்திற்கொள். தூய்மையும, சுகாதாரமும் உள்ள வாழ்க்கையே இல் வாழ்க்கை என்பதை உணர்ந்து உனது இல்லத்தை அழகுபடுத்தி மனோரம்மியமான சிறந்த வாழ்க்கையை நடத்து.

இவை பொன்னுரைகள் என்பதில் ஐயமில்லை. நமது நாட்டுப் பெண்கள் அறிவு நிரம்பப் பெற்று இவ் வுரைகளின்படி ஒழுகுவார்களானால் குடும்பச் சண்டைகள், தெருச் சண்டைகள் பல தொலைந்துபோகும். நமது பெண்மணிகள் கணவன் வீட்டுக்குச் செல்லுங்கால் 'பதினாறும் பெற்றுப் பெரு வாழ்வு வாழ்வாயாக' என்ற ஆசியினையே எங்கும் பெறுகின்றனர். அதன் கருத்து என்ன என்பதை ஆசி கூறுவோரும் அறியார், ஆசி பெறுவோரும் தெரிந்துகொள்ளார். பதினாறு வகைச் செல்வங்கள் எனச் சிலர் அந்தரார்த்தம் கூறுவர். இம் மூடமந்திரத்தால் யாது பயன். பெரும்பாலான பெண்கள் பதினாறு பிள்ளைகளைப் பெறவேண்டுமென்பதுதான் அதன் கருத்தென எண்ணியிருக்கின்றனர். அவ்வெண்ணம் அவர்களைப் பாழ்படுத்துகின்றது.

ஜப்பானியரது அறவுரை இல் வாழ்க்கையைச் செப்பனிடும் ஓர் மாத்திரைக் கோலாகத் திகழ்கின்றது. சீதனப் பொருள்களனைத்தினும் அது உயர்வாகப் போற்றப்படுகிறது. சீதனப் பொருள்களில் ஒன்றாக அதனை மதிக்கும்போது அதற்குத் தனியே கௌரவம் வழங்கப்படுமென்பதில் ஐயமுண்டோ? அத்தகைய கௌரவம் மிகுந்த பொக்கிஷத்தைக் காணுந்தோறும் அப் பெண்மணிகளின் வாழ்க்கை தூய்மைப்படுவது இயற்கையாகும்.

இதுவுமன்றி, இந்த அறவுரைகளை வாசித்து உணர்ந்துகொள்ளும் ஆற்றலுக்கேனும் பெண்களுக்கு அவசியம் கல்வி புகட்டப்படு மல்லவா? எனவே, கல்வியும் அறிவும் பெண்களிடை பரவுவதற்கும் இது தக்க சந்தர்ப்ப மளிக்கிறது. இந்திய நாட்டிலும் மூடமந்திரமான ஆசீர்வாதங்களின்றி, ஜப்பான் தேசமே போன்று தெளிவான அறவுரைகள் பொறிக்கப்பட்ட தாள் ஒன்று வழங்கப்பட்டு அவை உயிரென மதிக்கப்படுமாயின், பெண்ணுலகில் ஓர் பெரிய மாறுதல் ஏற்படு மென்றே கருதுகின்றோம்.

(ப-ர்.)




—இரட்டைப் படையில் கேட்டேனே!

## "மூன்றில் ஒன்று"

[ஜே. த.]

பல மாதங்களுக்கு முன் நடந்த சம்பவம். ஆனால் மாதங்களும் வருஷங்களும் நாகராஜனுடைய கதையின் ருசியைக் குறைக்க முடியாது.

ஜனவரி மாதம் நாகராஜனைக் கண்ட நண்பர்களெல்லாம் திடுக்கிட்டுத் திகைத்தார்கள். ஆனால் அவர்களுக்கு விஷயம் தெரியாது. ஒரு பக்கம் வாணி வரவேற்கிறாள்; மற்றொரு பக்கம் பொன்னி புன்னகை காட்டி அழைக்கிறாள்; இன்னொரு பக்கமோ, இந்திராபாய் மணமாலையுங் கையுமாய் அவனோடு மன்றாடுகிறாள். நாகராஜன் ஏன் நிமிர்ந்து நடக்கமாட்டான்? கண்ணை விரைத்துக்கொண்டு, புருவத்தைத் தூக்கிக்கொண்டு, சற்று முன்னே சாய்ந்து பிரபு மகன் போல் கம்பீரமாக அவன் நடந்ததில் என்ன ஆச்சரியம்?

என்ன? ஒன்றும் விளங்கவில்லையா? சரி, வெளிச்சமாகச் சொல்லிவிடுகிறேன். வாணியை உங்களுக்குத் தெரியாதா? அவள்தான் வெண்தாமரைத் தேவி. பொன்னிதான் செந்தாமரை மேவும் செல்வத் திருமகள். இந்திராபாயை நீங்கள் அறிந்திருக்க முடியாது. அவள் அட்வகேட் இராமச்சந்திர ஐயரின் செல்வப் புதல்வி. வாணியையும் பொன்னியையும் சேர்த்து வடிவு கொண்டவள் எனப் பெற்றோர் பாராட்டி வந்த பேரழகி.

அவசரப்படாதீர்கள். இம்மூவருக்கும் நாகராஜனுக்கும் என்ன சம்பந்தமென்பதை நீங்கள் கேட்காமலே சொல்லிவிடுகிறேன். சென்ற வருஷம் நாகராஜனுக்கு ஹானர்ஸ் வகுப்பில் கடைசி வருஷம். பரீக்ஷைக்கு இரண்டே மாதங்களிருந்தன. பாடங்களை யெல்லாம் படித்தாயிற்று. ஆனால், பரீக்ஷைக்கு முன்

மறுபடியும் ஒருதடவை கட்டவிழ்க்க வேண்டும். இரண்டு மாதங்களுக்குச் சரியான வேலை யிருந்தது. இரண்டு மாதங்கள் கடந்தால் அவன் ஒரு முதல் வகுப்பு ஹானர்ஸ் ஆசாமி ஆய் விடலாம். அந்த பி. ஏ. ஹானர்ஸ் பட்டத்தை வைத்துக் கொண்டே நாமகள் அவனை வேண்டி அழைத்தாள்.

தங்கள் இரத்தினத்தை ஜொலிக்கச் செய்யக்கூடியவன் நாகராஜன்தானென்று இராமச்சந்திர ஐயரும் அவர் மனைவியும் இரண்டு வருஷங்களுக்கு முன்னரே முடிவு கட்டி வைத்திருந் தனர். சிறிது சிறிதாக நாகராஜன் காதுக்கும் அப்பேச்சு எட்டி யிருந்தது. இந்திராபாயும் காதற் கடிமாலையை மனக்கரத் தேந்தித் துடிதுடித்துக்கொண் டிருந்தாள்.

இவர்களுக் கிடையேதான் திடீரென்று பொன்னி புகுந் தாள். அகஸ்மாத்தாய் ஒரு சிறு துண்டுப் பத்திரிகை மூலமாய் அவள் தன் வலையை வீசினாள். பொன்னியின் வலைக்குத் தப்பிய வர்களும் இப்புவியி லுண்டோ? நாகராஜனும் உடனே அதில் கால் வைத்தான். பணமென்றால் பிணமும் வாய்திறக்கு மல்லவா? அதிலும் கொஞ்சமா? முதல் பரிசு ரூ. 20,000, இரண்டாவது பரிசு ரூ. 10,000; மூன்றாவது ரூ. 5000. கூட் டிப் பாருங்கள். இந்த நாட்டில் ஜமீன்தாரென்று பெயர் வைத்துக்கொண்டு காரிலேறித் தெருத்தெருவாய்ச் சுற்றி வரு பவர்களுக்குக்கூட உண்மையில்—விளக்கை ஏற்றி வைத்துக் கொண்டு கணக்கைப் பார்த்தால்—அவ்வளவு தேருமா என்பது சந்தேகம். இவ்வளவு பெரிய தொகையைக் கண்டால் நாக ராஜன் ஏன் மயங்கமாட்டான்?

பச்சையப்பன் கல்லூரிக் கட்டடநிதி லாட்டெரியில் சீட்டு ஒன்று ஒரு ரூபாய். புத்தகமாய் வாங்கினால் 10 ரூபாய்க்குப் பதினொரு சீட்டு. பதினொரு சீட்டுகளில் மூன்றுக்குப் பரிசு வரக்கூடாதா? அம்மூன்றும் முதல் மூன்று பரிசுகளாக இருக் கக்கூடாதா? ஏன் சிரிக்கிறீர்கள்? சரி. நீங்கள் எவ்வளவு வேண்டுமானாலும் சிரியுங்கள். நாகராஜன் மனதை நீங்கள் மாற்றமுடியாது. அவனென்னவோ அப்படித்தான் கணக்குப் பார்த்தான். மூன்றுபோக மீதி 8 சீட்டுக்கள் எப்படியாவது மற்ற ஏழைகளுக்குப் போகட்டுமென்று அவன் விட்டுவிட்டான்.

வீணே நாகராஜனைப்பற்றி அப்படி இப்படிக் கேவலமாக நினைத்துவிடாதீர்கள். அவன் எண்ணியதற்குக் காரணமில்லா மற் போகவில்லை. திரும்பிப் பார்த்தான். மூன்று பக்கம் மூன்று நங்கைகள் வாதாடுகிறார்கள். செய்வதின்னதென்று தெரிய வில்லை. கடைசியில் ஓரே ஓட்டமாய்ப் பெரிய தெரு ஜோசியர் வீட்டுக்கு ஓடினான். அவனைக் கண்டவுடனே அவர் புன்னகை



யோடு தலையாட்டினார். "சரி; நமது சமாச்சாரத்தைக் கண்டு பிடித்துவிட்டார். இவர்தான் சரியான ஆசாமி" என்று எண் ணிக்கொண்டு எதிரே உட்கார்ந்தான். "சரிதான்; தெரிகிறது உங்கள் எண்ணம். இதோ முகத்திலேயே கண்டுபிடித்து விட் டேன். உம்......இரட்டைப் படையில் ஒரெண் சொல்லுங் கள்" என்றார் ஜோசியர். "முப்பத்திரண்டு" என்றான் நாக ராஜன்.

"முப்பதுக்குக் குறைவாய்ச் சொல்லுங்கள்."

"இருபத்தேழு"

"இரட்டைப் படையில் கேட்டேனே?"

"அடட—பதினெட்டு"

"ஆ! சரி! இன்னும் இரண்டொரு மாதத்தில் நல்ல திசை பிறக்கிறது"

"இரண்டொரு மாதத்திலேயே ஆரம்பிக்கிறதா?"

"ஆமாம். இருந்தாலும் நல்ல யோகத்துக்கு ஐந்தாறு மாத மாகும்?"

"அது சரிதான். நான் நினைத்து வந்த காரியங்களைப் பற்றி......"

"ஆமாம். நீங்கள் இப்பொழுது பல காரியங்களைப் பற் றிக் கேட்கத்தான் வந்திருக்கிறீர்கள்."

"பல அல்ல; மூன்றுதான்."

"ஆமாம்......பதினெட்டில் பதினைந்துபோனால்......சரி. மூன்றாகத்தா னிருக்கும். அந்த மூன்றும் உங்களை இப்போது ஆட்டி வைக்கின்றன. ஆனால் எல்லாம் சீக்கிரத்தில் சரியாய்ப் போகும்."

"மூன்றும் பலிக்குமா என்றுதான் கேட்கிறேன்."

"கொஞ்சம் இருங்கள். சுக்கிரன் சரியான இடத்தில்தா னிருக்கிறான். இருந்தாலும் அங்காரகன் சனி இருவருடைய பார்வையு மிருக்கிறது.

"அதனால்"

"ஒன்றுதான்"

"சரி ஒன்று பலிப்பது நிச்சயமா?"

"அதைப் பற்றிச் சந்தேகமே கிடையாது. அந்த விஷ யத்தில் மட்டும் அவர்கள் எவ்வளவு முறைத்தாலும் சுக்கிரனை அசைக்க முடியாது."

"சரி, இதை வாங்கிக்கொள்ளுங்கள்."

கையில் வந்ததைத் தாராளமாக வாரிக்கொடுத்து விட்டுத் துள்ளி எழுந்தான் நாகராஜன். ஒரே அடியில் முப்பத்தையாயிரம் வரப்போகிறது. அதை முன்னரே தெரிவித்த ஜோசியருக்கு எவ்வளவு கொடுத்தா லென்ன?

இனிமேல் நாகராஜனைப் பாருங்கள். "ஜோசியன் பலே ஆசாமியாய்த்தா னிருக்கிறான். மூன்றிலொன்று நடப்பது நிச்சயமென்றான். நானும் அப்படித்தான் நினைத்தேன். இப்பொழுது பூரண திடமாய்விட்டது.

அப்பாடா தொலைந்தது சனியன். கொஞ்சமான புத்தகமா கிடக்கிறது? இதையெல்லாம் மறுபடியும் கிளறுவதென்றால் லேசாகவா இருக்கிறது? யார் மண்டையை உடைத்துக் கொள்வது? இந்தக் காலத்தில் யார் பட்டத்தைக் கவனிக்கிறார்கள்? பணமிருந்தால் அவனைத்தான் கொண்டாடுகிறார்கள். அப்படித்தானென்ன? நமது மூளை குறைந்துவிட்டது? படிக்காவிட்டாலும் ஒரு வெறும் பி. ஏ.-வுக்காவது 'ரெகமெண்டேஷன்' கிடைக்காதா?

அவள் மட்டுமென்ன? ஊரில் பெண்ணுக்கா குறைச்சல்? இந்தத் தண்ணீர்ப்பந்தல் வக்கில் மிஞ்சிமிஞ்சிக் கொடுத்தால் ஒரு இரண்டாயிரம் கொடுப்பானோ என்னவோ? அதற்காக முப்பத்தையாயிரத்தை விடுவதா? அழகுதானென்ன அப்படிச் சொட்டுகிறது? பணத்தைக் கண்டால் எத்தனைப் பதுமைகளைச் சமர்ப்பிக்கமாட்டார்கள்? பலத்த கையாகப் பார்த்துப் பொறுக்கினால் கூடவுங் கொஞ்சம் பலத்த தொகை வரும். உள்ள இடத்திலேயே வந்து சேருவது பணத்துக்கு இயற்கைதானே? சரி—ஒரே தீர்மானந்தான். மூன்றில் இரண்டை விட்டுவிட வேண்டியதுதான். விடவேண்டியது அந்த இரண்டையும் தான். புத்தகத்தைக் கட்டி மூலையில் வைத்துவிட வேண்டும். அந்த ஐயருக்கும் ஒரு *"ரிக்ரெட் வெரிமச்" எழுதிவிட வேண்டும்." என்று யோசித்துக்கொண்டே ஹாஸ்டலை அடைந்தான்.

சிறிது நேரத்திற்குள் புத்தகங்களெல்லாம் மூலைக்கு முட்டாயின. பார்ப்பவர்களுக்கேன் சமாச்சாரம் தெரியவேண்டும்? அதற்காகவே இரண்டொன்று மேஜைமேற் கிடந்தது. சில நிமிஷங்களில் ராமச்சந்திரய்யருக்கும் கடிதம் தயாராய்விட்டது. உடனே ஒரு தினசரிப் பத்திரிகையும், இரண்டு மூன்று துண்டு பத்திரிகைகளும், லாட்டரிச் சீட்டுப் புத்தகமொன்றும் மேஜைமே

* மிகவும் வருந்துகிறேன்.



லேறிக் கொண்டன. நாகராஜன் மிகவும் கஷ்டப்பட்டு அதிர்ஷ்டப் பெயர்களைத் தேடினான். ஆனாலும் அரைமணி நேரத்திற்குள் பதினொரு அதிர்ஷ்டப் பெயர்கள் கண்டுபிடிக்கப் பட்டன. நீங்கள் அந்தப் பெயர்களைக் கேட்கவேண்டுமா? முதல் சீட்டின் அதிர்ஷ்டப் பெயர், 'மூன்றிலொன்று'; இரண்டாவது 'யோக திசை'; மூன்றாவது 'குருபலன்'

மறுநாள் காலை காலேஜுக்கு நேரமானதும் இரண்டு கவரும் கையுமாய் நாகராஜன் புறப்பட்டான். ஒன்றில் இந்திராபாயின் வாழ்க்கையைத் தீர்மானிக்கும் கடிதமிருந்தது. மற்றொன்றில் நாகராஜன் வாழ்க்கையைத் தீர்மானிக்கும் பதினொரு அதிர்ஷ்டப் பெயர்களும் பத்து ரூபாய் நோட்டொன்றும் இருந்தன.

* * *

பொன்னி ஸ்மரணையிலேயே இரண்டு நாட்கள் கழிந்தன. இராமச்சந்திரய்யரிட மிருந்து நாகராஜன் ஆவலுடன் எதிர்பார்த்த கடிதம் வந்து சேர்ந்தது. ஆனால் அவன் எதிர்பார்த்த கடிதம் நீளமாயில்லை. ருசிகரமாகவு மில்லை.

"மிஸ்டர் நாகராஜனுக்கு.

விஷயம் தெரிந்துகொண்டோம். நிரம்பவும் சந்தோஷம்.

இங்ஙனம்:
பி. இராமச்சந்திரன்"

என்னும் இரண்டு மூன்று வாக்கியங்களே இருந்தன.

'ஒரு பாரம் கழிந்தது' என்ற குதூகலத்துடன் அவன் மீண்டும் பொன்னி ஸ்மரணையைத் தொடங்கினான்.

பெப்ரவரி, மார்ச் மாதங்களும் தொலைந்தன. பரீக்ஷையு ஒழிந்தது. பரீக்ஷைக்குப் பின் லாட்டெரி பூஜை பலப்பட்டத பொன்னி ஸ்மரணையும் மும்முரமாயிற்று. ஆனால் நாட்களை அடித்தோட்டத்தான் நாகராஜனிடம் சவுக்கில்லை. ஒவ்வொ நாளும் நத்தைபோல் நகரலாயிற்று. மே மாதம் பரீக்ஷை முடி விளம்பரமாயிற்று. 'ரெகமெண்டெட் லிஸ்டிலும் அவன் பெ ரில்லை. "இதுவும் நல்லதுதான். மூன்றாவது பின்னும் தி மாயிற்று" என்றெண்ணி அவன் குதூகலித்தான்.

* * *

ஜுலை மாதம் மூன்றாந்தேதி பெரிய தெரு ஜோசிருடைய ஜோசியம் பலித்தது. நாகராஜனுக்கு மூன்று பரிசுக வந்தன. ஒன்றின் தொகை ஐந்து ரூபாய்; மற்ற இரண்டு 2½ ரூபாய்ப் பரிசுகள்.

# ஸ்ரீ கிருஷ்ணாவதாரத் தோல்வி

[மாவன்னா]

"தீய ஒழுக்கங்கள் எங்கும் தாண்டவமிடுகின்றன. நன்னெறி முற்றும் மறைந்து போகின்றது. இது, ஸ்ரீ மகாவிஷ்ணு—கிருஷ்ண பரமாத்மா மீண்டும் உலகில் தோன்றுதற்குரிய அடையாளங்களாம். அறநெறி புதைக்கப்பட்ட இடத்தினின்றும் மறநெறி கிளைத்துச் செழித்து வளரும்போது அதனை வெட்டி வீழ்த்த இறைவன் அவதரிப்பான் என்பது சாஸ்திர சம்மதம். எனவே, ஸ்ரீ கிருஷ்ணன் தோன்றுதற்குரிய காலம் வெகு தூரத்தில் இல்லை. அவன் வரவு விரைவில் நிகழ நாம் இயன்றவரை தூய்மைப்படுதல் வேண்டும். நமது தூய்மையும், மறவோரது தீய செயலும் பரமாத்மாவின் உள்ளத்தில் சதா ஊறிக்கொண்டிருக்கும் அருளேனும் ஊற்றுக் கால்களை மிகுதிப் படுத்துவனவாம்"

சில ஆண்டுகளுக்கு முன் இவ்வுபதேச மொழிகள் எங்கும் ஒலித்தன. ஆனால், இன்று வரை பரமாத்மா உலகில் தோன்றியதாகத் தெரியவில்லை. பரமாத்மாவின் தண்ணருளைத் தேடி யலைந்த அம்மையாரும் அவனது திருவடிக்கு ஆளாகிவிட்டனர். 86 வயதுடைய இளைஞராய்ச் சென்ற ஆண்டிலும் நம்மிடையிலிருந்து பெரிதும் உழைத்து வந்த டாக்டர் அன்னி பெசன்டு அம்மையார் கடந்த செப்டம்பர் மாதம் 20-ம் நாள் பூத உடல் நீத்தனர். பூத உடம்பு மறைந்ததாயினும் அவரது புகழுடம்பு இன்றும் நிலவுகின்றது.

அன்னி பெசண்டு அம்மையாரைப் பலர் பலவிதமாய்ப் புகழ்வார்கள். அவர் ஓர் சிறந்த அறிஞர். பிரம்மஞ்ஞானம் படைத்தவர். படைப்புத் தொழிலில் வல்லவர். புதுப்புது கழகங்கள், மகாநாடுகள், கொள்கைகள், மதங்கள், பத்திரிகைகள், கல்விச்சாலைகள், கடவுள்கள் எல்லாவற்றையும் படைக்கும் ஆற்றல் அம்மையாருக்கு உண்டு. அவர் ஒரு அன்புக்கடல், இன்பப் பிழம்பு, வீரத்தனிமலை. அவர் ஒன்றுக்கும் அஞ்சா ஆண் சிங்கம். பலமொழி வல்ல பண்டிதை. நுட்ப அறிவு, சுருசுருப்பு, விடாமுயற்சி, ஓய்வற்ற உழைப்பு முதலியன அவரது தனிக்குணங்கள்.

அவர் 1847-ம் ஆண்டு அக்டோபர் மாதம் 1-ம் தேதி லண்டனில் வில்லியம் பேஜ் என்பவருக்கு மகளாய்ப் பிறந்தார். சிறு வயதில் தக்க ஆசிரியர்களால் சிறந்த அறிவு புகட்டப்பட்டார். பிரான்ஸ், ஜெர்மனி முதலிய பாஷைகளைத் தமது சொந்த முயற்சியால் நன்கு பயின்றார். 1867-ல் பிரான்க் பெசன்டு என்னும் பாதிரியை மணந்தார். இவர்களுக்கு ஒரு ஆணும் ஒரு பெண்ணுமாக இரண்டு மக்கள் பிறந்தனர்.







இச்சமயம் அவரது அறிவு நாஸ்திகத்தில் சென்றது. நாஸ்திகக் கொள்கையினை யுடைய சார்லஸ் வாய்சே, ஸ்காட் என்ற இருவரது நட்பு ஏற்பட்டது. நாஸ்திகத்தைப்பற்றி அநேக கட்டுரைகள் பத்திரிகைகளுக்கு எழுதினர். ஒரு பாதிரியாரது மனைவியார் நாஸ்திகப் பிரசாரம் செய்வது மிகவும் பொருத்தமானதல்லவா? எனவே, இருவரும் கருத்து மாறுபட்டு 1874-ல் சட்டபூர்வமாய் விவாக விடுதலை செய்துகொண்டனர்.

விஷயதானம் செய்வதால் வரும் ஊதியமே அவர் வாழ்க்கைக்குப் போதியதா யிருந்தது. அவ்வூதியத்தைக்கொண்டே அவர் வாழ்க்கையை நடத்தலாயினர். பத்திரிகைகளில் அவர் வெளியிடும் விஷயங்கள் பல மேதாவிகள் கவனத்தைக் கவர்ந்தன. அரசியல் துறையிலும் நாஸ்திகமதப் பிரசாரத்திலும் பிரசித்தி பெற்றிருந்த சார்லஸ் பிராட்லா இவரது நண்பராயினர். இருவருமாய் நேஷனல் ரிபார்மர் என்ற பத்திரிகையைத் துவக்கினர். 1877-ல் கர்ப்பத்தடைப் பிரசாரத்திற்கென 'மால்தூஷியன் லீக்' என்ற ஒரு கழகத்தை இவர் அமைத்தார்.

1882-ம் ஆண்டில் முதன்முதலாக இவர் பிரம்மஞான சங்கத்தில் (Theosophical Society) ஈடுபட்டார். பிரம்மஞான கழகத்தில் இழுத்துக்கொண்டு போய்ச் சேர்த்து, கடைசி வரையில் அதைவிட்டுப் பிரியாதிருக்குமாறு இவரது உள்ளத்தை இறுகப் பிணித்தது, எச். பி. பிளாவட்ஸ்கி வெளியிட்ட ரகசிய தத்துவம் (Secret Doctrine) என்ற புத்தகமே யாகும். அவ்வியக்கத்தில் சேர்ந்ததனுலேயே அவர் இந்தியாவுக்கு வர நேர்ந்தது. இங்கு வந்ததும் நாஸ்திக உள்ளம் மறைந்தது. ஆஸ்திக ஞானம் முளைக்கத் தொடங்கியது. இந்துமதப் புத்தகங்கள் பலவற்றைத் தீவிரமாய்ப் படித்து அதில் அநேக உயரிய இலட்சியங்கள் உள்ளன வென்பதை உணர்ந்தார். இந்துமத தர்மங்களைச் சரிவர மாணவர்களுக்குப் போதிப்பதற்கென காசியில் ஸென்ட்ரல் ஹிந்து காலேஜ் ஒன்றைஅமைத்தார்.

இந்துமதக் கோட்பாடுகளைப் பல தேசத்தினர் அறிந்துகொள்ளுதற் பொருட்டு அவற்றை ஆங்கிலத்தில் மொழி பெயர்த்து வெளியிட்டார். பிரம்மஞான சபைகளை ஆங்காங்கு ஸ்தாபித்தார். அது சம்பந்தமாய் அநேக நூல்களும், துண்டுப்பிரசுரங்களும் அம்மையாரால் எழுதப்பட்டுள்ளன. 1907-ம் ஆண்டு முதல் இறுதிக்காலம் வரை பிரம்மஞான சங்கத்தின் தலைவராய் இருந்து அரிய தொண்டாற்றி வந்தார். சுமார் 50 தேசங்களில் பிரம்மஞான கழகங்களைத் தோற்றுவித்து அவற்றின் மூலம் இந்திய நாட்டின் கீர்த்தியைப் பிறநாடுகளில் நிலைநாட்டினுர்.

சென்னை, அடையாற்றில் தேசீயக் கலாசாலை ஒன்றை ஏற்படுத்தினுர். தாழ்த்தப் பட்டவர்களுக் கென்று பல கல்விச் சாலைகளை அமைத்தார்.

அடிமை நாட்டின் விடுதலைக்கு உழைக்க வேண்டியது அறிவாளிகளின் கடமை என்பதைத் தெளிவுற உணர்ந்த அம்மையார் அக்கொள்கையைப் பரவச் செய்வதற்காகவே காமன்லீக் என்ற

வாரப் பத்திரிகையையும், 'நியூ இந்தியா' என்ற தினசரிப் பத்திரிகையையும் ஆரம்பித்தார், அரசாங்கத்தினரின் நியாயமற்ற செயல்களை அவ்வப்போது தாட்சண்ணிய மின்றி நியூ இந்தியா கண்டித்து எழுதி வந்ததால் அப்பத்திரிகை வெகு விரைவில் மிக்க பிரசித்தி யடைந்தது. தேச விடுதலையில் அம்மையாருக்கிருந்த அதிதீவிர எண்ணம் 'ஹோம் ரூல்' இயக்கத்தை ஆரம்பிக்கச் செய்தது. அவரது ஹோம் ரூல் பிரசாரம் இந்தியர்களின் உள்ளத்தில் புத்துணர்ச்சியைத் தோற்றுவித்தது. அது கண்டு அரசாங்கமும் நடுங்கியது. பம்பாய், மத்திய மாகாண அரசாங்கங்கள் தமது நாட்டில் அம்மையார் பிரவேசிக்கக் கூடாதெனத் தடுத்துவிட்டன. சென்னை அரசாங்கமோ 1917-ல் அவரைச் சிறைப்படுத்திவிட்டது. தேச நலத்திற்காக சிறைபுகுந்த அம்மையாரது கீர்த்தி நாடுமுழுவதும் பரவியது. ஆனால், அம்மையார் சில மாதங்களிலேயே விடுதலை செய்யப்பட்டார். அவர் சிறையினின்றும் வெளிவந்தபோது தென்னாட்டுப் பார்ப்பனர்கள் அவரைத் தெய்வமெனப் போற்றினர், அவருக்குச் சோடசோபசாரமும் செய்தனர். வெண்கொற்றக் குடைகள், வெண்சாமரைகள் கற்பூர ஆலாத்திகள், கும்பங்கள் எல்லாம் ஒவ்வொரு ஊரிலும் அம்மையார் பவனியில் தாண்டவமாடின. இவைமட்டுமோ? மிக உயர்ந்த நிலையிலிருந்த பல வைதீகப் பார்ப்பனரும் அம்மையார் பாதங்களில் விழுந்து சேவித்துக் கொண்டனரென்றால் அவருக்கு எவ்வளவு தூரம் மதிப்பு கற்பிக்கப்பட்டிருந்த தென்பதை ஊகித்துக்கொள்ளுங்கள். இத்தகைய மதிப்பு இடீரெனத் தோன்றவே அவரது உள்ளம் தடுமாறிவிட்டது. மிகச் சீரிய தொண்டாற்றிய அம்மையார் அற்ப வழிகளில் மனத்தைச் செலுத்தினர். அது அநேகரது உள்ளத்தில் சிறிது வருத்தத்தைத் தோற்றுவித்த தென்பதில் ஐயமில்லை. எனினும், அது அவர்களது தவறன்று. மக்களை மக்களெனவே மதிக்காமல் தெய்வ சம்பந்தங் கற்பித்து அவர்களது பாதங்களில் விழுந்து வணங்குவதால் நேரும் பலன் இதுவேயாகும்.

டாக்டர் பெஸண்டு, பெண்கள் முன்னேற்றத்தில் அதிக கவனம் செலுத்தினர். அதற்கென பல கழகங்களை அமைத்தனர். சென்னையிலுள்ள இந்திய மாதர் சங்கம் அவரால் தோற்றுவிக்கப்பட்டதாகும்.

தொழிலாளர்களை அவர்களது உறக்கத்திலிருந்து தட்டி எழுப்பியவர் அம்மையார்தான் எனக் கூறுவது மிகையாகாது. 1920-ம் ஆண்டில் ஒரு பெரிய வேலை நிறுத்தம் ஏற்பட்டு தொழிலாளிகள் பட்டினியால் வருந்தியபோது இவர் பத்தாயிரம் ரூபாய் வழங்கி அவர்கள் பட்டினியைப் போக்கினரெனின் தொழிலாளர் முன்னேற்றத்தில் அவருக்கிருந்த பற்றுதலையும், பொதுவாக அவரிடமிருந்த தயாள சிந்தையினையும் எவரே போற்றாதிருக்க முடியும்.

எத்தனையோ கழகங்கள், சபைகள், லீக்குகள், கலாசாலைகள், பள்ளிக்கூடங்கள், பத்திரிகைகளை யெல்லாம் படைத்த அம்மையார் ஒரு லோக ரட்சகரையும் படைத்துப் பார்த்துவிடத் தீர்மானித்தார். இதில், அவருக்கு எவ்வளவோ கஷ்டங்களும் துன்பங்களும் சம்பவித்தன. அவற்றை யெல்லாம் ஒரு சிறிதும் இலட்சியப்படுத்தாமல்



ரதிர்த்துப் போராடி வெற்றி பெறுவதென முடிவு செய்து உழைத்து வந்தார் ஆனால், அவரது உழைப்பு முழுதும் இறுதியில் பயனிலவாயின

அடையாற்றுப் பிரம்மஞான கழகம் உல்லாசப் போக்கிற்கும், உத்தியோகஸ்தர்களை சிநேகம் செய்வதற்கும் ஏற்ற இடமாயிருந்ததால் உத்தியோகஸ்தர்கள், வக்கீல்கள், செல்வந்தர்களெல்லாம் அங்கு அடிக்கடி வந்து தங்குவதுண்டு. அவ்வாறு வந்து தங்கினவர்களில் திரு. நாராயணசாமி அய்யர் என்பவர் ஒருவர். அவர் தாசில்தார் உத்தியோகத்திலிருந்து விலகி உபகாரச்சம்பளம் பெற்று வாழ்ந்து வந்தவர். அவருக்கு மூன்று புதல்வர்களிருந்தனர். மூவரில் இருவரைத் தாம் வளர்ப்பதாகக் கூறி அம்மையார் பெற்றுக்கொண்டனர்.

லெட் பீட்டர் என்பவர் அம்மையாரின் உயிர்த்தோழர். அவரிடம் இருகுழந்தைகளையும் ஒப்படைத்துத் தமது கடவுள் படைப்பு ரகசியத்தையும் தெரிவித்து, அதற்கேற்ப வளர்க்குமாறு ஏற்பாடு செய்தார். குழந்தைகள் ஆங்கில முறைப்படி வளர்க்கப்பட்டன. பல மேதாவிகளைக்கொண்டு கல்வியறிவு புகட்டப்பட்டது.

மூத்தவராகிய கிருஷ்ண மூர்த்தியே லோகரட்சகராக—ஸ்ரீ கிருஷ்ண பரமாத்மாவாக—அவதரிக்க இருந்தவர். இருவரில் அவரை ஏசுநாதரின் தூதரென அம்மையார் மேல்நாடுகளில் பிரசாரம் செய்தார். இந்தியாவில் கிருஷ்ண பரமாத்மாவின் தோற்றமெனக் கூறினார். இருநாடுகளிலும் பலமான எதிர்ப்புகள் தோன்றின. டாக்டர் நாயரும் டாக்டர் நஞ்சுண்டராவும் இதனை எதிர்த்து 'இந்து' முதலிய பத்திரிகைகளில் பல கட்டுரைகள் எழுதினர்.

கிருஷ்ணமூர்த்தி எதிர்ப்புகளின் தன்மையை உணர்ந்தார். இதனை மேலும் வளரவிடுவது தனது பிற்கால வாழ்விற்குப் பேராபத்தாக முடியுமெனத் தெளிந்தார். எனவே, எதிர்ப்புகளினின்றும் விலக விரும்பி "நான் ஏசுகிருஸ்துவின் தூதன் என ஸ்ரீபெசண்டு கூறுவது எனக்கு உடன்பாடு அன்று" என மேல்நாடுகளில் மறுத்து விட்டார். இதனை அறிந்ததும் அவரிடம் ஸ்ரீபெசண்டுக்கு வெறுப்பு உதித்தது அது முதல் கிருஷ்ணமூர்த்தியைப்பற்றி நினைப்பதே இல்லை. கிருஷ்ணாவதாரத்தைப் படைக்கும் எண்ணத்தையும் ஒழித்தார். எல்லாவற்றிலும் வெற்றிமாலை சூடிய அம்மையார் கடவுள் படைப்புத் தொழிலில் மட்டும் தோல்வித்தானம் பூண்டனர்.

அம்மையாரின் உயில் சாசனத்தில் கிருஷ்ணமூர்த்தியைப்பற்றி ஒன்றும் குறிப்பிடாமையும், பெசண்டு இறந்தபோது கிருஷ்ணமூர்த்தி அங்கு செல்லாமையும் அவர்களுக்குள் இருந்த மனத்தாங்கலை மெய்ப்பிக்கின்றன.

* * *

**"கோவில்களும் மடங்களும் உள்ளவரை இந்தியாவுக்கு விமோசனம் இல்லை"**

—கிருஷ்ணமூர்த்தி.

கடவுளாகத் தோன்ற இருந்த கிருஷ்ணமூர்த்தி இன்று இவ்வாறு கூறுவாராயின் இது கிருஷ்ணாவதாரத்தின் மிகப் பெருந் தோல்வி என்பதில் சந்தேகம் உண்டோ?

# அதிசயம்! அற்புதம்! ஆச்சரியம்!

## மணிக்கு 4000 மைல் பாயும் குண்டு

ஜெர்மன் ரசாயன நிபுணரான டாக்டர் எச். ஜெர்லிச் என்பவர் பயங்கரமானதோர் துப்பாக்கிக் குண்டு கண்டுபிடித் திருக்கிறார். இந்த நூதன குண்டு விநாடிக்கு 5800 அடி (மணிக்கு 4000 மைல்) வேகத்தில் போகுமாம். இது கப்பல்களில் அரை அங்குல கனமுள்ள கவசமிருப்பினும் துளைத்துவிடும். குண்டுபாயும் இடத்தில் குண்டினுடைய சுற்றளவினும் இருமடங்குள்ள துளை ஏற்படுகின்றது. இந்த குண்டுகள் அதிக வேகமாய்ப் பாய்வதால் ஆகாய விமானம் எவ்வளவு வேகமாய்ச் சென்றாலும் அதைத் தவறாமல் சுடக்கூடுமாம்.

* * *

## டெலிபோன் மூலம் நடந்த திருமணம்

ஸ்ரீமதி சிக்ரிட் கார்ல்ஸன் என்ற மணமகள் ஸ்டாக்ஹாம் நகரிலும் (ஸ்வீடன்) திரு. பெர்டில் இளாசன் என்ற மணமகன் டெட்ராயிட் நகரிலும் (அமெரிக்கா) இருந்துகொண்டு டெலிபோன் மூலமாகத் திருமணம் முடித்துக் கொண்டனர்.

திருமணம் நடைபெறக் குறித்த நாளுக்கு முந்தி மணமகன் உத்தியோக நிமித்தமாக அமெரிக்கா போக வேண்டிய அவசியம் ஏற்பட்டு விட்டதால் இவ்வாறு டெலிபோன் மூலமாக விவாகம் நடைபெற நேர்ந்தது. மணமகன் பக்கத்தில் அவனது தாய் தந்தையரும், பாதிரியாரும், ஒரு நியாயவாதியும் அமர்ந்திருந்தனர். ஏழு நிமிடங்கள் திருமண தம்பதிகள் டெலிபோன் மூலம் பேசி தங்கள் இணக்கத்தைத் தெரிவித்த பின் பாதிரியார் மணச் சடங்கை முடித்தார். பாதிரியார் டெலிபோன் மூலமாகவே ஆசி கூறினராம்.

* * *

## படம் அனுப்பும் டெலிபோன்

ஒரு புது மாதிரியான தந்திக்கம்பி யந்திரம் கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறதாம். அதன் மூலமாக ஒருவரது பேச்சையும் படத்தையும் ஏககாலத்தில் ஒரு இடத்திலிருந்து மற்றொரு இடத்திற்கு அனுப்ப முடியுமாம்.

* * *

## கண்மூடி மனைவிகள்

கிழக்கு இந்தியத்தீவில் உள்ள டிமார்லாட் என்ற இடத்தில் புருடர்களின் முன் பெண்கள் இருக்கும்போது ஒரு கண்ணை மூடிக்கொண்டே இருத்தல் வேண்டும். இதனை மீறுவோர்க்கு தண்டனை விதிக்க சட்டமும் இருக்கிறதாம்.



## ஆகாய விமான அடகுக் கடை

நம் நாட்டில் மார்வாடிக் கடைகள் இருப்பது போன்று பாரிசில் ஆகாயவிமான அடகுக்கடைகளை சர்க்காரே வைத்து நடத்துகின்றனராம். இதில் ஆகாய விமானங்களை அடகுவைத்து கடன் பெற்றுக் கொள்ளலாம்.

* * *

## சாவி கொடாமல் ஓடும் கடிகாரம்

லெரிடாவில், ஸ்ரீகாலிட்டோ ஆர்பெரோ என்பவர் புதிதாகக் கண்டுபிடித்துள்ள கடிகாரத்திற்கு அடிக்கடி சாவிகொடுக்க வேண்டியதில்லை. ஒரு முறை சாவி கொடுத்து விட்டால் எக்காலத்திலும் நிற்காமல் ஓடிக் கொண்டிருக்கும். இந்தக் கடிகாரம் விநாடி, நிமிஷம், மணி, நாள், வாரம், மாதம், வருஷம் அனைத்தையும் காட்டுகிறது, இதை 1100 மணி நேரத்தில் செய்து முடித்தாராம்.

* * *

## சேவலை மணந்த சீனப்பெண்

சீனாவில் ஷியி-குவரங்-ருங் என்னும் அழகிய சீனப் பெண் சிங்கப்பூரிலுள்ள ஒருவரை காதலித்துவந்தாள். அவளுக்கு வயது 18 ஆகியும் அவர் வந்து சேரவில்லை. பெண்ணின் தாய் தந்தையர் இறப்பதற்கு முன் தனது மகள் திருமணத்தை நடத்திப் பார்க்கவேண்டுமென்ற எண்ணத்தால் தங்கள் மூதாதையரிடமிருந்து தங்களுக்குக் கிடைத்ததாகக் கருதிய ஒரு சேவலை மணமகனாகப் பாவித்து, சேவலுக்கும் அந்தப் பெண்ணுக்கும் திருமணம் முடித்து வைத்தனராம். சீனப்பெண்கள் பெற்றோருக்குக் கீழ்ப்படிய வேண்டியதே கடமையென்றிருப்பதால் அவள் இவ் வேற்பாட்டை ஒத்துக்கொள்ளவேண்டியதாயிற்று. என்னே, அறியாமை! திருமணத்தின்போது பெண்ணின் மனோநிலை எவ்வாறிருந்ததோ?

* * *

## தூங்காத மனிதர்

மான்செஸ்டரில் வசித்துவரும் ஸ்ரீ வில்லியம் பிளாக்பர்ன் 8 வருடத்திற்கு முன் ஆபரேஷன் செய்து கொண்டார். ஆபரேஷனால் நோய் நீங்கியது. ஆனால் தூக்கத்தை இழந்து விட்டார். அது முதல் இன்றுவரை தூங்கியதே இல்லை. எவ்வளவோ மருந்துகளாலும் அவர் இழந்த தூக்கத்தைப் பெற முடியவில்லை.

* * *

## தீக் கத்தரிக்கோல்

உலோகங்களில் கடுமையான இரும்பையும் காகிதத்தை கத்தரிப்பதுபோல் கத்தரிப்பதற்காக ஒரு தீக்கத்தரிக்கோல் கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறதாம். இந்தக் கத்தரிக்கோலால் இரும்புகளை சுலபமாகக் காலப்போக்கின்றி, கஷ்டம் எதுவுமில்லாமல் கத்தரிக்கவும், சித்திரங்கள் போடவும் முடியுமாம்.

* * *

## கண்ணாடி மாளிகை

சிக்காகோவில் 100 அடி நீளமும். 60 அடி அகலமும், 50 அடி உயரமும் உள்ள ஒரு கட்டடம் சுத்த கண்ணாடிக் கற்களால் கட்டப்பட்டுள்ளது. அதில் ஒரு கோபுரமும் அமைக்கப்பட்டிருக்

# கதம்ப விநியோகம்

சென்ற ஜனக் கணிதப்படி இந்தியாவில் 2,62,48,468 விதவைகள் இருக்கிறார்கள். இவர்களுள் 1,50,00,000 பாலிய விதவைகள் இருக்கிறார்கள்.

---

பஸிபிக் சமுத்திரத்தின் ஆழம் 31,614 அடி. இந்துமகா சமுத்திரத்தின் ஆழம் 20,000 அடி. அட்லாண்டிக் மகா சமுத்திரத்தின் ஆழம் 27,366 அடி.

---

ருஷ்யாவில் கலைமான்கள் வண்டி யிழுக்கவும், சவாரி செய்யவும் உபயோகப்படுகின்றன.

---

உலகத்தில் ஒரு வருடத்தில் மொத்தம் 650 டன் எடையுள்ள பொன் வெட்டி எடுக்கப்படுகிறதாம்.

---

பாம்புகள் ஒன்றுமே தின்னாமல் இரண்டு வருடங்கள் வரை ஜீவித்திருக்கக் கூடுமாம்.

---

உலகத்திலேயே அதிக ஆழமுள்ள கிணறுகள் பெர்லின் பட்டணத்திலும், லூயிஸ் நகரத்திலும் உள்ளன. அவை முறையே 5000 அடியும் 4000 அடியும் ஆழம் உள்ளன.

---

ஆமையின் தலை துண்டிக்கப் படினும் அது 600 அடிகள்வரை உயிருடன் நகர்ந்து செல்லுமென்றும், அதன் ஈரலைத் தனியே எடுத்து வைத்தால் அநேக நாளைக்குத் துடித்துக்கொண் டிருக்கு மென்றும் கூறப்படுகிறது.

---

மனிதர்கள் ஆகாயத்தில் 60,000 அடி உயரம் வரையில்தான் போக முடியுமென்றும், அதற்குமேல் போனால் எந்த திரவ பதார்த்தமும் காற்றாக மாறி விடுவதால் மனிதனது ரத்தமும் கொதிக்க ஆரம்பிக்கின்றதென்றும் கூறுகின்றனர். காப்டன் யூவின் என்ற ஆகாய விமானி இது வரை 43,976 அடி உயரம் பறந்திருக்கிறார்.

---

இந்தியாவில் 6,89,781 பட்டணங்களும் கிராமங்களும் இருக்கின்றன.

---

சந்திர மண்டலத்தில் அநேக மலைகளும் பள்ளத்தாக்குகளும் உள்ளன. மலைகளில் சில 5 மைல் உயரம் இருக்கின்றனவாம்.

---

சென்னை, சைனாபஜார் ரோட்டில் பழ மார்க்கட்டு கட்டப்பட்டுள்ள இடமட்டும் ரூபா 67000-க்கு கார்ப்பொரேஷனால் வாங்கப்பட்டதாம்.

# சுகாதாரப் பகுதி

## வேம்பு - வேப்ப மரம்

[மிஸஸ். டாக்டர் கண்ணுசாமி, திருவாரூர்]

இந்த உலகத்தில் பிறந்த மக்களின் சுகத்திற் காதரவாகப் படைக்கப்பட்டுள்ள மூலிகை வர்க்கங்களிலெல்லாம் வேப்ப மரம் முதன்மை யானதென்று சொல்லலாம். இது, உடம்புக்குப் பிரதம ஆதாரமாகிய இரத்தத்தி லுண்டாகும் விஷக்கிருமிகளை அழித்து, தேகத்தி லுண்டான விஷ பதார்த்தங்களை நீக்கிப் பரிசுத்தப்படுத்துவதில் அரிய சக்தி வாய்ந்ததா யிருக்கிறது. இதன் சிறந்த குணத்தை அனுபவத்தில் கண்கூடாகக் கண்ட பெரியோர்கள் இதை ஓர் தேவாம்சமான மூலிகையென இன்றும், இந்த நவீன நாகரீகத்தில் முழுகிக் கிடக்கும் 20-ம் நூற்றாண்டிலும் போற்றி வருகின்றனர். விஷக்கடிகளுக்கும், இரத்தக் கோளாறுகளா லுண்டான சிரங்கு கட்டிகளுக்கும், நவீன முறையில் அம்மைப் பால் குற்றிய சீழ் இரணங்களுக்கும் இதை அரைத்துப் போடுகிறார்கள். சாதாரணமாக அதி வெக்கையால் மூளையும் உதிரமும் தாளாது, மூளை நரம்பு மண்டலக் கொதிப்பினால் உண்டாகும் வைசூரிக்கும் இதையே உபயோகிக்கிறார்கள். இந்நாளில் அம்மைப் பாலைக் குத்துவதால் அம்மை போடாமல் தடுக்கப்படலா மென்ற குருட்டு எண்ணத்தால் இந்திய அரசாங்கத்தால் கணக்கற்ற பொருள் செலவழிக்கப்படுகிறது. ஆனால், வேப்பம் இலையையோ, பட்டையின் கஷாயத்தையோ கட்டாயமாய் உபயோகிக்கும்படி ஜனங்களை அரசாங்கம் வற்புறுத்துமாயின் அம்மைப்பால் குத்துவதற்கும், கொக்கிப்புழு நோய்க்குச் சிகிச்சை செய்வதற்கும், சோகை பாண்டு என்னும் இரத்த முறிவுக்குரிய புழுவால் உண்டாகும் அனீமியா என்ற நோய்க்குச் சிகிச்சை செய்வதற்கும் ஒரு பைசாவும் செலவழிக்க வேண்டிய அவசிய மிராது. இந்த நோய்களும் விரைவில் தடுக்கப்படலாம். இதனால் இந்திய வறுமை நிலையில் கோடிக்கணக்கான பொருள் மிச்சமாகக் கூடியதோடு இந்த நோய்கள் அதிகமாய்ப் பரவாதபடி தடுக்கவும் முடியும்.

(இன்னும் வரும்)

# தமிழர் மாண்பு

(சென்ற இதழ் 48-ம்பக்கத் தொடர்ச்சி)

[A. S. முத்தைய முதலியார், B. A., திருவனந்தபுரம்]

(Rights Reserved)

முன்னொரு காலத்தில் ஓர் அந்தணன் காசி யாத்திரையாகப் புறப்பட்டான். அப்பொழுது அவன் இல்லக் கிழத்தி "இனி எனக்கு யார் துணை? யான தனியாக அல்லவா இருக்க வேண்டியது? என் செய்வேன்" என்று கூற, அந்தணன் தன் மனைவியைப் பார்த்து, "பெண்ணே! நீ யாதொன்றுக்கும் அஞ்ச வேண்டாம். நம்மைக் காக்கும் அரசன் நமக்கு யாதோர் துன்பமும் வாராமற் காத்துக்கொள்வான். தன்னால், தன் பரிசனத்தால், பகைத் திறத்தால், கள்வரால், பிற வுயிர் தம்மால் ஆன பயம் ஐந்தும் தீர்த்துக் குடிகளை ஆளும் ஆண்மை யுடையவன். அதனால் அரசன் உனக்குத் துணையாக வுள்ளான்" என்றான். இதை, அன்றிரவு மாறு வேடத்தில் நகரத்தைச் சுற்றிவந்த அரசன் செவியுற்றான். பிற்றைநாள் அந்தணன் காசியாத்திரை சென்றான். அன்று முதல் மன்னன் நாடோறும் அம்மங்கையின் வீட்டின் வழியாகச் சென்று காத்து வந்தான். சிறிது நாட் கழிந்து யாத்திரை சென்ற அந்தணன் திரும்பித் தன்வீடு வந்து சேர்ந்தான். இஃது அரசனுக்குத் தெரியாது. வழக்கம்போல் சென்ற போது அவ்வந்தணன் வீட்டில் ஓர் அரவங்கேட்டது. ஐயுற்றுக் கதவைத் தட்டினான். பின் இல்லுக் குரியவனே என்றறிந்து அவ் வீதியிலுள்ள வீடுதோறும் கதவைத் தட்டிச் சென்றான். மறு நாள் வேந்தன் திருவோலக்க மண்டபத்தில் இருக்கும் பொழுது, ஜனங்கள் வந்து குறை கூறினார்கள். உடனே அரசன் "இக்குற்றஞ் செய்தவனுக்குக் கொடுக்கத்தகும்தண்டனையாது?" என்று கேட்க, மந்திரி பிரதானிகள் "கையைத் துண்டுபடுத்த வேண்டும்" என்றார்கள். முன்பின் யோசியாமல் அரசன் தன் கையைக் குறைத்தான். குடிகள் வேண்டுகோளுக் கிணங்கி, பொன்னால் ஒரு கை செய்து வைத்துக்கொண்டான். அதனால் அப்பாண்டியன் பொற்கைப் பாண்டியன் எனப்பட்டான். இக்கதையினின்றும் ஓர் உண்மை விளங்கும். தனக்கென்றும், பிறர்க்கென்றும் வேறு வேறு நியாயம் இருந்ததில்லை. யாவரிடத்திலும் ஓரே நீதி செலுத்தினான் என்பது வெளிப்படை.

* * *



சிபிச் சக்கரவர்த்தியின் வரலாறு உலகப் பிரசித்தம். தன்னை வந்தடைந்த ஓர் புறவின் பொருட்டுத் தன் சதையையும் ஈந்து, தானும் துலையில் புக்கவன்.

"உலகறியக் காக்குஞ் சிறு புறவுக்காகக் களிகூர்ந்து
தூக்குந் துலைபுக்க தூயோனும்"

என்று சிறப்பித்துப் பாராட்டப்படுகின்றான். எந்த உயிர்ப் பிராணியிடத்திலும் அரசநீதி ஓரே மாதிரியாக இருந்தது என்பது தெளிவாகும்.

* * *

பிசிராந்தையார் என்ற புலவர் தனக்கு நரை யில்லாமைக்குக் காரணம் கூறும் பகுதி பாராட்டத் தக்கது.

"யாண்டு பலவாக நரையில வாகுதல்
யாங்கா கியரென வினவுதி ராயின்,
மாண்டஎன் மனைவியொடு மக்களு நிரம்பினர்.
யான் கண்டனையர் என்னிளையரும், வேந்தனும்
அல்லவை செய்யான் காக்கும். அதன்றலை
ஆன்றவிந் தடங்கிய கொள்கை
சான்றோர் பலர்யான் வாழுமூரே."

இதில் 'வேந்தனும் அல்லவை செய்யான் காக்கும்' என்பது அக்காலத்து நீதியின் தன்மையை வெளிப்படுத்துகின்றது. அறநெறி தவறாது ஆட்சி புரிந்தார்கள் என்பது நன்கு விளங்கும்.

* * *

ககந்தன் என்னும் அரசன் ஒரு காலத்தில் சோழநாட்டை ஆண்டு வந்தான். அவனுக்கு இரண்டு குமாரர்கள் தோன்றினார்கள். அவர்களில் மூத்தோன் வீதி வழியாகச் சென்ற போது, எழில் வாய்ந்தவளும், கற்பு என்னும் திண்மை யுடையவளும் ஆகிய விசாகை என்னும் பெண்மணியைக் கண்டான். உடனே காதல் வெள்ளம் கரை புரண்டது. அதைத் தடுக்க முடியாது, அம்மங்கையின்மேல் மையல் கொண்டான். அவள் கழுத்தில் மாலையிட தன் கையை உயர்த்தினான். அவள் கற்பின் மாண்பால், ஏறிய செங்கை விழாமல் அப்படியே நின்று விட்டது. இச்செய்தியை யறிந்த மன்னவன் தன் மகன் என்றும் பாராது, அவனைத் தன் வாளால் எறிந்தனன். பின் ஒரு சமயம் அவனுடைய இளைய மகன், 'மருதி' என்னும் பெயருடைய ஓர் பெதும்பையைக் கண்ணுற்று, காதல் கொண்டான். அவளருகிற் சென்று, "நீ வா" என்றனன். உடனே நேரிழை கலங்கி, அவணுள்ள ஓர் சாத்தன் கோயிற் சென்று முறையிட்டாள். "இற்றை ஏழாவது நாள் இவ்வூர் அரசன் அவனைக் கொல்லும்" என்று ஓர் அசரீரி எழுந்தது. மருதி சிறிது நேரங்

கழித்துத் தன்னில்லஞ் சென்றாள். இச்செய்தியை அறிந்தான் ககந்தன். துக்கக் கடலில் ஆழ்ந்தான், அவனையும் தன் மகனென்று மதியாது வாளால் வெட்டி வீழ்த்தினன். இக்கதைகளினின்றும் ஓர் உண்மை அறியக் கிடக்கின்றது. "அரைசியல் பிழைத்தோர்க்கு அறங்கூற்றாவதும்" என்ற உறுதி மொழியைக் கடைப்பிடித்து அரசர்கள் அமைந்து வாழ்ந்தார்கள். நீதி செலுத்துவதில் தன்னவனென்றும், அயலானென்றும் நினைத்தார்களில்லை. யாவரிடத்திலும் பட்சபாதமின்றி வழக்கைத் தீர்த்து வந்தார்கள்.

> " மாதவர் நோன்பும் மடவார் கற்பும்
> காவலன் காவல் இன்றெனின் இன்றாம்."

என்று மணிமேகலை ஆசிரியர் மிக அழகாக அக்காலத்து அரசியல் தன்மையை வெளிப்படுத்துகின்றார்.

ஊன் பொதி பசுங்குடையார் என்ற புலவர் சோழன் நெய்தலங்கானல் இளஞ்சேட் சென்னியை "நீ மெய்கண்ட தீமை காணின், ஒப்ப நாடி அத்தக ஒறுத்தி" என்று பாராட்டியுள்ளார். காரிகிழார் என்னும் புலவர் பாண்டியன் பல்யாகசாலை முதுகுடுமிப் பெருவழுதியை "தெரிகோல் ஞமன் போல ஒரு திறம்பற்றல் இலியரோ நிற்றிறஞ் சிறக்க" என்று சிறப்பித்துள்ளார்.

(தொடரும்)

நிவர்த்தியில்லை யென்றிருந்த

**யானைக்கால் நோய்க்கு**

அரிய மருந்து

**(நமது சுவர்ணகாந்தம்)**

பத்தியமில்லை

**6** வார மருந்து ரூ. **21**.

மிஸஸ். டாக்டர்.

**கண்ணுசாமி.**

திருவாரூர்.

# வந்துவிட்டதே! கவனித்தீர்களா?

'நினைவு'

இந்தத் தலைப்பைப் பார்த்தவுடன் சுற்றுமுற்றும் பார்த்துவிட்டு 'என்ன ஐயா, ஒன்றுங் காணவில்லையே, திடீர்ப் புளுகாயிருக்கிறதே' என என்னை ஏசத் தொடங்கிவிடாதீர்கள். சற்று பொறுமையாயிருங்கள்.

நான் சொல்லப்போவது சென்ற ஆண்டு சம்பவம். கடந்த ஆண்டில் நமது மித்திரனது வருகையை எதிர்பார்த்துப் பார்த்துக் கண்களும் பூத்துப்போன ஒரு தினம், இன்னும் வரவில்லையே என ஏங்கி வருந்திய ஒரு நாள், எங்கும் புதுமையைப் புகுத்தும் கதிரவன் திருநாள், மங்களப் புதுநாள் இவ்வாண்டில் வந்துவிட்டதே! அதைக் கவனித்தீர்களா?

இந்தக் குறையை அன்று நாம் வெளியிடுவதற்கு முன்பே நமது குறிப்பறிந்து கடந்த கார்த்திகை-மார்கழி இதழில், ஆசிரியரவர்கள் மூன்று முறை 'எனக்கில்லையா' என்ற தலைப்பில் தெளிவாக விளக்கியிருக்கிறார்கள். அதை இப்பொழுது ஒரு முறை தயவுசெய்து படித்துப் பாருங்கள்.

உலகமாகிய சோலையில் செழித்துள்ள மனித வர்க்கமாகிய தாவரங்களிலே எக்களிப்பு, குதூகலம், பூரிப்பு, மகிழ்ச்சி, ஆனந்தம் ஆகிய நறுமலர்கள் ஒருங்கே மலர்ந்து நறுமணம் வீசப்பெற்ற ஓர் நன்னாளில் நம்மவர் மட்டும் ஏமாற்றம், அதிருப்தி, வெறுப்பு ஆகிய துர்நாற்றத்துடன் வருந்தியதற்கு மனம் சகியாமல், நமக்கும் நறுமண இன்பமூட்ட எண்ணிய பகலவன் பரபரவென ஓராண்டைக் கடந்து பொங்கல் புது நாளைக் கொணர்ந்து விட்டான். அதைத்தான் கவனித்தீர்களா? என்றேன்.

* * *

'ஆம், நாம் கவனித்து என்ன செய்வது? காலம் க்ஷேமமாக இருந்தால் பரவாயில்லை. நாள் முழுதும் ஓயாமல் உழைத்தாலும் வயிற்றுப்பாட்டுக்கே கஷ்டமாக இருக்கும் இக் காலத்தில், இவைகளை எப்படி கவனிக்க முடியும்? வியாபார மந்தத்தினால் வறுமைப் பிணி நம்மைத் தொடர்ந்து வருகிறது. இந்த நிலையில் மித்திரனையும், சங்கத்தையும் எப்படித் தாங்குவது' என்கிறீர்கள்.

'எல்லா அதிகாரங்களும் தந்தையிடமும், தமயனிடமும் இருக்கின்றன. என்னிடம் பணமிருந்தால் வஞ்சகமில்லை. பெரியவர்களைக் கேட்டுக்கொள்ளுங்கள்' எனச் சிலர் வேஷம் போடுகிறீர்கள்.

'சங்கமாம், பத்திரிகையாம், குலாபிமானமாம் இதெல்லாம் பெரு நிதி படைத்தவர்கள் பொழுது போக்குக்காகச் செய்யும் வேலை. நாள் முழுதும் உழைத்தாலும் இரண்டணாவுக்கே இழுப்பாயிருக்கிற நமக்கு இந்தத் தொல்லைகளெல்லாம் எதற்கு? இனி இதில்

தலையிட்டால் என்ன செய்வேன் தெரியுமா?' எனச் சிலர் உங்கள் மக்களுக்கு அதிகாரச் சட்டம் போட்டுவிடுகிறீர்கள்.

'நான் அப்போதே சொன்னேனே; அது யாருக்கையா வேண்டும்? அதோ, மேலுறை பிரிக்காமல் கிடக்கிறது பாருங்கள். வேண்டுமானால் அவைகளை எடுத்துக்கொண்டு போங்கள். அவைகளைப் பிரித்துப் பார்க்க எங்களுக்கு நேரம் எங்கே இருக்கிறது. வந்து குந்திக்கொண்டால், இப்போது ஒண்ணரை ரூபாய் எங்கிருந்து தொலைப்பது' என்கிறீர்கள் சிலர்,

இருக்கட்டும். வறுமை, வறுமை எனக் கதறுகிறீர்களே, அது உண்மைதானா? நன்கு கவனித்துப் பாருங்கள். அது வெறும் போலி வேஷம் என்பது தெளிவாக விளங்கும். இதனால் நம்மவர்களிடத்தில் வறுமைப் பிணி தாண்டவமாடவில்லை என நான் சொல்வதாக நினைக்க வேண்டாம். வறுமை எனும் கொடிய அரக்கனது ஆட்சிக்குப் பெரிதும் ஆளாகி யிருப்பவர்கள் நம்மவர்களே. ஆனால் நமது கடத்தை அவனது ஆட்சிக்கு உட்பட்டதாக இல்லை என்பதுதான் எனது அபிப்பிராயம்.

வறுமையின் காரணமாய் எந்த பிடாரியின் உற்சவத்தைச் சுருக்கியிருக்கிறோம்! அநேகமாய்க் கோயில்களினாலேற்படுகிற எந்த வழக்குகளை ஒரு கை பார்க்காமல் விட்டிருக்கிறோம்! விழாக்களுக்கும், வழக்குகளுக்கும், கூத்துகளுக்கும் ஏற்படுத்தப் பெறும் வரியில் எதனைக் கொடுக்க நாம் தயங்கி யிருக்கிறோம்!

கல்யாண முதலிய விசேடங்களில் எந்த ஆடம்பரத்தில் அண்டை வீட்டுக்கு இளைத்திருக்கிறோம்! பைத்தியம் பிடிக்கச் செய்யும் ஸினிமா, ட்ராமா போன்ற எந்த கண் காக்ஷிகளைக் காணமல் அலட்சியம் செய்திருக்கிறோம்! கண்ணைத் திறந்து பாருங்கள். கோயில்கள், விழாக்கள், வழக்குகள், பண்டிகைகள், கொண்டாட்டங்கள், கூத்துகள், ஆடம்பரங்கள், கண் காட்சிகள் இவைகளில் எது அபிவிருத்தியாகாமல் வறுமையின் காரணமாய்க் குறைந்திருக்கிறது. வறுமைக் காற்று இவைகளின் இலையையேனும் சிறிதும் அசைக்க முடிந்ததா?

'மலை போன்ற சங்கராந்தி வந்துவிட்டது. நல்லதாக சேலை எடுக்கவேண்டும். பையனுக்கு உயர்ந்த சொக்காய் தைக்கவேண்டும். பெண், லலிதாவுக்கு இரண்டு அழகிய கவுன் தைக்க வேண்டும். ஏமாற்றிவிடாதீர்கள்' என மனைவி கடினமான கட்டளையிடுகிறாள். 'இவர்களுக்கெல்லாம் எடுக்கும்போது நாம் மட்டும் சும்மாயிருப்பதா?' என்று நீங்களும் முடிவு செய்துகொள்ளுகிறீர்கள். இவைகளுக்காக கொஞ்சமாவது இளைக்கிறீர்களா? அந்த வறுமைப் பேய் இங்கு தலைகாட்ட முடிகிறதா?

* * *

சங்கம் வைத்ததனாலேயே ஊருக்கு அழும்புத் தீ வந்துவிட்டது என சபித்துக்கொண் டிருந்தவர்கள் 'ஊரில் பிள்ளைகள் நாடகம் ஆரம்பிக்கப் போகிறார்கள்' என்று சொன்னவுடன் 'அப்பாடா,



ஊருக்கு இனி நல்ல காலம் பிறந்துவிட்டது. சங்கத்தார் வந்து போனார்களே; காலியாக்கிவிடுவார்களோ என்று பார்த்தோம். நாடகம் ஆரம்பிக்கிறார்களா? அதுதான் நல்லது. இந்த யாரும் வேண்டாம் என்கிறார்கள், இரண்டு, மூன்று நாடகம் அதிகமாகவே கற்றுக்கொண்டால் நமக்கு நல்ல மதிப்பாயும், ஊருக்கு கௌரவமாயும், கண்ணுக்கு இனிமையாயும் இருக்கும் என்று உற்சாகப்படுவோரின் எண்ணத்தைப் பூர்த்தி செய்யாமல் விடுகிறதில்லையே!

உண்மையாய்ப் பார்த்தால் எங்கு வறுமை என்னும் புகை கிளம்புகின்றதோ அங்குதான் செல்வந்தர்களும் அஞ்சத் தக்க பெரும் பொருள் வீண் விஷயங்களில் கரியாக்கப்படுகிறது என்பது நன்றாய்த் தெரியக்கூடும்.

மேற்சொன்ன எல்லாக் காரியங்கட்கும் பேச்சு மூச்சின்றி கட்டுண்ட பாம்புபோல் அடங்கிக் கிடந்த பாழும் வறுமை ஜுரம் உறங்கிக் கிடந்த நம்மை ஊக்கப்படுத்திய மித்திரனது காற்று பட்டவுடன் தானா உக்கிரமாக எழுந்து தனது பூரணமான 110 டிக்ரியையும் செலுத்தி வாட்டவேண்டும்!

பெரிய பெரிய மலையையுந் தாங்கத் தயங்கோமெனத் தோள் கொட்டித் தொடை தட்டும் நாம், இச் சிறு மணியாங் கல்லுக்குத் தளர்வதேன்? எவ்வளவோ அலை காற்றுக்கெல்லாம் அசங்காத நாம், இந்த நறுங்காற்றுக்கு நலிவதேன்? மித்திரன் வாசனை பட்டதும் சீறிப் பாயும் அக் கொடிய வறுமைப் புலியை குலாபிமானமாம் கோடரியால் வீசி எறியுங்கள். நீங்கள் ஒரு நாள் ஸினிமாவுக்குச் செலவழிக்கும் பணத்தை அவனுக்கு வழங்குங்கள். இன்னும் சிறிது தாராளமாய்க் கண் திறந்து உங்கள் விசேடங்களில் செலவழிக்கும் ஆடம்பரச் செலவில் ஒரு முப்பது ரூபாயைக் குறைத்துக்கொண்டு அதை மித்திரனுக்கு வழங்கிவிடுங்கள். அதன் பிறகு அவனைப் பாருங்கள். நாம் எந்த நிலையில், எவ்வளவு அழகாக அவனைப் பார்க்க விரும்பினாலும் அப்படியே அவன் குஷாலாய் வருவான். சற்று கண் திறந்து பாருங்கள். நமது பாஸ்கரன் மித்திரனை வஞ்சித்துவிடாதீர்கள்.

இதோ மித்திரனும் அழகிய உருவில் வந்துவிட்டான். பார்த்து மகிழுங்கள்.

---

தென்னிந்திய மகாஜன புத்தகசாலை
எல்லாப் புத்தகங்களும் விலைக்குக் கிடைக்கும்
வேண்டியவற்றிற்கு எழுதுங்கள்
செங்குந்த மித்திரன் ஆபீஸ்,
பவழக்காரத் தெரு, சென்னை.

# வைத்தியப் பகுதி

## கடி விஷங்கள்

மிஸஸ் டாக்டர், கண்ணுசாமி (சுந்தரத்தம்மாள்) திருவாரூர்

மக்கள் சரீரத்தில் உண்டாகும் நோய்களில் பல விஷக் கடிகளால் உண்டாகின்றன. இதைத் தெரிந்துகொள்ளாமல் அநேகர் வைத்தியம் செய்ய நேர்கிறது. நோயின் மூல காரணத்தைத் தெரிவிக்காமல் அநேக நோயாளிகள் வைத்தியம் செய்துகொள்வதால், வைத்தியர்கள் எவ்வளவு மருந்து கொடுத்தாலும் குணப்படாமல் ஒவ்வோர் சமயம் அதிருப்தி படுவதுமுண்டு. நோயுடையார் நோயின் தன்மை முழுதையும் வைத்தியரோ தெரிவிக்கின்றாரா எனப் பரீட்சிப்பது கூடாது. தனது நோயின் நிலையினை சற்றும் மறைவின்றித் தெளிவாக வைத்தியர்களிடம் தெரிவித்துவிடுதல் மிக அவசியமாகும்.

நோய்களில் பெரும்பாலானவை விஷப் பூச்சிகளின் கடிகளால் ஏற்படுவனவாகும். குட்ட நோயில், மேக ரோகத்தினால் உண்டாகும் கிரந்தி முதிர்ந்து அதனால் ஏற்படும் குட்டம் ஒன்று தவிர, மற்றப் பதினெட்டு வகைக் குட்டமும் விஷக் கடியினால் சம்பவிப்பனவாகும். மேக ரோகத்தினாலேற்படும் குட்டம், அவரவரது வாத பித்த சிலேத்துமங்களின் கூறுகளுக்கேற்ப மூன்று வகைப்படும்.

இதுவன்றி, காசம், க்ஷயம் முதலிய பல கொடிய வியாதிகள் விஷக் கடிகளின் விளைவென்பதிற் சிறிதும் ஐயமில்லை. விஷ சிகிச்சை என்ற மாந்திரீக சிகிச்சையானது சில குறிப்பிட்ட நாட்களுக்குட்பட்டதாயின் பயன் தருமேயொழிய, நெடுநாட்பட்டு இரத்தத்திற் கலந்து, விஷ மேக நீராகி, சுத்த இரத்தத்தை விஷமாக்கி தேகத்தில் நன்கு பரவிய பின் பெரிதும் பயன்படுவதில்லை. விஷ மேக குட்டம் முதலிய அசாத்திய நோயாகிவிடுகிறது. எனவே, விஷக் கடிகளின் தன்மையையும், அவற்றிற்குரிய பரிகாரங்களையும் ஒவ்வொருவரும் தெரிந்துகொள்ள வேண்டியது மிக அவசியமாகும்.

இந்த வைத்திய முறைகளில் எனக்குத் தெரிந்தவைகளை ஒளித்து வைத்து, நான் உயிர் துறக்கும்போது என்னோடு மறைந்து போகுமாறு செய்ய எனது உள்ளம் இசையவில்லை. எனவே, விஷக் கடிகளின் குணத்தையும், அதனாலுண்டாகும் நோய்களையும், அதற்குத் தகுந்த பரிகாரமாய் நான் கண்டுள்ள அநுபவ முறைகளையும் செங்குந்த மித்திரன் மூலமாகத் தொடர்ந்து வெளிப்படுத்த எண்ணியுள்ளேன், நேயர்கள் அநுபவத்தில் அதனைப் பயன்படுத்திக்கொள்வார்களாயின், அது எனக்குப் பெரிய மகிழ்ச்சியைத் தருவதாகும்.

### விஷக் கடிகளின் தன்மை

1. ஓணான் கடி :—கடித்த பாகம் காயமாகி வீங்கும். குத்தலும், எரிச்சலும் ஏற்படும். வலியும் அதிகமாயிருக்கும். சரீரம் சோர்வடையும்.



2. வண்டு கடி :—கடித்து அல்லது கொட்டின இடத்தில் வீங்கித் தடித்து எரிச்சல் உண்டாகும். நீர் வடியும். தடிப்பு மாறாமல் இருக்கும்.

3. தவளை கடி :—கடிவாயிலும், அதைச் சுற்றிலும் கறுத்த சொரி கண்டு, நித்திரையும் மூர்ச்சையும் ஏற்படும்.

4. பல்லி கடி :—கடிவாயிலும் சுற்றிலும் சிறு கொப்புளங்கள் சிறங்குபோல் உண்டாகும். சிறிது வீக்கமும்; எரிச்சலும் காணும்.

5. காட்டு ஈ கடி :—இது கடித்திருக்குமாயின் அதிக நித்திரையும், மூர்ச்சையும் உண்டாகும்.

6. காட்டுக் கொசு கடி :—இந்த விஷக் கொசு கடித்தால் கடிவாயில் வீக்கமும், நமைச்சலும் ஏற்படும்.

(தொடரும்)

---

## குடும்ப வைத்தியம்

டாக்டர். கண்ணுசாமி, திருவாரூர்

இலுப்பைக் கொழுந்தை அறைத்து, கறந்த சூடாறாத பசுவின் பாலில் குழப்பி, பெண்கள் வீட்டு விலக்கான மூன்றாவது நாள் காலையில் தலை முழுகியவுடன் கொடுத்தால், வீட்டு விலக்கான காலத்தில் உண்டாகும் வயிற்று நோய் நீங்கி கர்ப்பமுண்டாகும். கர்ப்பாசய இரணம், வெட்டைச்சூடு, உதிரப் பெருக்கு முதலியனவும் குணமாகும்.

---

எள்ளூறிய தண்ணீரைத் தினந்தோறும் சிறிது கொடுத்துவந்தால் சூதக பந்தம் நிவர்த்தியாகும்.

---

கண்டங்கத்திரியும், திப்பிலியும் சேர்த்து கஷாயம் வைத்துத் தேன் சேர்த்துக் கொடுத்து வந்தால் ஈளை, சளி, கபம், இருமல், அதனாலேற்படும் சுரம் இவைகள் நீங்கி பசியுண்டாகும்.

---

தூதுவளம் பூ, இலை, துளிர்களை தினசரி ஆகாரங்களுடனாவது அல்லது தனியே நெய் விட்டு வதக்கியாவது உபயோகித்து வந்தால் இரத்தவிர்த்தியும், தாது புஷ்டியும், தேகபலமும் உண்டாகும். எவ்விதமான காச நோயும், நேத்திர வியாதிகளும் குணமாகும்.

---

# சிறுவர் சிறு கதை

## 1. செருப்புத் தைக்கும் குட்டிச்சாத்தான்

[மு. சோ. கோவை.]

அநேக வருடங்களுக்கு முன், ஓர் ஊரில் ஒரு செருப்புத் தைப்போன் வாழ்ந்து வந்தான். அவன் யாதொரு தவறும் செய்யாமல் இருந்தும் ஏழையாய்ப் போய்விட்டான். நாளுக்கு நாள் சாப்பாட்டிற்கே திண்டாட்டமாய்விட்டது. ஒரு நாள் சகல உடைமையும் போய், உண்ணவும் ஆகாரத்திற்கு வழியற்று, ஒரே ஒரு தோல் துண்டு மாத்திரம் அவனிடம் மிஞ்சிற்று. 'மறு நாள் விடிந்ததும் ஜீவனத்திற்கு என்ன செய்வது?' என்று எங்கினான். எஞ்சி நின்ற தோலையாவது வெட்டி வைப்போம் என எடுத்து அறுக்கவே அது சரியாய் ஒரு ஜோடி செருப்புக்குப் போதிய அளவே இருந்தது. 'சரி, காலையில் தைக்கலாம்' என்று சொல்லிக்கொண்டே அதை வழக்கமாகத் தான் செருப்புத் தைக்கும் பலகைமேல், தைக்கும் சாமான்களுடன் வைத்துவிட்டுத் தூங்கப் போனான். ஒரு வித குற்றமும், திருட்டும் செய்யாத அவன் பரிசுத்த மனச் சாக்ஷி உடையவனாயிருந்ததால் நிம்மதியாகத் தூங்கிவிட்டான்.

வழக்கம்போல் காலையில் எழுந்து குளித்துவிட்டு அவன் தனது செருப்புத் தைக்கும் பலகையண்டை வந்தான். ஆனால் அங்கே ஒரு பெரிய அதிசயத்தைக் கண்டான். அஃதென்னவென்றால், அவன் முந்திய இரவு வெட்டி வைத்த தோல் துண்டுகளுக்குப் பதிலாக செவ்வையாகத் தைக்கப்பட்டிருந்த இரண்டு செருப்புகளிருந்தன. அவை மிக ஒழுங்காகவும், உறுதியாகவும் தைக்கப்பட்டிருந்தன. அவை எப்படி வந்தன என்று பார்த்து ஆச்சரியப்பட்டுக்கொண்டிருந்தான்.

அப்போது வழக்கமாகச் செருப்பு வாங்குபவன் ஒருவன் அங்கு வந்து அந்த ஜோடி செருப்பின் வேலைப்பாட்டைக் கண்டதும் வழக்கத்திற்குமேல் அதிக பணங்கொடுத்து வாங்கிக்கொண்டு போனான். நமது செருப்புக்காரனுக்கு நான்கு ஜதை செருப்புக்குத்தோல் வாங்கியும் பணம் மிஞ்சிற்று. அன்றிரவு 4 ஜோடிக்குத் தோல் கத்தரித்து வைத்துவிட்டுத் தூங்கினான். மறு நாள் காலையிலும் முன்போலவே வெகு அழகாகச் செருப்புத் தயார் செய்யப்பட்டிருந்தது. இப்படியே சில நாட்களில் செருப்புத் தைப்போனுக்குச் செல்வம் பெருகிற்று. பணக்காரனாகிவிட்டான். எத்தனை ஜதை வேண்டுமானாலும் ஒரே இரவில் செய்துவிடுவான் என்று பேராயிற்று. ஆனால் அவன் எளிய வாழ்க்கையே வெகு நாள் நடத்தி வந்தான்.

இப்படியிருக்குங்காலை தைப் பொங்கல் காலம் வந்தது. செருப்பாளி, தன் மனைவியிடம், 'அடியே! யார் நமக்கு இவ்வளவு உதவி செய்து வருகிறார்கள் என்று இன்று இரவு ஒளிந்துகொண்டிருந்து பார்க்கலாம்' என்றான். அவளும் அப்படியே செய்யலாம் என்று சம்மதித்தாள். வழக்கம்போல் கத்தரித்த தோலை பலகைமேல் வைத்துவிட்டு அறையின் ஒரு மூலையில் துணிகளுக்குப் பின்னால் இருவரும் ஒளிந்துகொண்டார்கள்.



இரவு மணி பன்னிரண்டடித்தது. உடனே இரண்டு நிர்வாணமான குள்ளக் குட்டி மனிதர்கள் குதித்துக்கொண்டு பலகைப் பக்கம் வந்து உட்கார்ந்தார்கள். உடனே தோல் துண்டுகளை எடுத்து பரபரவென்று அவர்கள் சிறிய கைகளால் அறுக்கவும், நறுக்கவும், தைக்கவும், வெட்டவும், அடிக்கவும் ஆரம்பித்தார்கள். அவர்கள் சிறிய கைகளின் சுறுசுறுப்பான வேலைப்பாட்டைக் கண்டதும் செருப்பாளி ஆச்சரியத்தோடு கண் இமை கொட்டாமல் அவர்களையே பார்த்துக்கொண்டிருந்தான். அவர்கள் வெகு சீக்கிரத்தில் தைத்து முடித்துவிட்டு எல்லாம் ஒழுங்காய் வைத்துவிட்டு, சரேலென்று வெளியே ஓடிவிட்டார்கள்.

மறு நாள் செருப்பாளியின் மனைவி, 'இவ்வளவு உதவி செய்து வருகிறார்களே அவர்களுக்கு நம் நன்றியைக் காட்ட வேண்டும். பாபம், குளிரில் பிறந்த மேனியராய் திறந்த வெளியில் நடமாடுகிறார்களே. நாம் ஏதாவது ஆடை செய்து கொடுக்கலாம். நான் சட்டை, சராய், குல்லாய் முதலியனவும், நீ அவர்களுக்குச் செருப்புமாகத் தைத்துக் கொடுப்போம்' என்று புருஷனிடம் சொன்னாள். அவனும் ஒப்புக்கொண்டு அவ்வாறே செய்தான்.

அன்றிரவு செருப்புக்கு வேண்டிய தோல் துண்டுக்குப் பதிலாக புது செருப்பு. துணிமணிகளை பலகை மேல் வைத்துவிட்டு ஒளிந்துகொண்டார்கள். வழக்கம்போல் மணி பன்னிரண்டடித்ததும் இரு குள்ளர்களும் உள்ளே வந்து பலகைப் பக்கம் உட்கார்ந்து வேலை செய்ய கையை நீட்டினார்கள். ஆனால் அங்கு தோலில்லாமல் சட்டை, சராய் முதலியவற்றைக் கண்டதும் அதிக சந்தோஷத்தையும், ஆச்சரியத்தையும் காட்டினார்கள். மின்னல் மின்னி மறைவது போல் அவற்றை உடுத்துக்கொண்டு பொடி மனிதர் இருவரும் நாற்காலி, மேஜை, பலகை, தட்டுமுட்டுச் சாமான்கள் மேல் தைத்தா, தைத்தா என்று குதித்தார்கள்.

'கறுக்கென்று செருக்குடன் குதிக்கலாம் வெகுஜோரிது

கிறுச்கென்று விடலாம் செருப்பறுக்கும் அவதூறிது'

என்றுபாடிக்கொண்டும் குதித்துக்கொண்டும் வீட்டைவிட்டு வெளியே சென்று மறைந்தனர். அதன்பின்னர் அவர்கள் திரும்பி வரவே இல்லை.

செருப்பு தைப்போன் மறுபடியும் எளிய வாழ்வுடன் தானே வேலை செய்து சுக வாழ்வை நடத்தி வந்தான்.

குறிப்பு :—

| | |
|---|---|
| 1. செருப்பு தைப்போன் | 1. ஒவ்வொரு தொழிலாளியையும் குறிப்பது |
| 2. உணவின்மை | 2. தரித்திரமான வாழ்க்கை நிலை. |
| 3. நிர்வாண இரு குள்ளர் | 3. சுறுசுறுப்பும், விடாமுயற்சியும் ஆடம்பரமுமில்லாத எளிய வாழ்வு |
| 4. சட்டை, சராய் தைத்தல் | 4. சோம்பற்கு இடங்கொடுத்தல் |
| 5. வேலை செய்யாது குதித்தல் | 5. டாம்பீக வாழ்வு |
| 6. குள்ளர் ஓடிவிடல் | 6. தொழிலில் சுறுசுறுப்பு குறைதல் |

# எனது ஜென்ம விரோதிகள்

['கச்சி யடிகள்']

(சென்ற இதழ் 35-வது பக்கத் தொடர்ச்சி)

பரிணாமக் கொள்கையில் எனக்கு நம்பிக்கையுண்டு. சிறிய வஸ்துக்கள் விகசித்து வளர்ந்து, பெரிய பொருள்களாகின்றன என்பது பரிணாமவாதக் கொள்கை. இதன்படி குரங்கிலிருந்து தான் மனிதன் உண்டானான் என்று டார்வின், எல்கின் முதலியோர் தீர்மானித்திருக்கிறார்கள். இதைப் பற்றி நான் மேலும் ஆராய்ச்சி செய்து என் மூளையை தலைகீழாய்ப் புரட்டிவிட்டேன். அப்போது மனிதன் வளர்ந்துதான் யானையா யிருக்கவேண்டுமென்ற ஞானம் தோன்றியது. ஆனால் கடைசியில் அந்த ஞானம் அஞ்ஞானமாய்ப் போயிற்று. யானை அறிவுடையதா யிருந்தாலும் மனிதனிலிருந்து உண்டானதல்ல வென்றும், அது கொசு வர்க்கத்தைச் சேர்ந்ததென்றும் கொசுவிலிருந்தே யானை உண்டாயிருக்க வேண்டுமென்றும், குரங்கு—மனிதன் சம்பந்தம், கொசு—யானைக் கிருக்கிறதென்றும் முடிவாகத் தீர்மானித்தேன். அப்படித் தீர்மானித்ததற்கு அனேக காரணங்கள் இருக்கின்றன.

யானையைப்போல் கொசுவுக்குத் துதிக்கை யுண்டு. யானை துதிக்கையால் தண்ணீர் உறுஞ்சும், கொசுவும் துதிக்கையால் ரத்தத்தை உறுஞ்சுகின்றது.

* * *

ஆனால், யானைக்கும் கொசுவுக்கும் கொஞ்சம் வித்தியாச மிருக்கிறது. யானையை மனிதன் வேட்டையாடிப் பழக்கி வேலை வாங்குகிறான். கொசுவை மனிதன் வேட்டையாடுவதில்லை. கொசுதான் மனிதனை வேட்டையாடுகிறது. யானையின் வாசஸ்தலம் மக்கள் வாசமில்லாத காடு. கொசுவின் வாசஸ்தலமோ ஜனநெருக்க முடைய பெரிய நகரங்கள்.

* * *

ஒரு நாள் ஒரு கொசுவுக்கும் எனக்கும் பெரிய மல்யுத்தம் நடந்தது. கடைசியில் தோல்வி என்பக்கந்தான். இது கேட்டு, சே! இவன் பெரிய வெண்ணெய் வெட்டிச் சிப்பாய்! என்று என்னை எளனஞ் செய்து கக்—கக்—கக்—என்று சிரிக்கிறீர்கள். இருக்கட்டும். இதே தோல்வியை நீங்கள் ஒருநாளைக்கு ஒத்துக்கொள்வீர்கள்.

எனக்கும் கொசுவுக்கும் நேர்ந்த யுத்த ஆரம்பமே என்னைத் திடுக்கிடச் செய்கிறது. கொசுவைப் பார்த்தால் என்பாடு ஜுரந்தான். ஆகவே முதலில் நான் யுத்தபேரிகையை முழக்கவில்லை. கொசுதான் என் மார்மீதமர்ந்து உறங்கிக்கொண் டிருந்த என்னை எழுப்பி, உண்மை வீரனைப்போல் யுத்த முழக்கம் செய்தது. அதன் பிறகு நான் மூஸ்தீப்பு செய்யாமலிருக்க முடியுமா? மனதைத் தேற்றிக் கொண்டு சண்டைக்குப் புறப்பட்டேன். கொசுவை அவசர அவசரமாய்ச் சிறைப்படுத்த எண்ணி கையை ஓங்கினேன். கை கிட்டே போகும்வரை சாவதானமாய் உட்கார்ந்திருந்தது. அகப்பட்டான் தும்மட்டிக்காய்ப் பத்தன் என்று ஆனந்தித்தேன். கையை மெதுவாகத் திறந்தேன். உள்ளங்கையும் விரல்களுமே இருந்தன. கொசு எப்படியோ சாமர்த்தியத்துடன் தப்பி ஓடிவிட்டது. ஆனால், அத்துடன் அது என்னை விட்டுச் செல்லவில்லை. ராமச்சந்திரப் பிரபுவை மாயமான் எய்த்து வந்ததுபோல் கொசுவும் என்னைப் பல முறை ஏமாற்றிக் கொண்டே இருந்தது. இந்த அற்பப் பிராணியிடம் இன்று தோற்கும்படி அந்தப் பிரமன் படைத்தானே என்று சீறினேன். அப்போது பிரமன் பக்கத்தில் இருந்தால் நான்கு தலைகளில் ஒன்று மறைந்தே போயிருக்கும் என்பது நிச்சயம். கொசு இரவு முழுதும் 'மனிதர்கள் வீண் பேச்சுக்காரர்கள், கையிலாகா........' என்று என் காதின் கிட்டே வந்து ஏசிக்கொண்டே இருந்தது.



* * *

கொசுவினிடம் சில நல்ல குணங்களு முண்டு. ஏழைகளிடத்தில் அது மிகுந்த இரக்க முடையது. ஏழைகளின் சுகதுக்கத்தை உடனிருந்து பங்கிட்டுக் கொள்ள அதற்கு எப்போதும் விருப்பம். ஏழைத் தொழிலாளிகளின் குடிசைகளில் வசிப்பது போன்ற ஆனந்தம் அதற்கு வேறு இல்லை. செல்வந்தர்கள் வாழ்கின்ற நல்ல காற்றோட்டமுள்ள சுக விலாஸ், ஆநந்தபாக், சண்முக நிலையம், மணிபவனம் முதலிய பெரிய பங்களாக்களைப் பார்த்தால் அவை சபித்துக்கொண்டு போய் விடும். இந்தியாவில் முக்காலே மூன்றரை வீசம் பேர் சாக்கடையே சமையலறையாய் வசிக்கிறபோது இவர்களுக்கு மட்டும் பங்களா வாசமோ' என்று இகழ்ந்து விட்டு ஏழைகள் வீட்டை நாடிப்போகும். என்ன அற்புத ஞானம் பார்த்தீர்களா?

கடனில் மூழ்கி பிராணன் போகும் நிலையிலுள்ள விவசாயிகளையும் கவர்ன்மெண்டார் நிலவரிக்காக சாறு பிழிந்து விடுகிறார்களே; கொசு ஒருக்காலும் அப்படிச் செய்வதில்லை. கொசுவின் ஆகாரத்திற்காகவே மனிதன் படைக்கப்பட்டான் என்பது உண்மையாயினும், மனிதன் உடம்பில் ரத்தம் உள்ளவரையில்தான் கொசு கொஞ்சம் பங்கிட்டுக் கொள்ளும். ரத்தமற்றவனிடம் சென்று அது எப்போதும் வம்பு வழக்காடுவதில்லை.

* * *

இந்த நாகரீக உலகத்திலும் மனிதர்கள் தங்களுக்குப் பொதுவாய்க் கிடைக்கும் பொருள்களை சமமாய்ப் பங்கிட்டுக் கொள்ளாமல் சண்டையிட்டுக் கெட்டு விடுகிறார்கள். மனிதன் கொசுக்களுக்குப் பொது உணவாயிருந்தும் பங்கிட்டுக் கொள்வதில் தமக்குள் அவை சண்டையிடுவதே இல்லை. 'முடிந்த வரையில் அவரவரும் உறுஞ்சிக் கொள்வோம்' என்ற பெருநோக்கத்துடன் அவை கூடிவாழ்கின்றன மனித உற்பத்திக்கு முன் பெரிய கொசுக்கள் சிறிய கொசுக்களை அடித்துத் தின்று வந்தன வென்றும், இதனால் அடிக்கடி சண்டை நேர்ந்து வந்ததென்றும், அதைத் தவிர்ப்பதற்கே கருணைவள்ளலாங் கடவுள் மனிதனை உற்பத்தி செய்தாரென்றும், அது முதல் அவை சண்டையிடுவதே கிடையாதென்றும் மிருகோபநிஷத், கொசுச் சாகை 001-வது ஸ்லோகம் கூறுகிறது.

'ஒவ்வொரு வஸ்துவும் மனிதனுடைய உபயோகத்திற்கென்றே படைக்கப்பட்டவை' என்பது அநேகருடைய முடிவான சித்தாந்தம். அதன்படி கொசுவினால் மனிதனுக்கு என்னென்ன நன்மைகள் உண்டாகின்றன என ஆராய்ந்து கீழ்க்கண்ட நான்கு உபயோகங்கள் உண்டாவதாக முடிவு செய்திருக்கிறேன். அவைகளாவன:—

(1) மனிதர்கள் ரத்த புஷ்டியினால் சில அடாத செயல்கள் புரியக்கூடுமாதலின், அவர்கள் ரத்தத்தை உறுஞ்சி தீச்செயல் புரியாது தடுக்கின்றன.

(2) ஈயாலோபிகளிடத்திலும் ரத்த தானம் பெற்று அவர்களைக் கிருதார்த்தர்களாக்குகின்றன.

(3) 'நீயே பெரியவனெனத் தருக்கி யிராதே; சிற்றுளியால் கல்லுந் தகரும்' என்ற உண்மையை நடத்தையில் காட்டுகிறது.

(4) அம்மைப் பாலைக் குத்தி அம்மை வராமல் தடுப்பது போல், மலேரியா உள்ளவர்களிடம் சென்று கடித்து, அந்தப்பாலைத் தன் துதிக்கையில் ஏற்றிவந்து நமக்குக் குத்தி, மலேரியா வராமல் தடுக்கிறது (கொசுவினால் மலேரியா பரவுகிறது என்பது தவறான சித்தாந்தம். அப்படியானால் அம்மைப்பால் குத்துவதால் அம்மை விருத்தியாக வேண்டுமல்லவா.)

அந்த நான்கு உபகாரஞ் செய்யுங் கொசுவை நீங்கள் துன்புறுத்தாதீர்கள். கொசுவலையால் அதைக்கிட்டே வராதபடி தடுத்து விடாதீர்கள்.

என் விஷயம் என்ன என்று கேட்பீர்கள். இருண்டவன் கண்ணுக்கு மருண்டதெல்லாம் பேயல்லவா? நான் முதலில் அதனிடம் பயந்து விரோதப்பட்டு விட்டேன். ஆகையால் இனி அதை சிநேகம் செய்வது முடியாத காரியம். அல்லாமலும், நான் சொல்லுகிறபடி செய். நான் செய்கிறபடி செய்யாதே' என்ற குருபரம்பரையை நான் சேர்ந்தவன். ஆகையால் நீங்கள் என்னைப் பின்பற்றவேண்டாமெனக் கடுமையாக உத்தரவிடுகிறேன். நீங்கள் குருவுக்கு மிஞ்சின சிஷ்யனாயிருந்தால் அதனால் வரும் பலாபலன் உங்களுடையதே. வந்தனம். போய் வருகிறேன். அடுத்த மாதம் உங்களைச் சந்தித்து என் கடையை விரிக்கிறேன்.

---

## புதிய பரம்பரைச் சந்தாதாரர்கள்

M. நடேச முதலியார்,
'சுந்தர விலாஸ்,' சைதாப்பேட்டை.

T. துரைசாமி முதலியார்,
சுப்பிரமணிய சுவாமி கோவில் தெரு,
சைதாப்பேட்டை.

# செங்குந்த யாத்திரைவாசி

எனதரிய சகோதரர்களே! நறுமணத்தில் கோடிலிங்க முதலியார் என்ற யோகீந்திரர் வாசித்த 'யான் கண்ட கனவு' அல்லது 'நவவீரர் அவதாரம்' என்ற கட்டுரை சென்றமாத மித்திரனோடு முற்றுப்பெற்றது. அதையான் ஆரம்பித்து இரண்டு வருஷங்களுக்குமேல் ஆனபடியால் இதனிடையே யான் செய்த யாத்திரையின் அனுபவத்தை இது வரையில் வெளியிடாதிருந்ததைப்பற்றி உங்களில் அநேகருக்கு அதிருப்தி உண்டாயிருந்தாலு மிருக்கலாம். ஆயினும் கோடிலிங்க யோகிகளுக்கு யான் தந்த வாக்குறுதியை முன்னர் பூர்த்தி செய்து விட்டுப் பின்னர் என் யாத்திரானுபவத்தைச் சொல்லலாமென்று எண்ணினேன். எப்படியோ அதைப் பூர்த்தி செய்து விட்டேன். இனி என் யாத்திரையைப் பழையபடியே தொடர்ந்து சொல்லுகிறேன். ஆனால் யான் ஆரம்பத்திலேயே கூறியுள்ளபடி நடந்தவற்றை முன் பின்னாகவும், பின் முன்னாகவும் என்னிஷ்டப்படி மாற்றிச் சொல்லும் உரிமை எனக்குண்டு என்பதை உங்களுக்கு ஞாபகப்படுத்துகிறேன்.

## வட ஆற்காடு ஜில்லா

### கலவை சுந்தர விநாயகர் செங்குந்தர் சங்கம்

கலவை என்னும் ஊரில் மேற்படி சங்கத்தின் ஆண்டு நிறைவு விழா நடைபெறுவதாயும், அதற்கு நமது இயக்கம், மித்திரன் முதலியவற்றிற்குத் தந்தையாராகிய உயர் சைவத்திருவாளர் தி. நா. சபாபதி வள்ளலாரும், மற்றும் சில தலைவர்களும் விஜயஞ் செய்வார்களென்றும் யான் கேள்வியுற்று குறித்த தேதியில் கலவையை அடைந்தேன். வள்ளலார் தலைமை வகித்தார். ஊர்வலமும், உபந்யாசங்களும் வெகு விமரிசையாக நடந்தன. அவற்றைப்பற்றி யான் ஈண்டு யாதொன்றும் விரித்துச் சொல்லப் போவதில்லை. அங்கு நிகழ்ந்தவற்றுள் எனக்கு விசேஷமெனத் தோன்றிய இரண்டொன்றைப் பற்றி மாத்திரம் கூறுகிறேன்.

கலவைச் செங்குந்தர்கள் மற்ற ஊர்ச் செங்குந்தர்களுக்குச் சற்றும் இளைத்தவர்களல்ல என்பதைச் சிறிது நேரத்தில் தெரிந்து கொண்டேன். நம்மவர்களுக்குச் சகசமாயுள்ள கக்ஷிக்குறும்புத்தனம் இவர்களையும் விட்டகலவில்லை. விழாவின் முடிவில் கக்ஷி ஒருவாறு ஒழிந்தது. ஒழிந்ததென்றால் அவ்வூரில் அதன் பிறகு கக்ஷியே இல்லையென்று எண்ணிவிடாதீர்கள். கல்லெறியால் விலகிய பாசி எவ்வளவு காலம் கூடாதிருக்கும்? நிமிர்த்திவிட்ட சுருட்டை மயிர் எவ்வளவு நேரம் ஒழுங்காய் நிற்கும்? வளைந்த நாய்வாலை நேராக்கி விட்டால் எவ்வளவு காலம் அது வளையாது நிற்கும்? அவ்வளவு காலந்தான் கலவையில் கக்ஷி யகன்றிருந்தது. இவர்கள் குணத்திற்கு இதற்குமேல் உவமானம் கூறப்புகுந்தால் என்பேனாவிற்கும், மித்திரன் ஏட்டிற்கும்

பெருமை குலைந்து விடுமென்று இதனோடு விட்டுவிடுகின்றேன். இதனால் கலவை சங்கத்தாரையும், ஏனைய பெரியோர்களையும் இழித்துக் கூறுவதாக எண்ணலாகாது. குடம் நிறைய உள்ள பாலைக் கெடுப்பது ஒரு துளி விஷமே என்பதை மறக்கலாகாது.

## உயர் திரு. சிங்காரவேலு முதலியார்

ஷை விழாவைச் சிறப்புற நடத்தும் பொருட்டு ஷை சங்கத்தாருக்குப் பேருதவி செய்தவர், அவ்வூர் பரிபாலன சபைத் தலைவரும், ஐக்கிய நாணய இயக்கம் முதலிய பல பொதுஜன சேவைகளில் பெரிதும் ஈடுபட்டு உண்மையாய் உழைத்து வருபவருமாகிய உயர்திரு. சிங்காரவேலு முதலியார் அவர்களேயாவர். திரு. முதலியார் அவர்கள் நமது வள்ளலாரும், பிறரும் தம்மூருக்கு வருகிறார்கள் எனத் தெரிந்து, ஒரு சிறிதும் சிரமம் பாராது செய்துவைத்த சௌகர்யங்களை ஈண்டு விரித்துரைக்க இயலாது.

திரு. முதலியார் அவர்கள் பரம்பரையாய் செல்வாக்குள்ள ஒரு வேளாள குடும்பத்தில் தோன்றியவர். கல்வி கேள்விகளில் தேர்ந்தவர். இவற்றோடு நன்மணம் வீசும் பொன்மலரே போல் சொல்வன்மையும் நன்குவாய்க்கப் பெற்றவர். இத்தகைய சீரும் சிறப்பும் பொருந்திய திரு. முதலியார் அவர்களே ஷை விழாவினைத் திறந்துவைத்தார்கள். அச்சமயம் அவர்கள் நிகழ்த்திய பேருரையினிடையே பல ஒள்ளிய மணிகள் சிந்தின. அவற்றுள் சிரோமணி போல் விளங்கிய சிலவற்றைக் குறித்து ஈண்டு கூறுவது அநாவசியமாகாது.

(வேளாளராகிய) 'நீர் செங்குந்தர் சங்கத்திற்காக என் இவ்வளவு பாடுபடுகிறீர்? நீர் என்ன ஒரு செங்குந்தரா?' என்று என்னைச் சில நண்பர்கள் கேட்டார்கள். அப்போது அவர்களுக்கு 'ஆம் நானும் ஒரு செங்குந்தன் தான். எவ்வாறெனில், நான் செங்குந்தர் வீதியில் செங்குந்தர்களிடையே பிறந்தேன்; என் பெற்றோர் அவ்வீதியிலே இருந்தபடியால் நான் செங்குந்தர்களிடையே செங்குந்தச் சிறாரோடு உண்டு, உறங்கி, விளையாடி வளர்ந்தவன். நெருக்கமான பழக்கத்தால் எனக்குத் தமையன் தம்பிகளும், தமக்கை தங்கைகளும், மாமன், மாமிகளும், நண்பர்களும் அவர்களிடையே அநேகர் இன்றும் இருக்கிறார்கள். அவர்கள் இன்ப துன்பங்களை என்னுடைய இன்ப துன்பங்களாகக் கருதுகிறேன். ஆகையால் நானும் ஒரு செங்குந்தன் என்று என் சொல்லிக்கொள்ளக் கூடாது' என்று பதிலளித்தேன். (ருஷி குமாரத்தியாகிய வள்ளியம்மையார், குறவரிடை வளர்ந்த காரணத்தால் குறப் பெண் என்று வழங்கியதை இவர் கூற்று ஒத்திருத்தல் காண்க.) இவ்வரிய சொற்கள் என் மனதை நெக்குவிட்டு உருகச் செய்தன. திரு. முதலியாரது சமயோசித புத்தியையும், பெருந்தன்மையையும் கண்டு ஆச்சரியப்பட்டேன்.

வாலாஜா தாலுக்கா போர்டு தலைவராகிய உயர்திரு. ஸ்ரீனிவாஸ முதலியார் அவர்கள் இவ் விழாச் சம்பந்தமாகக் காட்டிய ஊக்கமும் பாராட்டத் தக்கதேயாம். ஆண்டு விழா குறித்த நாளில் நடைபெறாது ஒரு நாள் தள்ளி வைக்கப் பெற்றும் இரண்டு நாளும் வாலா



ஜாவிலிருந்து கலவைக்கு வந்து, விழா சிறப்பாக நடைபெற வேண்டுமென்று மிகுந்த ஆர்வத்தோடு ஊக்கங் காட்டிய திரு. ஸ்ரீநிவாஸ முதலியார் அவர்களுக்கும், மேற்படி சிங்காரவேலு முதலியார் அவர்களுக்கும், நமது மகாநாடுகளுக்கும் இவ்வாண்டு விழா உள்பட அநேக கிளைச் சங்க ஆண்டு விழாக்களுக்கும் விஜயஞ் செய்து நமக்கு ஊக்கமளித்து வரும் வாலாஜாபாத் இந்து மத பாடசாலையின் தந்தையார் உயர்திரு. மாசிலாமணி முதலியார் அவர்களுக்கும், பிறருக்கும் நமது சமூகத்தின் சார்பாக யான் மனமார்ந்த வந்தனத்தைச் செலுத்தக் கடமைப்பட்டுள்ளேன். மேற்படி மூன்று கனவான்களும் வேளாள மரபைச் சார்ந்தவர்கள் என்பதை ஞாபகம் வைத்துக்கொள்ளுங்கள்.

## நாலடி

நறுமணத்தை விட்டுப் புறப்பட்ட யான் அன்று மாலை 3 மணிக்கு நாலடி என்னும் ஒரு க்ஷேத்திரத்தை யடைந்தேன். நூல் வழக்கிலும், உலக வழக்கிலும் நாம் ஆண்டு வரும் பெயர்கள் யாவும் ஆதியில் காரணப் பெயர்களே. பெயர்கள் ஏற்பட்டு நெடுங் காலமான பிறகு அவற்றுள் சிலவற்றின் காரணத்தை மறந்துவிடுவோமானால் அப்போது அவற்றை இடுகுறிப் பெயர்கள் என்று சொல்லுவது வழக்கம். ஆகவே தற்போதைய பெயர்ச் சொற்கள் காரணம், இடுகுறி என இரு வகையாக வகுக்கப் பெறுகின்றன. ஆகவே 'நாலடி' என்னும் ஊர்ப் பெயர் காரணப் பெயரா அல்லது இடுகுறிப் பெயரா என்ற சந்தேகம் அநேகருக்கு உண்டாகலாம். ஊருக்குட்புகுந்து கூறுமுன் அதற்கு பெயர் வந்த காரணத்தை முன்னர் கூறிவிடுகிறேன்.

திரேதா யுகத்தில் ஒரு சமயம் உலகத்தில் நாஸ்திகம் பரவி மக்களை நரகத்திற்காளாக்கி வந்ததை உமாதேவியார் கண்டு சகிக்காது பூவுலகிற்கு வந்து வஜ்ஜிரவர்மன் என்னும் அரசனிடத்துச் சென்று நாலடி நிலம் வாங்கி அங்கு ஒரு நகரத்தை உண்டாக்கி, அதில் ஒரு பல்கலைக் கழகத்தை ஏற்படுத்தி, பல மகரிஷிகளைக் கொண்டு வைதிக சாஸ்திரங்களைக் கற்பித்து, ஆஸ்திகத்தைப் பரப்பினார் என்பது அத்தல புராணத்தின் வரலாற்றுச் சுருக்கம். இப்போது நாலடி என்ற பெயர் அவ்வூருக்கு வந்த காரணத்தை அறிந்துகொண்டீர்கள். இதற்குமேல் உங்களுக்கு நாலடி நிலத்தில் ஒரு நகரத்தை எப்படி நிர்மாணிக்க முடியும் என்ற சந்தேகம் நிகழலாம். மகாபலியினிடத்தில் மூவடி மண் யாசித்து, மண்ணை ஒரு அடியாலும், விண்ணை ஒரு அடியாலும் அளந்துவிட்டு, மூன்றாவது அடிக்கு இடமில்லாமல், யாசகம் கொடுத்த மகாபலியின் சிரத்தின் மேல் திருவடியை வைத்தருளிய மகாவிஷ்ணுவின் திருவிளையாடலைப் புராணங்கள் மூலம் கேட்டறிந்த உங்களுக்குச் சந்தேகம் உண்டாவானேன்.

நாலடி என்பது செங்குந்தர்கள் பெருந்தொகையினரா யுள்ள ஊர்களுள் ஒன்று. இவ்வூரில் நூற்றிற்குச் சுமார் ஐம்பது பேர் செங்குந்தர்களாகவே இருப்பார்களென்று உத்தேசிக்கிறேன். ஆனால் அங்குள்ள கலாசாலையிற் பார்த்தால் மேல் வகுப்பிலிருந்து கீழ் வகுப்பு வரையில் நாலைந்து பிள்ளைகளுக்கு மேல் கண்டுபிடிப்பது அரிது. இங்குள்ள செங்குந்தர்கள் அனைவரும் சுத்த சைவப் பழங்கள். இவ்

ஊரில் விபூதிக்கு மற்ற ஊர்களைவிட அதிக மதிப்பும், செலவும் உண்டு. உருத்திராக்ஷமும் அவ்வாறே. கோயிலுக்கும் அநேகர் தவறாது செல்வதுண்டு. சைவ புராணங்கள் படித்தவர்களும், கேட்பவர்களும் நிரம்ப உண்டு. வாய் வேதாந்தம் பேசவும் பலர் பழகியிருக்கிறார்கள். செல்வமும் (பொருட்செல்வமும்) உடையவர்கள்தான். உலகம் அநித்தியம் என்பதையும் ஒருவாறு நிரூபித்துப் பேசுவார்கள். தாங்கள் கயிலாயத்திலிருந்து ஆறுமுகப் பெருமானோடு வந்தவர்கள் என்பதை நன்குணர்ந்தவர்களாகையால் தங்களை உயர்ந்த ஜாதியார் என்பதையும் அறிந்திருக்கிறார்கள். இவ்வளவு தூரம் முன்னேற்றமடைந்திருக்கும் இவர்களுக்கு என்ன குறையிருக்கிறது. இல்லை இல்லை, ஒன்றுமில்லை. கூவல் ஆமை குறைகடலாமையை, கூவலொக்குமோ குறைகடல் என்ற கதையை நீங்கள் கேட்டிருக்கிறீர்களா? அக் கதை இவ்வூர்ச் சகோதரர்களுக்குத்தான் மிகப் பொருத்தமானது. ஏமாந்த சோணகிரிகளும் உண்மையிலேயே இவர்கள்தான். எல்லாம் கொட்டங்கச்சிக்குள்ளே குதிரை ஓட்டுவார்கள். வாசா கைங்கரியம் செய்வதில் ஒப்பற்றவர்கள். உலகம் பொய் என்பதும் வாயளவுதான். தாங்கள் உயர்ந்தவர்கள் என்பதும் வாயளவுதான். எல்லா உயிர்களிடத்தும் அன்பு செலுத்த வேண்டும் என்பதும் வாயளவுதான். இன்னார் பொதுப் பணத்தை கையாண்டு வருகிறார், அவரைச் சும்மா விடக் கூடாது என்பதும் வாயளவுதான். விரிப்பானேன்; மற்றெல்லாம் வாயளவேதான்.

நான் உண்மையை மறைக்கமாட்டேன். ஒன்றில் மாத்திரம் ஒருவாறு செயலளவில் காட்டுகிறார்கள். அதாவது சிவபக்தியில் மாத்திரம் வாயளவாக நின்று விடாது, விபூதி ருத்திராக்ஷம் தரித்துக் கொள்ளும் செயலளவில் தாராளமாய்ச் சென்றிருக்கிறார்கள். அவற்றால் தங்களுக்குப் பொருட் செலவில்லை என்பதை நன்குணர்ந்த நிபுணர்களாகையால். அவர்கள் மனத்தின் கண்ணும், வேறுவகையான செயலின் கண்ணும் உள்ள பக்திக்கு மலைமகள் மணாளனே சாக்ஷியாவான். நமது மித்திரனைத் தருவிப்போர் இங்கு வெகுசிலர். சந்தாவசூலுக்கு வரும் அன்பர்களின் காலை ஒடித்துக் கழுத்தில் கட்டுவோர் மிகப்பலர். எந்த பொதுக்காரியமென்றாலும் சரி, நாலடியில் இவர்கள் வசிக்கும் பக்கத்திலிருந்து ஒரு செப்பாலடித்த காசும் பறியாது. செல்வ நிலையாமை, யாக்கை நிலையாமை முதலிய பல நிலை ஆமைகளைக் கண்டறிந்தவர்களாகையால். நீள விரிப்பானேன், இவர்கள் அறியாமையையும், திறமை யின்மையையும் விளக்கிக் காட்டக் கூடிய ஒரே ஒரு விஷயத்தைக் கூறுகிறேன் கவனித்துக் கேளுங்கள். தாங்களே உயர்ந்தவர்கள் ஆச்சார முள்ளவர்கள் என்று எண்ணியிருக்கும் இந்நாலடிச் செங்குந்தர்களிடையே சுமார் ஒரு நூற்றாண்டிற்கு முன் வெளியூரிலிருந்து நாலைந்து செங்குந்த குடும்பங்கள் வந்து குடியேறின. ஊரார், வந்தவர்களை ஆச்சாரத்தில் தாழ்ந்தவர்களென்று கருதி இழிவாக எண்ணலாயினர். பந்தி போஜனம், பெண் கொடுக்கல் வாங்கல் முதலியவற்றில் அவர்களோடு கலவாதிருந்தனர். உண்மையிலேயே இருந்தவர்களைக் காட்டிலும் வந்தவர்கள் ஆச்சாரத்தில் குறைந்தவர்கள் தான் என்பதை யான் விசாரித்து அறிந்து கொண்டேன். அவ்வாறே பல்லாண்டுகள் கழிந்



தன. இழிவாகக் கருதப்பட்ட குடும்பங்களில் இரண்டொரு அறிவாளிகள் தோன்றி, தம்மைச் சேர்ந்தவர்களை ஒன்று கூட்டி, இன்று முதல் நாம் சுத்த சைவாச்சாரங்களைக் கைக்கொள்வதோடு பிற செங்குந்தர்களோடு உண்ணல் முதலியவையும், வலியவந்து கேட்பினும் பெண் கொடுக்கல் வாங்கல் ஆகியவையும் வைத்துக்கொள்ளவே கூடாது. இதுவே நாம் பிற செங்குந்தர்களால் உயர்ந்தவர்களென்று சில ஆண்டுகளுக்குள் கருதப்படுவதற்குத் தகுந்த வழியாகும். ஆகையால் இந்த ஏற்பாட்டை நாம் கடுமையாக அனுஷ்டித்து வரவேண்டும் என்று கட்டுப்பாடு செய்துவைத்தார்கள். புத்திவான் பலவான் ஆகையால் அறிவாளிகளின் யுக்தி பலித்துவிட்டது. நாலடியின் பழைய குடிகள் வீணில் தற்பெருமை பாராட்டிக் கொள்ளும் குடுக்கைகளாகையால், தற்போது தங்களை, முன்னொருகால் இழிந்தவர்களாகக் கருதப்பட்டவர்களைக் காட்டிலும் தாழ்வானவர்களாக எண்ணிக்கொண்டு, அவர்களோடு சம்பந்தம் செய்ய இடங்கிடைத்தால் போதுமென்று ஏங்கி நிற்கிறார்கள். அந்தோ, பாவம். கூவல் ஆமைகளே! இதுமாத்திரமா! அவ்வூர்ப் பெரியதனம், கோயில் முதலிய யாவும் இப்போது அச்சிறுபான்மையோரின் ஆட்சியில் இருந்து வருகின்றன என்பது ஒரு ஆச்சரியமாகுமா?

(தொடரும்)

சுருக்கமா யில்லாத கிளைச்சங்க அறிக்கைகள் இனி கண்டிப்பாய் பிரசுரிக்கப்பட மாட்டாதென்பதைத் தெரிவித்துக் கொள்ளுகிறோம். (ப-ர்.)


**"ARIEL" Fountain Pens**

இரிடியம் நிறைந்த 14 காரட் தங்க நிப்பும், ரோல்டு கோல்டு கிளிப்பும் உடையது.

உயர்ந்த ரகம். விலை ரூபா **2-8-0**. வி. பி. செலவு வேறு.



British Make of Superior Quality

மொத்த வியாபாரிகள்:

T. K. A. R. முத்துக்குமாரசாமி முதலியார்,
**4-2,** பந்தர் தெரு, சென்னை.

# கிளர்ச்சி

## மதுரை ஜில்லா

### செங்குந்த இளைஞர் சங்கம், மதுரை

கடந்த 21-1-34 ஞாயிறன்று காலை 7 மணிக்கு சங்கக் காரியாலயத்தில் நிருவாகக் கூட்டம் திரு. க. சண்முகவேலு அக்கிராசனத்தில் நடைபெற்றது. அவ்வமயம் கீழ்க்கண்ட தீர்மானங்கள் நிறைவேறின.

### தீர்மானங்கள்

1. நமது சங்கத்திற்கு அரும்பணி யாற்றியவர்களில் ஒருவராகிய திரு. சா. சிவலிங்க முதலியார் அவர்கள் சமீபத்தில் அகால மரண மெய்தியமைக்கு இக்கூட்டம் வருந்துவதுடன் அவர்கள் குடும்பத்தாருக்கு அநுதாபத்தைத் தெரிவித்துக் கொள்ளுகிறது.

2. ஏழைகளின் குறைகளை சங்கத்தார் கவனிக்க வேண்டுமென்று 7-1-34-ல் தல்லாகுளத்திலுள்ள நம்மவர்கள் கேட்டுக்கொண்டிருப்பதில், ஒன்றும் தெளிவாய் எடுத்துக் காட்டாததால் இன்னும் இரண்டு வாரத்திற்குள் மகஜர் அனுப்பியவர்கள் காரியதரிசிக்குத் தெரியப்படுத்தினால் அதைப்பற்றி ஆலோசிப்பதென முடிவு செய்கிறது.

3. சங்கத்தின் நான்காம் ஆண்டு நிறைவுவிழா வரவு செலவு கணக்கு சரிபார்த்து ஒப்புக்கொள்ளப் பட்டதுடன் பியாண்டு வாசித்தமைக்கும், விழா வைபவத்தில் கலந்துகொண்டோ ரனைவருக்கும் சிற்றுண்டி வழங்கியதற்கும் முறையே திருவாளர்களான ப. மு. ப. முத்துக்குமரன் அவர்களும், க. சண்முகவேலு அவர்களும் பிரத்தியேகமாகத் தம் சொந்தச் செலவில் பணங்கொடுத்தமைக்கு நன்றி கூறுவதுடன் இவைகளை அறிக்கை மூலமாகத் தெரிவிக்க வேண்டுமெனத் தீர்மானிக்கிறது.

4. வாசகசாலை நிருவாகி திரு. எஸ். செண்பக முதலியார் அவர்கள் கேட்டுக்கொண்டதற் கிணங்க வாசகசாலைக்கு புத்தகங்கள் வாங்குவதற்கு ரூ. 25-0-0 அநுமதிக்கப்பட்டதுடன் "இந்தியா" தினசரிப் பத்திரிகை வாசகசாலைச் செலவில் வாங்கிக்கொள்ள வேண்டுமென்றும் தீர்மானிக்கப்பட்டது.

நமது வாசகசாலைக்கு இவ்வருடத்திற்கு திருவாளர்களான நா. ப. பழனிக்குமாரு முதலியார், "புரட்சி" வாரப் பதிப்பும், ச. மாணிக்க முதலியார், க. சண்முகவேலு, ப. மு. ப. முத்துக்குமரன் இம்மூவர்களும் "சுதேச மித்திரன்" வாரப் பதிப்பு "ஜெகன்மோகினி" "ஆனந்த போதினி" மாதப் பதிப்புகளை முறையே எஸ். பாலசுப்பிரமணிய முதலியார், கொ. சங்கிலி முதலியார் இவர்களும் தமது சொந்தச் செலவில் வரவழைத்துக் கொடுப்பதாக வாக்களித்துள்ளார்கள். இவர்களின் தாராளச் சிந்தையையும் சமூக முன்னேற்றங் கருதிப் பாடுபடுவதையும் மனதாரப் பாராட்டுவதுடன் மற்றும் நம்மவர்களில் ஏனையோரும் இவர்களைப் பின்பற்றுமாறு வேண்டிக் கொள்ளுகிறது



திரு. நா. ப. பழனிக்குமாரு முதலியார் அவர்கள் வந்தனோபசாரங்கூறக் கூட்டம் சுமார் 9-30 மணிக்கு இனிது முடிவுற்றது.

24-1-34 இரவு 8 மணிக்கு சங்கக் காரியாலயத்தில் காலஞ்சென்ற சி. இராமலிங்கம் (மாணவர்) அவர்களின் நான்காம் ஆண்டு அநுதாபக் கூட்டம் தலைவர் திரு. நா. ப. பழனிக்குமாரு முதலியார் அவர்கள் தலைமையின்கீழ் நடைபெற்றது.

தலைவர் முன்னுரையாகச் சிலது பேசியபின் முறையே திருவாளர்கள் வீ. வீரபத்திர முதலியார், P. V. முத்துக்கருப்ப முதலியார், க. சண்முகவேலு (காரியதரிசி) இவர்கள் மாணவரின் குணங்களைப் பற்றியும், அவர் சங்கத்திற்காற்றியுள்ள தொண்டினைப் பற்றியும் புகழ்ந்து பேசியதுடன் அன்னாரைப் போல் மற்றையோரும் பணியாற்ற வேண்டுமென்று கேட்டு அரிய சொற்பொழிவு நிகழ்த்தினர். தலைவர் முடிவுரைக்குப் பின் வந்தனோபசாரத்துடன் கூட்டம் சுமார் 9-30 மணிக்கு இனிது முடிவுற்றது.

மாணவர் சி. இராமலிங்கம் அவர்களின் ஞாபகார்த்தமாக சங்கத்திற்கு "ஆனந்த விகடன்" வாரப் பதிப்பு பத்திரிகையை இவ்வருடத்திற்கு வரவழைத்துக் கொடுப்பதாக சி. பொன்னம்பல முதலியார் அவர்கள் வாக்களித்திருப்பதற்கு நன்றி கூறப்பட்டது.

### நான்காம் ஆண்டு நிறைவு விழா

ஸ்ரீமுக ஹூ மார்கழிமீ 16உ (30-12-33) சனிக்கிழமை தல்லாகுளம் கொண்டா பாப்பையர் அவர்கள் மண்டபத்தில் ஈரோடு மகாஜன உயர்தரக் கலாசாலை தலைமை ஆசிரியர் உயர்திரு எஸ். மீனாக்ஷிசுந்தர முதலியார் அவர்கள் அக்கிராசனத்தின் கீழ் வெகு சிறப்பாக நடைபெற்றது.

முதலில் தலைவரவர்களை திருவாப்புடையார் கோவில் முனிசிபல் பள்ளிக்கூடத்திலிருந்து ஊர்வலமாய் விழாமண்டபத்திற்குஅழைத்துச் செல்லப்பட்டது. கூட்டத்தின் ஆரம்பத்தில் செங்குந்தர் திருப்புகழ் சபையினர் இறைவணக்கம் பாடினர். தலைவர் தேர்தல் முடிவுற்றதும் அன்னாருக்கோர் உபசாரப்பத்திரம் வாசித்தளிக்கப்பட்டது. காரியதரிசி சங்கத்தின் வருடாந்திர அறிக்கையை வாசித்தார். அதில் சங்கத்தின் ஆதரவில் நடைபெற்று வரும் இலவச வாசகசாலையின் அறிக்கையும் இரண்டின் வரவு செலவு கணக்குகளும் சேர்க்கப் பட்டிருந்தன.

பிறகு தலைவரவர்கள் முன்னுரையாகச் சிறிது பேசியபின் ஸ்ரீவில்லிபுத்தூர் ஆசிரியர், திரு. எஸ். பால்வண்ணம் பிள்ளை அவர்கள் "சமூக சீர்திருத்தம்" என்பது குறித்தும், நயினார் கோவில் டாக்டர் A. சீதாராம் எல். சி. பி. அண்டு எஸ் (பாம்பே) அவர்கள் "சுகாதாரம்" என்பது பற்றியும், மதுரை பொது நல ஊழியர் சங்க அமைச்சர் திரு ஜே. என். இராமநாதன் அவர்கள் "பெண்கல்வி" என்பது குறித்தும் மிக்க விரிவாகவும் யாவரும் பரவச முறுமாறும் உபந்நியாசங்கள் நிகழ்த்தினர். இடை யிடையே கூட்டத்தினர் கைதட்டி ஆரவாரித்தனர்.

### நிறைவேறிய தீர்மானங்களில் முக்கியமானவை

1. இக்கூட்டம் நம் குலப் பிரபலஸ்தர்களிலொருவரும், முக்கிய வியாபாரியுமான திரு. வே. கந்தசாமி முதலியாரவர்கள் எதிர் பாரா

வண்ணமாய் காலஞ் சென்றது குறித்து அன்னாரது குடும்பத்திற்கு தனது பூரண அநுதாபத்தை தெரிவித்துக்கொள்ளுகிறது.

2. சென்ற வருடம் விழாக் கூட்டத்தில் தீர்மானித்தவாறு நமது சங்கத்திலிருந்து அனுப்பி வரும் உண்டியலுக்கு செங்குந்த வியாபாரிகள் அனைவரும் பொருளுதவி செய்து வந்தமைக்கு மிக்க நன்றி பாராட்டுவதோடு இனியும் ஆதரவு காட்டி தம்மா லியன்ற பொருளுதவி செய்து வரவேண்டுமென அவர்களை இக் கூட்டம் மிகவும் மன்றாடிக் கேட்டுக்கொள்ளுகிறது.

3. நமது வகுப்பினரால் இது வரை நடைபெற்ற சுப காரியங்களில் நமது சங்க நிதிக்கு நன்கொடை வழங்கியவர்களை இக் கூட்டம் போற்றுவதோடு செங்குந்த மக்கள் அனைவரும் தமதில்லங்களில் இனி நடைபெறவிருக்கும் சுப காரியங்களிலும் அம் மாதிரியே நன்கொடை வழங்க வேண்டுமெனப் பெரிதும் வேண்டுகிறது.

4. இந் நகரில் நம்மவரின் ஜனத் தொகை ஏறக்குறைய 5,500-க்கு அதிகமா யிருந்தும் நமது சங்கத்தின் சந்தாதாரரின் தொகை 67 ஆகவும், வாசகசாலையின் சந்தாதாரரின் தொகை 23 ஆகவும் இருப்பது மிக வருந்தற்குரியதா யிருப்பதால் இவ் வருட முதல் வயது வந்த செங்குந்த ஆண்-பெண் இரு பகுதியினரும் சந்தாதாரராகச் சேரவேண்டுமென மிகப் பணிவுடன் கேட்டுக்கொள்ளப்படுகிறது.

5. சென்ற மூன்றும் வருட விழாவில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தின்படி 1-வது வார்டு செல்லூர் பாலம் ஸ்டேஷன் ரோட்டில் எலக்டிரிக் லைட்டுகளில்லாமல் பாக்கியிருக்கும் கீழ்ப்பகுதிக்கு ஷை லைட்டுகள் போடவேண்டுமாய் கேட்டுக் கொண்ட 6-1-33வ யிட்ட நமது சங்கத்தின் கடிதத்திற்கு முன்னிருந்த கனம் ஸ்பெஷல் ஆபீஸர் அவர்களிட மிருந்து வந்த எல்.டிஸ். 398-33 இ. 2 ௳. உள்ள பதில் கடிதத்தின்படி செல்லூர் ரோட்டும் அழகர் கோவில் ரோட்டும் சந்திக்கு மிடத்திலுள்ள பாலத்தை அகலப்படுத்த வேண்டிய முயற்சிகளைச் செய்து பொதுஜன சௌகர்யத்திற்கு மிக்க அவசியமாயிருக்கும் ஷை விளக்குகளைப் போட கனம் முனிசிபல் கமிஷனர் அவர்களும் நகர பரிபாலனசபையும் கூடிய விரைவில் ஏற்பாடு செய்ய வேண்டுமாய் மிக வணக்கத்துடன் இக் கூட்டம் கேட்டுக் கொள்ளுகிறது.

6. மதுரை பொது நல ஊழியர் சங்க அமைச்சர் திரு. ஜே. என். இராமநாதன் அவர்களின் வேண்டுகோளுக் கிணங்க இனி ஒவ்வொரு தமிழ் மாதம் கடைசி ஞாயிற்றுக் கிழமை தோறும் நம் நகரிலுள்ள இதர வியாபாரிகளைப் போல் நம்குல வியாபாரிகளும் தமது கடைகளை அடைத்து ஓய்வுநாளாக அநுசரிக்க வேண்டுமென இக்கூட்டம் தீர்மானிக்கிறது.

## புதுவருடத்திற்கு சங்கத்தின் உத்தியோகஸ்தர்கள்

தலைவர் திரு. நா. ப. பழனிக்குமாரு முதலியார், உபதலைவர் மு. கருப்பசாமி முதலியார், காரியதரிசிகள் திரு. ப. மு. ப. முத்துக்குமரன், திரு. க. ஷண்முகவேலு, பொக்கிஷதார் திரு. கு. மயிலப்ப முதலியார், வாசகசாலை நிர்வாகி திரு. எஸ். செண்பக முதலியார்.



திருவாளர்கள் ந. சி. நல்லதம்பி முதலியார், சி. பொன்னம்பல முதலியார், எஸ். பாலசுப்ரமணிய முதலியார், அ. ப. சுப்பு முதலியார், ச. மீனாக்ஷிசுந்தர முதலியார், ஜோதிமய முதலியார், கு. ஆறுமுக முதலியார், க. சோணைமுத்து முதலியார், மு. திருமேனி முதலியார், சு. சிதம்பர முதலியார், சு. கு. மீனாக்ஷிசுந்தர முதலியார்.

தலைவர் முடிவுரைக்குப் பின் வந்தனோபசாரத்துடன் கூட்டம் இரவு 9 மணிக்கு கலைந்தது.

கீழ்வரும் முக்கியஸ்தர்களிட மிருந்து விழாவிற் கலந்துகொள்ள முடியாமைக்கு வருந்தியும் விழா சிறப்புற நடைபெற வேண்டுமென வாழ்த்தியும் செய்திகள் வந்துள்ளன.

திருவாளர்கள் கோவை வி. எஸ். செங்கோட்டைய்யா முதலியார், குடியாத்தம் நகரசபைத் தலைவர் எம். வி. பீமராஜ முதலியார், சென்னைத் தலைச்சங்கத்தின் சார்பாகவும் தனது சார்பாகவும் பி. செ. மாணிக்கவாசக முதலியார், கோடம்பாக்கம் மா. அ. கனகசபை முதலியார், திருநெல்வேலி வக்கீல் எஸ். பழனியாண்டி முதலியார்.

க. சண்முகவேலு,
ப. மு. ப. முத்துக்குமரன்,
காரியதரிசிகள்.

## ராமநாதபுரம் ஜில்லா

### செங்குந்தர் அபிவிருத்தி சங்கம், மண்டலமாணிக்கம்

19-1-34௳ இரவு 7-30 மணிக்கு இச்சங்கத்தின் பொதுகூட்டம் கூடியது. இவ்வூர் பிரபல கனவானும் ரங்கூன் வியாபாரியும் இச்சங்கத்தின் மாஜி காரியதரிசியுமான திருவாளர் நா. சு. கு. நடராஜ முதலியார் ரங்கூனி லிருந்து வந்திருப்பதை உத்தேசித்து அவரை மேளதாளத்துடன் சங்க ஹாலுக்கு அழைத்து வந்து திரு. சி. வீரபத்திர முதலியார் தலைமையில் கூட்டம் ஆரம்பிக்கப்பட்டது. கடவுள் வணக்கத்தின்பின் காரியதரிசியால் மினிட் புஸ்தகமும் படிக்கப்பட்டது. திரு. இ. முனியப்ப முதலியார், நடராஜ முதலியாரை வரவேற்று நெடுநேரம் பேசினார். பிறகு ஸ்ரீமான் கதிர். வாழவந்த பண்டாரம் ஷை முதலியாரின் குணாதிசயங்களையும் அவர் இச்சங்கத்தில் முன் செய்த சேவையையும், அவர் அபிமானங்கொண்டு இங்கு இச்சங்கத்திற்குக் கொண்டு வந்த கடிகாரம், கந்தபுராணம், படங்கள் முதலியவற்றைச் சிலாகித்தும் பேசி முடித்தார். திரு. நடராஜ முதலியார் அவற்றிற்குப் பதில் கூறிப் பின் தலைவர் முடிவுரை கூறினார். காரியதரிசி வந்தனோபசாரங் கூறி சந்தண தாம்பூலம் வழங்கப்பட்டு கூட்டம் இனிது கலைவுற்றது.

கூ. வே. துருசாமி முதலியார், அமைச்சர்.

## செங்கற்பட்டு ஜில்லா

### சைதாப்பேட்டை செங்குந்த புராணப் பிரசங்கம்

ஸ்ரீமுக௵ கார்த்திகை௴ 5௳ முதல் கார்த்திகை மாதம் முடிய பிரதி சோமவாரத்திலும் சைதாப்பேட்டை, ஸ்ரீ பாலசுந்திர விநாயகர் சந்நிதியில் திரு. தி. ச. கிருஷ்ணசாமி முதலியார் அவர்களால்

நாவினால் மழுவெடுத்த ஞானப்பிரகாச சுவாமிகள் அருளிச் செய்த செங்குந்த புராணத்துள் பெருமான் அறுமுகங் கொண்ட படலம், துணைவர் வருபடலம், தகருதவிய படலம், விதியை விலங்கிடு படலம், குந்தம் பெறு படலம் ஆகிய படலப் பிரசங்கங்கள் நடைபெற்றன. அன்பர்கள் பலர் கேட்டு இன்புற்றனர்.

அ கா. துரைசாமி முதலியார்.

## தென் ஆற்காடு ஜில்லா

### கலியாணம்பூண்டி

7-11-33 இரவு 7 மணிக்கு போர்டு பாடசாலையில், தாலுக்கா போர்டு மெம்பர் திரு. K. S. முத்துசதாசிவ முதலியார் அவர்கள் தலைமையில் ஒரு பொதுக்கூட்டம் கூடியது. பின்வரும் உபந்நியாசம் நடைபெற்றது.

1. பெற்றோர் சங்க நோக்கம்: உதவி ஆசிரியர் திரு. K. முத்துசாமி ஐயர் அவர்கள், 2. பெற்றோர் கடமை: தமிழ்ப்புலவர் திரு. ச. நா. குமரகுரு முதலியாரவர்கள், 3. சங்க அவசியம்: ஹெட்மாஸ்டர் திரு. R. விஸ்வநாத அய்யர் அவர்கள்.

கமிட்டி மெம்பர் வருடச் சந்தா 0—6—0 செலுத்த வேண்டுமென முடிவு செய்யப்பட்டது. பின்பு K. S. முத்துசதாசிவ முதலியார் தலைவராகவும், M. V. அருணசல முதலியார் உபதலைவராகவும், T. K. சுப்புராய முதலியார் பொருட்காப்பாளராகவும், R. விஸ்வநாத அய்யர் காரியதரிசியாகவும் மற்றும் எழுவர் இதர அங்கத்தினராகவும் தேர்ந்தெடுக்கப்பட்டு இரவு 11 மணிக்கு சந்தன தாம்பூலத்துடன் கூட்டம் இனிது முடிந்தது.

## கோயமுத்தூர் ஜில்லா

### பவானி செங்குந்த வாலிபர் முன்னேற்ற சங்கம்

கீழ்க்கண்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டுள்ளன.

1. அங்கத்தினர்கள் வாரம் ஓரணா சந்தா செலுத்தவேண்டும்.
2. திங்கட்கிழமை தோறும் சங்க கூட்டம் நடைபெறவேண்டும்.
3. தலைச் சங்கத்தின் கிளைச்சங்கமாக இதனை இணைத்து ஆண்டு தோறும் ஐந்து ரூபாய் கட்டணமாக தலைச்சங்கத்திற்கு செலுத்தி வரவேண்டும்.

சே. நாச்சிமுத்து முதலியார், காரியதரிசி.

## வட ஆற்காடு ஜில்லா

வெட்டுவாணம் திருநாவுக்கரசு சுவாமிகள் திருமடாலயத்தில் சங்கப் பிரசாரகர் ச. நா. குமரகுரு முதலியார் அவர்களால் 'திருநாவுக்கரசரும், செங்குந்தரும்' என்பது பற்றி சொற்பொழிவு 30-11-'33-ல் நடத்தப்பட்டது.

3-12-'33-ல் செலந்தம்பள்ளி போர்ட் பாடசாலையில் திரு. கந்தசாமி முதலியார் ஆதரவில் கூடிய கூட்டத்தில் சங்கப் பிரசாரகர் ச. நா. குமரகுரு முதலியார் 'தேவாரமும், செங்குந்தரும்' என்பதைப்பற்றி பேசினபின் வந்தன உபசாரத்துடன் கூட்டம் முடிந்தது.

# மதிப்புரை

## கண்ணப்பர் கலம்பகம்

புதுவை, அரசாங்கக் கலாசாலைத் தமிழ்ப் பண்டிதர் திரு. வீ. துரைசாமி முதலியாரவர்கள் இயற்றிய கண்ணப்பர் கலம்பகம் என்னும் புத்தகம் ஒன்று வரப்பெற்றோம். அது சொற்சுவையும் பொருட்சுவையும் ஒருங்கே வாய்ந்து, கற்போர்க்கு மிக்க இன்பம் பயக்கும் நிலையில் அமைந்துள்ளது. திருப்பாதிரிப்புலியூர் ஸ்ரீலஸ்ரீ ஞானியார் சுவாமிகள், மஹாமஹோபாத்தியாயர் உ. வே. சாமிநாத ஐயர், கோ. வடிவேலு செட்டியார், நவநீத கிருஷ்ண பாரதியார் முதலியோர் சிறப்புக்கவிகள் அளித்திருப்பதி லிருந்தே இந்நூலின் பெருமை நன்கு விளங்கும். இதன் விலை அணா 3.

---

## பொன் மலர்

புதுவை தமிழ்க் கல்விச் சங்கத்தி னின்றும் வெளிவரும் பொன் மலர் என்ற மாத வெளியீட்டின் இதழ்கள் சில நமக்குக் கிடைத்தன. தமிழ்ப் பண்டிதர் திரு. வீ. துரைசாமி முதலியா ரவர்களே இதன் ஆசிரியராவர். ஸ்ரீ முதலியாரவர்கள் சில ஆண்டுகளுக்கு முன் 'தமிழ் மகவு' என்ற மாத வெளியீட்டை நடத்தி, பத்திரிகைத் தொழிலில் மிக்க அனுபவம் பெற்றவ ரென்பதைக் குறிப்பிட வேண்டியதில்லை.

இவ்வெளியீட்டின் முழு நோக்கமும் தமிழ் மொழியை வளர்ப்பதொன்றே யாகும். தமிழர்க ளனைவரும் அதனை ஆதரிப்பார்களென எண்ணுகிறோம்.

வருட சந்தா உள்ளூருக்கு ரூபா 1—0—0
வெளியூர்களுக்கு ரூபா 1—8—0

இவை கிடைக்கும் இடம் :—

திரு. வீ. துரைசாமி முதலியார்,
அரசாங்கக் கல்விச்சாலைத் தமிழ்ப் பண்டிதர், புதுவை.

---

### இலுப்பைக்கோணம்

7-12-'33 இரவு 7 மணிக்கு சுப்பிரமணிய சுவாமி கோயிலின் முன்னர் கூடிய பொதுக் கூட்டத்தில் சங்கப் பிரசாரகர் ச. நா. குமரகுரு முதலியார் வள்ளியம்மை திருமணம் என்பது பற்றி பேசிய பின் இனி நமது மித்திரன் வளர்ச்சியைக் கருதி சுபாசுபங்களில் நன்கொடையாக சங்கத்திற்கு 8 அணா தரவேண்டுமென்றும், மித்திரன் பரம்பரை சந்தா ஷேர்ப் பொதுவில் ஒன்றும், பின் தகுதியுடையவர்கள் ஒவ்வொரு சந்தாவுமாகச் சேர்ந்து ஆதரிக்க வேண்டுமென்றும் தீர்மானங்கள் நிறைவேறிய பின் இரவு 1 மணிக்கு கூட்டம் இனிது முடிந்தது.

## குலோத்துங்க சோழன் பிள்ளைத்தமிழ்

குலோத்துங்க சோழன் பிள்ளைத்தமிழ் என்னும் அரிய செந்தமிழ் நூல் ஒன்று நமது பார்வைக்குக் கிடைத்தது. இது சோழர் அவைக்கோர் பேரணிகலனாய்த் திகழ்ந்த கவிச்சக்கரவர்த்தி ஒட்டக்கூத்தரால் இயற்றப் பெற்ற பல நூல்களுள் ஒன்று. நாம் இந் நூலை இதுகாறும் பெயரளவில் அறிந்திருந்தோமே யன்றி முழு நூலையும் படித்தறிந்தோ மில்லை. சில ஆண்டுகளுக்கு முன், தஞ்சாவூர் அரண்மனையிலுள்ள புத்தகசாலையில் சிதைந்த இரண்டு மூன்று ஏடுகளில் இப்பிள்ளைத் தமிழின் சில பக்கங்களைக் கண்டோம். அவையும் சிதைவுற்று அரைகுறையாகவே இருந்தன. அன்று முதல் இந்நூல் முழுது மடங்கிய பிரதிக்காக முயன்றும் கிடைத்திலது.

'இப்பிள்ளைத் தமிழ் ஏடுதோறும் சிதைவும், பிறழ்ச்சியும் கொண்டிருத்தலின், வேறுசில ஏடுகள் பெற்றுச் செப்பஞ் செய்து வெளியிட இது காறும் பொறுத்திருந்தேன். ஒன்றேனும் கிடைத்திலது. உள்ள ஏடும் செல்லுக் கிரையா யொழிகின்றமையின், இதனை உள்ளவாறு வெளியிடல் நலமெனத் துணிந்து பதிக்கத் தொடங்கினேன்' என இந்நூலை அச்சிட்டு வெளியாக்கிய உயர் திரு. க. உலகநாத பிள்ளை யவர்கள் தமது முன்னுரையில் குறித்துள்ளமையின், அவ்வேட்டுப் பிரதி ஒன்றில்லாவிடின் இவ்வரிய பிள்ளைத் தமிழை இன்று நாம் காணப்பெற்றிரோம் என்பதில் ஐயமில்லை. 'கோவை உலா ஆதிகளுக்கு (அல்லது அந்தாதிக்கு) ஒட்டக் கூத்தன்' என்றதனால் கோவை, உலா, அந்தாதி முதலிய பிரபந்தங்கள் பாடுவதில் நமது கவிச்சக்கரவர்த்தியார் கைதேர்ந்தவர் என்று பெறப் படுகிறதாயினும் தற்போது அவரியற்றிய பல அரிய கோவைகளுள் ஒன்றையும் காணகிலேம். உலாக்களுள் மூவேந்தருலாவையும், அந்தாதிகளுள் சரஸ்வதி யந்தாதியையுமே காண்கிறோம். கூத்தர்பெருமான் பாடிய பல பரணிகளுள் தக்கயாகப் பரணி யொன்றே ஒப்புயர்வற்ற உரையுடன் வெளிவந்துள்ளது. ஏனைய அளவிறந்த நூல்க ளிருக்குமிடந் தெரியவில்லை. அவை அவ்வாறு மறைந்ததற்குப் பல காரணங்களிருப்பினும் முக்கியமான காரணம், அப் பெரியாரது வழித் தோன்றல்களாகிய செங்குந்தர்களுள் தமிழில் வல்லவர்கள் பலரிருந்தும் அன்னோர் அசிரத்தையால் அவற்றைப் போற்றிப் பாதுகாத்து வராமை என்றே சொல்ல வேண்டும். ஆகையால் இனியாவது திரு. பிள்ளையவர்கள் போன்ற அறிஞர்கள் அரிதிற் சேகரித்து அச்சிட்டு வெளியாக்கிய 'குலோத்துங்க சோழன் பிள்ளைத்தமிழ்' போன்ற நூல்களை ஒவ்வொரு செங்குந்தரும் வாங்கிப் படித்துப் போற்றுவார்களென எதிர்பார்க்கிறோம். செங்குந்த உலகத்தின் சார்பாக உயர் திரு. க. உலகநாதபிள்ளையவர்களுக்கு நாம் மிகவும் நன்றி பாராட்டக் கடமைப்பட்டுள்ளோம்.

பாடும் புலவர் பணிகொண்ட கூத்தன் பதாம் புயத்தைச்
சூடும் குலோத்துங்க சோழனென்றே என்னைச் சொல்லுவரே

என, ஆசிரியர் வணக்கங் கூறிய தமது அருமந்தமாணாக்கரும், அரசருமாகிய குலோத்துங்க சோழன்மீது ஆசிரியர் கவிச்சக்கரவர்த்தியார் மனப் பூர்வமாய்ப் பாடிய இப்பிள்ளைத்தமிழ் எத்தகைய அருமை



பெருமை வாய்ந்ததா யிருக்குமென்பதை யாம் எடுத்துச் சொல்லவும் வேண்டுமோ?

இந்நூல், அக்காலத்திய தமிழ்நாட்டுச் சரித்திரத்திற்கு ஓர் சிறந்த ஆதாரமாமென்பது யாரும் மறுக்க முடியாத உண்மையாகும். சொற்சுவை பொருட்சுவை முதலிய பல சுவைகள் செறிந்த இந் நூலின்கண் திகழும் வடமொழி பிரயோகங்களை நோக்க, கூத்தர் பெருந்தகை வடமொழியிலும் வல்லவரா யிருந்திருக்க வேண்டுமெனத் தெரிகிறது. இப் பிள்ளைத் தமிழின் காப்புப் பருவத்தில் சிவபெருமானை,

"தேமன்னு தாமரையாள் மகிழ்ந்திருக்கு மார்பிற்
றிருமாலு நான்முகனு மிருமருங்குஞ் சிறந்து
மாமன்னு மணிவரையும் பொன்வரையுங் கிளைத்த
மாணிக்க வரையனைய வானிடைக்கற் பகமே"

எனக் கவிச்சக்கரவர்த்தியார் கூறியதைக் குமரகுருபர சுவாமிகள் தாமியற்றி யருளிய மீனாக்ஷியம்மை பிள்ளைத்தமிழ் காப்புப்பருவத்தில்,

'பாகத்து மரகதக் குன்றொன்றோர் தமனியக் குன்றொடு கிளைத்து நின்ற
பவளத் தடங்குன் றுளக்கண்ணை தென்றப் பாஞ்சுடர் முடிக்கு முடி மூன்று
ஆகத் தமைத்து .....'

என எடுத்தாண்டிருத்தல் ஈண்டு குறிப்பிடத்தக்கது.

அரசர்கள் திருமாலின் அம்சமே என்ற கொள்கை இந்நூலாசிரியருக்கு முற்றும் உடம்பாடு என்பது இப்பிள்ளைத் தமிழைப் படித்தோர்க்குத் தெள்ளிதில் விளங்கும்.

கவிச் சக்கரவர்த்தியா ரியற்றிய இந்நூலின் அருமை பெருமைகளை அறிந்து, அதனை அச்சிட்டு வெளியாக்கி, தமிழுலகத்திற்குப் பேருதவி புரிந்த பதிப்பாளர்கள், இப்புத்தக முன்னுரையில் 'இதனை இயற்றியவர் ஒட்டக்கூத்த ராவார்' எனக் குறித்திருப்பதைக் கண்டும், வெளித்தாளில் 'கவிச் சக்கரவர்த்தி ஒட்டக்கூத்தன்' எனக் காட்டியிருப்பது பொருத்த முடையதாகத் தோன்றவில்லை. கம்பன், படிக்காசன், திருவள்ளுவன் எனக் கூறும் உலக வழக்கு இல்லையன்றோ? செய்யுள் வழக்கை உலக வழக்காகக் கோடல் முறை யன்று.

மிக்க அரிய நூலாகிய இதனை தமிழரனைவரும் ஆதரிக்குமாறு வேண்டுகிறோம்.

விலை அணா 12.

கிடைக்கு மிடம்:—
சதாசிவன் பிரதர்ஸ்,
மைலாப்பூர், சென்னை.

# சென்னை மார்க்கட்டு நிலவரம்

## 14-2-34

### ஜவுளிகளின் விலை

| | | |
|---|---|---|
| கிரிப்பாம்பு 22×22 (பி) | (காரிக்கன் மல்) | ரூ. 6- 2-0 |
| ஆவரேஜ் ரகம் | ,, | ரூ. 5-10-0 |
| கிரிப்பாம்பு ,, | (சலவை மல்) | ரூ. 6-12-0 |
| ஆவரேஜ் ரகம் | ,, | ரூ. 5- 7-0 |
| 1703 | | ரூ. 8-14-0 |
| 9000 | | ரூ. 9- 3-0 |

### நூல் திணுசுகள்

| | | |
|---|---|---|
| 40 நெ. டாக்கிரி | (5 ராத்தல்) | ரூ. 3- 7-0 |
| எனி டிக்கட் | ஷை | ரூ. 4- 2-6 |
| நாக கன்னிகை | ஷை | ரூ. 4- 6-0 |
| சலவை குஸ்தி | | இருப்பில்லை |
| 40 நெ. ஜப்பான் | (10 ராத்தல்) கலர் பந்து | ரூ. 6-10-6 |
| ஷை மதுரை மில் | 5 ராத்தல் | ரூ. 3- 4-0 |
| ஷை ஸ்டேன்ஸ் மில் | | இருப்பில்லை |
| 30 நெ. மதுரை மில் | ஷை | ரூ. 2-14-0 |
| ஷை லாயல் மில் | ஷை | ரூ. 2-12-0 |
| 20 நெ. மதுரை மில் | 10 ராத்தல் | ரூ. 4- 6-0 |
| ஷை ஸ்டேன்ஸ் மில் | ஷை | ரூ. 4- 0-0 |
| 60 நெ. எருதுகாரம் | 5 ராத்தல் | ரூ. 5- 7-0 |
| ஷை அசல் மயில் | 10 ராத்தல் | ரூ. 10-0-0 |

| | |
|---|---|
| சவரன் விலை | ரூ. 21- 5-6 |
| வெள்ளி விலை | ரூ. 0- 9-6 |

### கப்பல் செய்திகள்

| | | | |
|---|---|---|---|
| S. S. எதியோப்பியா | ரங்கூனுக்கு | 16-2-34 | காலை 10 மணி |
| S. S. எலிபென்ட்டா | ,, | 23-2-34 | ,, |
| S. S. ரோனு | ஸ்ட்ரெயிட்ஸ்-க்கு | 13-2-34 | மாலை 4 மணி |
| S. S. ரஜுலா | ,, | 27-2-34 | ,, |

## தமிழ் நாட்டு நடப்பு

### மலையாளம் தனி மாகாணமா?

மலையாளத்தைத் தனி மாகாணமாகப் பிரிக்க வேண்டுமென ஸ்ரீ சி. எஸ். ரங்கையர் டெல்லி சட்ட சபையில் ஒரு தீர்மானம் கொண்டு வரப் போகிறார்.

### ஸ்ரீ ராமகிருஷ்ண - விவேகாநந்தர் தினம்

வழக்கம்போல் ஸ்ரீ சச்சிதானந்த சங்கத்தின் சார்பில் 4-2-'34-ந் தேதி சென்னை ஹிந்து ஹைஸ்கூலில் சிறப்பாகக் கொண்டாடப் பட்டது.

### கவர்னருக்கு வரவேற்பு வேண்டாம்

பம்பாய் கவர்னர் காரச்சிக்கு விஜயம் செய்யும்போது வரவேற்பு வழங்க வேண்டுமெனக் கார்பொரேஷன் தலைவர் கொணர்ந்த தீர்மானத்தை எதிர்த்து தேசிய வாதிகள் சபையிலிருந்து வெளியேறி விட்டனர்.



### பட்டுத் தொழிலுக்குப் பாதுகாப்பு

பட்டுத் தொழிலைப் பாதுகாப்பதற்காக அந்நிய நாட்டிலிருந்து இறக்குமதியாகும் போலிப் பட்டுகளுக்கும், அசல் பட்டுகளுக்கும் 100-க்கு 100 வரி விதிக்க வேண்டுமென திரு. V. C. வெள்ளியங்கிரி கவுண்டரவர்கள் ராஜாங்க சபையில் ஓர் தீர்மானம் கொணடுவந்திருக்கிறார்.

### தபாற்கொள்ளை

மதுரையில் தபாற்சேவகன் தபாற்பையை எடுத்துக்கொண்டு போகையில் இரு கள்வர்கள் பையைக் கவர்ந்து சென்றனர். இதில் மூன்று இன்ஸுர் கவர்களும், 3,526-8-0 பெறுமானமுள்ள ஸ்டாம்புகளும் இருந்தன.

### மாகாண தொழிற்கட்சி ஸ்தாபனம்

திரு. வி. கலியாணசுந்தர முதலியாரைத் தலைவராகவும், திரு. எம். எஸ். ராஜகோபால் கிராமணி, ஏ. ரங்கநாதம் இவர்களிருவரையும் காரியதரிசியாகவும் கொண்ட சென்னை மாகாண தொழிற்கட்சி ஒன்று 30-1-'34-ல் ஸ்தாபிக்கப்பட்டது.

### தக்ளி பாட்டுக்குத் தடை

சென்னை சரஸ்வதி ஸ்டோர்ஸ் வெளியிட்ட தக்ளி பாட்டுக்கு ஸர்க்கார் தடையுத்தரவு பிறப்பித்திருப்பதால் இந்த ப்ளேட் இருக்குமிடத்திலெல்லாம் பறிமுதல் செய்யுமாறு போலீஸ் கமிஷனர் உத்தரவிட்டிருக்கிறார்.

### சென்னை ஸர்க்கார் காரியாலயம்

எப்ரல் 14-ந் தேதியுடன் சென்னையில் மூடப்பட்டு எப்ரல் 18-ந் தேதி உதகமண்டலத்தில் ஆரம்பிக்கப்படும்.

### ஈ. வே. ராமசாமி நாயகர் விடுதலை

திரு. நாயகரும், கண்ணம்மாளும் ஜாமீனில் விடுதலை செய்யப்பட்டுள்ளனர்.

### புஷ்பக் காக்ஷி

24-2-'34 முதல் ஒரு வாரத்திற்கு சென்னை பீபில்ஸ் பார்க்கில் புஷ்பக் காட்சி நடைபெறும். கவர்னர் தம்பதிகள் இக்காட்சியைத் திறந்து வைப்பர்.

### ஸர். அல்லாடிக்கு சட்ட மெம்பர் பதவி

சமீபத்தில் பதவியிலிருந்து விலகப்போகும் ஸர். எம். கிருஷ்ணன் நாயருக்குப் பதிலாக ஸர். அல்லாடி கிருஷ்ணசாமி அய்யர் சென்னை சட்ட மெம்பராக நியமிக்கப்படலாமெனச் சொல்லப்படுகிறது.

### தாலுக்கா போர்டுகள் ரத்து

பரிசீலனைக் கமிட்டி, தாலுக்கா போர்டுகளை ரத்து செய்வதை அங்கீகரித்துவிட்டது. அடுத்த கெஜட்டில் அதன் அறிக்கை வெளியிடப்படும்.

### சுங்க வரித் திருத்த மசோதா

இந்தியா சட்டசபையில் வாதிக்கப்பட்டு வந்த சுங்கவரித் திருத்த மசோதா பரிசீலனைக் கமிட்டிக்கு அனுப்பப்பட்டது.

### சைதாப்பேட்டை செங்குந்தர் கோட்டத்தில் பிரம்மோற்சவம்

துவஜாரோகணம் இம் மாசிமீ 8உ (20-2-'34) திங்கட்கிழமைகாலை
மயூர வாகன ஸேவை 12உ (24-2-'34) வெள்ளிக்கிழமை இரவு
இரதோற்சவம் 14உ (26-2-'34) ஞாயிற்றுக்கிழமை காலை
அருணகிரிநாதர் தடுத்தாட்கொள்ளப் பெற்ற
வைபவம் 15உ (27-2-'34) திங்கட்கிழமை மாலை
வேடர் பறி மாசி 19உ (3-3-'34) வெள்ளிக்கிழமை இரவு

### ஜில்லா போர்டுகளின் பிரிவினை

தாலுக்கா போர்டுகளை ஒழித்துவிடுவதால் ஜில்லா போர்டுகளை எவ்வாறு பிரிவினை செய்வதென்பதைப் பற்றி விசாரணை செய்து அறிக்கை வெளியிட மதுரை ஜில்லா போர்ட் தலைவர் ஸ்ரீ போக்ஸ் ஸ்பெஷல் உத்தியோகஸ்தராக நியமிக்கப்பட்டிருக்கிறார்.

---

## இந்தியச் செய்தி

### சுதந்திர தின விழா

26-1-34-ந் தேதி நடைபெற்ற சுதந்திர தினக் கொண்டாட்டத்தை யொட்டி வட இந்தியா முழுதும் பல தொண்டர்கள் கைதி செய்யப்பட்டுள்ளனர்.

### நிலத் தீர்வை வஜா

மத்திய மாகாண சட்டசபையில் 100-க்கு 25 நிலத்தீர்வை வஜா செய்யவேண்டுமென்ற தீர்மானம் ஏகமனதாய் நிறைவேற்றப்பட்டது.

### கராச்சி முனிசிபாலிடி

கராச்சி முனிசிபாலிடியைச் சேர்ந்த தென்னை, ஈஞ்சு, பனை மரங்களைக் கள்ளிறக்க விடக் கூடாதென முனிசிபல் சபையில் தீர்மானம் நிறைவேறி யுள்ளது.

### தீண்டாமை ஒழிப்பு மசோதா

இந்தியச் சட்டசபையில் ராவ்பகதூர் எம். ஸி. ராஜா கொண்டு வந்திருக்கும் தீண்டாமை விலக்கு மசோதா பொதுஜன அபிப்பிராயம் அறியும் பொருட்டு பிரசுரம் செய்யப்பட வேண்டுமெனத் தீர்மானம் நிறைவேறி யுள்ளது.

### கராச்சி மேயர் ஈகை

கராச்சி மேயர் திரு. ஜாம்ஷெட் மேத்தா வேலையில்லாத் திண்டாட்டத்தை ஒழிப்பதற்காக ஒரு தொழிற் கல்விச்சாலை அமைக்க 50 ஏக்கர் நிலமும் 5000 ரூபாயும் ஆரம்ப செலவுக்காக கொடுத்திருக்கிறார்.

### தர்பாங்கா நகர நிர்மாணம்

பூகம்பத்தால் சேதமடைந்த தர்பாங்கா நகரத்தைச் சீர்திருத்தி அமைப்பதற்காக மகாராஜா 25 லட்ச ரூபாய் கொடுத்திருக்கிறார்.



### மற்றொரு இந்தியருக்கு கவர்னர் பதவி

சென்னை ஆக்டிங் கவர்னராக சர். உஸ்மான் நியமிக்கப்பட்டிருப்பது போன்று பாஞ்சால கவர்னர் ரஜாவில் செல்லுகையில் சர். சிகந்தர் ஹயத்கான் ஆக்டிங் கவர்னராக நியமிக்கப்பட்டுள்ளார். இவர் இதற்கு முன்பே பாஞ்சால ஆக்டிங் கவர்னர் பதவி வகித்தவர்.

### பர்ஜ் கொலை வழக்கு

மிதுனபுரி கலெக்டர் ஸ்ரீ பர்ஜ் கொலை செய்யப்பட்ட வழக்கில் மூவருக்கு தூக்கு தண்டனையும் நால்வருக்கு ஜன்ம தண்டனையும் விதிக்கப்பட்டது.

### தங்கக் கொள்ளை

5½ கோடி ரூபாய் தங்கத்தை ஏற்றிக்கொண்டு இரண்டு கப்பல்கள் பம்பாயிலிருந்து 10-1-34-ல் இங்கிலாந்துக்கும், அமெரிக்காவுக்கும் புறப்பட்டன.

### பண்டிதர் மண் வெட்டினார்

பண்டித ஜவஹர்லால் நேரு ஒரு தொண்டர் கோஷ்டியுடன் பூகம்பத்தால் நாசமுற்ற பாகங்களிற் சென்று தமது திருக்கரத்தால் மண்ணை வெட்டி எடுத்து பிரேதங்களை வெளியில் எடுத்தனராம்.

### பிராம்மண—ஐரோப்பிய திருமணம்

ஸ்ரீ ஏ. ராஜகோபால அய்யங்கார் தமது புதல்வி கோமளத்தை ஆஸ்திரேலியாவைச் சேர்ந்த ஸ்ரீ ரொனால்டு கிரெய்க் என்பவருக்கு சென்னை அடையாற்றில் விவாகம் செய்து கொடுத்தார்.

### பூகம்ப நாசம்

பூகம்பத்தால் இது வரை 6,582 பேர் மாண்டதாகத் தெரிகிறது. பூகம்பத்தால் ஏற்பட்ட சேதத்தை ஈடு செய்ய குறைந்தது 5 கோடி ரூபாய் வேண்டுமாம்.

### ஸ்ரீ சேஷசாயி மரணம்

மின்சார நிபுணர் ஸ்ரீ சேஷசாயி விமான விபத்தினால் திருச்சியில் இறந்துவிட்டார்.

### ஜவஹர்லால் கைதியானார்

பண்டித ஜவஹர்லால் நேருவை 12-2-'34 மாலை 6-30 மணிக்கு ஆநந்த பவனத்தில் கைது செய்யப்பட்டார்.

## வெளி யுலகச் செய்தி

### ப்ரான்ஸ் மந்திரி சபை

ப்ரான்ஸ் மந்திரி சபை ஸ்டாவிஸ்கி என்ற கொள்ளைக்காரரின் காரணமாக ஜனவரி ஆரம்பத்தில் கலைக்கப்பட்டது. திரு. டிலாடியர் மந்திரி சபையை அமைத்துவிட்டார்.

### பிரிட்டன்—அயர்லாந்து தகராறு

பிரிட்டனுக்கும், அயர்லாந்துக்கும் நடந்து வரும் பொருளாதாரப் போராட்டத்தை நிறுத்தும் பொருட்டு ஒரு கூட்டுக் கமிட்டி நியமிப்பதென டப்ளின் ஸெனேட்டில் ஒரு தீர்மானம் நிறைவேறி யிருக்கிறது.

### ஆயுதப் பரிகரணப் பிரச்சினை

இதைப் பற்றி பிரிட்டிஷ் ஸர்க்கார் வெளியிட்டுள்ள அறிக்கையைக் குறித்து காமன்ஸ் சபையில் 6-ந் தேதி விவாதம் தொடங்கியது.

**Regd. No. M. 1514**

## கட்டுரை எழுதுவோருக்கு

1. கட்டுரைகள் வரிக்கு வரி இடம் விட்டு, தெளிவான எழுத்தில், காகிதத்தின் ஒரே பக்கத்தில் எழுதப்பட் டிருக்க வேண்டும்.

2. வாழ்க்கைக்கு அவசியமான நீதிகளைப் புகட்ட வல்லதும், மன உற்சாகத்தை எழுப்ப வல்லதும், சிரிப்பை ஊட்டத் தக்கதுமாய் மித்திரனில் 2 அல்லது 3 பக்கத்துக்கு மேற்படாமல் இருக்கக்கூடிய கட்டுரைகளுக்கே பிரசுரிப்பதில் முதன்மை தரப்படும்.

3. கட்டுரையோடு தனிக் கடிதங்கள் எழுதவேண்டியதில்லை. எழுதுபவரின் பெயரும் விலாசமும் மட்டும் கட்டுரையின் முகப்பில் குறிப்பிடுதல் போதுமானது.

4. கட்டுரைக ளெல்லாம் 'ஆசிரியர்' விலாசத்திற்கே அனுப்பவேண்டும்.

## சங்க அறிக்கைகள்

மித்திரனில் பிரசுரிப்பதற்காக அனுப்பப்படும் சங்க நடவடிக்கைகள், பொதுக்கூட்ட நிகழ்ச்சிகள் யாவும் மிகச் சுருக்கமா யிருத்தல் வேண்டும். (ப-ர்.)

---

## நன்கொடை

மாணும்பதி குமாரசாமி முதலியாரது 16 ம் நாள் சடங்கில் அவரது குமாரர் திரு. முருகப்ப முதலியாரால் மனமுவந்து வழங்கப்பட்ட நன்கொடை ரூபா 1 0 0

ஆரணி தாலுக்கா போர்டு மெம்பர் காமக்கூர் P. இராமசாமி முதலியார் தமது பிதா ரா. பச்சையப்ப முதலியார் சிரார்த்தத்தில் நமது தலைச்சங்கத்திற்கு மனமுவந்து அளித்த நன்கொடை ரூ. 0-8-0

தஞ்சை, அம்மாப்பேட்டை, திருவேங்கட முதலியார் குமாரர் சிரஞ்சீவி அய்யாதுரைக்கும், மேற்படியூர் மரு. தட்சிணாமூர்த்தி முதலியார் குமாரத்தி சௌ. கமலாம்பாளுக்கும் ஆவணி௴ 24௳ நடந்த திருமணத்தில் மனமுவந் தளித்த நன்கொடை ரூ. 1 0 0

சேலம் தாலூகா, மருளையம்பாளையம். ம-ா-ா ஸ்ரீ, வேலாயுத முதலியார் அவர்கள் குமாரன் சிரஞ்சீவி சண்முக முதலியாருக்கும், மேற்படியூர் அ. கந்தசாமி முதலியார் குமாரத்தி சௌபாக்கியவதி மீனாக்ஷி யம்மாளுக்கும் 27-11-'33-ல் நடந்த திருமணத்தில் நன்கொடை வரவு ரூபா 0 8 0

கோவை தாலூகா மருதவரைநீழல் வடவழி பட்டக்காரர் திரு. S. இராமசாமி முதலியார் தங்கை திருநிறைச் செல்வி S. வேதநாயகிக்கும், கந்தாயம்பாளையம் திரு. வெங்கடாசல முதலியார் குமாரன் திருநிறைச் செல்வன் K. V. முத்துசாமி முதலியாருக்கும் ஸ்ரீமுக ஆண்டு கார்த்திகை௴ 5-ந் தேதி நடந்த திருமண நன்கொடை வரவு ரூ 1-4-0

---

This Journal is published by T. N. Sabapathi Mudaliar for the South Indian Senguntha Mahajana Sangam, Madras, at 31 Armenian Street, Madras, and is printed by A. Rangaswamy at The Progressive Printers, 2/17, Coral Merchant Street, Madras.